14244

# சிவஞான சித்தியார்

# சுபட்ச வசனம்.

By

Rev. K. S. MURUGESU

N. M. SAVERIMUTTU & SONS
PRINTERS. JAFFNA.
1931

விலை சதம் 50.

# சிவஞான சித்தியார்

# சுபட்ச வசனம்.

க. சா. முருகேசுப் போதகரால்

எழுதப்பட்டு

யாழ்ப்பாணம்

நீ. மூ. சவிரிமுத்து அன்சஸ் அச்சியந்திர சாலையில்

அச்சிடப்பட்டது.

1931

இப்புத்தகம் அச்சிடுவதற்குப் பணவுதவிசெய்த
பிரபுக்களுக்குஞ் சிநேகிதருக்குந் நன்றி கூறுவது
எனது கடமை.

# முகவுரை.

தமிழ்ப் பாஷையிலுள்ள பதினுலு சைவசித்தாந்த சாஸ்திரங்களுள் "சிவஞானபோதம்" "சிவஞானசித்தியார்" "சிவப்பிரகாசம்" என்னும் மூன்றும் மிக விசேஷமான நூல்கள். இவை மூன்றனுள்ளும் சிவஞானசித்தியார் மிகச் சிறந்தது. "பாரினுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதிபோதும்" என்னும் சிவபோகசார நூலுடையார் திருவாக்கு அந்நூலின் சிறப்பிற்குப்போதிய சான்றாகும். அதைக் கற்பவர்கள் சைவசித்தாந்தத்தைப்பற்றிமாத்திரமல்ல மற்றைச் சமயங்களையும்பற்றி அறியத்தக்கவர்களாவார்கள். அதில் "பரபட்சம்" "சுபட்சம்" என இரு பிரிவுகள் உள்ளன. முன்னையதில் "லோகாயதம்" முதலிய புறச்சமயங்கள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் பின்னையதில் சைவசித்தாந்தமே சமயங்களெல்லாவற்றுள்ளும் சிறந்ததாக நாட்டப்பட்டுள்ளது என்றுங் கூறுவர்.

"சிவஞானசித்தியார்" என்னும் இவ்வரிய நூலையியற்றியவர் "சகலாகம பண்டிதர் என்று அழைக்கப்படும் "அருணந்தி சிவாசாரியார்! இவர் ஏறக்குறைய அறுநூற்றைம்பது வருடங்களுக்குமுன் தென்னிந்தியாவிலே "திருத்துறை" என்னும் ஊரில் இருந்தவர்; தமிழ் சமஸ்கிருதம் என்னும் இருபாஷைகளிலும் வல்லவர். சிவஞானபோதத்திற்கு ஆசிரியர் ஆகிய மெய்கண்டதேவாது சிஷருள் ஒருவர். சிவஞானசித்தியார் மிக விரிவும் ஆழமுமானது; செய்யுள்நடையில் எழுதப்பட்டுள்ளது இதற்கு ஆறு உரைகள் இருந்தும், அவற்றின் உதவியைக் கொண்டு இதை விளங்கிக்கொள்வது வெகு பிரயாசம்; ஆதலினல் இதன் சாரத்தை இலகுவான பாஷையில் எழுதுவது பலருக்கு நன்மையாய் இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம் சைவருக்குட் சுவிசேஷ ஊழியஞ் செய்கின்றமையால் சைவசித்தாந்த சாஸ்திரத்தைப்பற்றி நாம் நம்மாலியன்றளவு அறிதல் நமக்கு அதிக பிரயோசனமாயிருக்கும். இச்சிறுபுஸ்தகத்திற்பல வழுக்கள் இருக்குமென நினைக்க இடமுண்டு. அவற்றைக் காண்பவர்கள் அவற்றைக்குறித்து எனக்கு எழுதுமாறு அவர்களைத் தயவாய் வேண்டிக்கொள்ளுகின்றேன். என் வேண்டுகோளின்படி செய்பவர்களுக்கு நான் மிகவுங் கடமைப்பட்டவனாயிருப்பேன்.

# முதலாஞ் சூத்திரம்.

சிவஞானசித்தியாரில் பன்னிரண்டு சூத்திரங்கள் உள்ளன. முதற்சூத்திரத்தில மூன்று விஷயங்கள் காட்டப்படுகின்றன. அவையாவன:- 1. கடவுள் ஒருவருளர். 2. அவர் உலகம் அழிந்தபின் திரும்பவும் அதைச் சிருஷ்டிப்பர். 3. உலகத்தில் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலும் நடைபெறுகின்றன. பிரமா சிருஷ்டிப்பவர்; விஷ்ணு காப்பவர்; சிவன் அழிப்பவர்; அழிப்பவராகிய சிவனே முழுமுதற்கடவுள்; அவர் ஒருவரே அநாதிமலமுத்தர் அல்லது பூரண பரிசுத்தர்.

1. கடவுள் ஒருவர் உளர். உலகத்திலே மேற்சொல்லிய முத்தொழிலும் நடைபெறுகின்றமையால், அவற்றை நடத்துவதற்குச் சர்வஞானம சர்வவல்லமை சர்வவியாபகம் முதலிய திவ்விய இலட்சணங்கள்பொருந்திய கடவுள் ஒருவர் இருத்தல்வேண்டும். உலோகாயதமதத்தினர் நாஸ்திகர்; கடவுளும் ஆன்மாவும் மறுமையும் இல்லையென்று சாதிப்பவர்கள், அவர்கள் கடவுள்ஒருவர் உளர் என்பதற்கு விரோதமாய்ச்செய்யும் ஆட்சேபங்களாவன 1. உலகம் அநாதி ஆகலினல் அதில் முத்தொழில்களும் நடைபெறுகின்றன என்று சொல்வது சரியல்ல. அது ஏதோ ஒரு காலத்தில் தோன்றினது அல்ல; எப்பொழுதும் உள்ள பொருள். அது ஒருபோதும் அழியாது.

2. உலகத்திற்கு தோற்ற நாசஙகள் உண்டென்பதை ஒப்புக்கொண்டாலும், அவை அதற்கு இயல்பென்றே சொல்லவேண்டும்.

3. அவை பிருதுவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களின் செயல்கள். பூதங்கள் நான்கும் அநாதி. வாயு மற்றைப்பூதங்களை நிலைநிறுத்தி தானும் அவற்றின் மத்தியில் நிலைபெறும். தேயு மற்றைப்பூதங்களை அழித்துத் தானும் அழியும்.

அப்பு மற்றைப்பூதங்களைத் தோற்றுவித்துத் தானும் அவற்றின் மத்தியில் தோன்றும். பிருதுவி மற்றைப்பூதங்கள் தத்தமக்குரியபயன்களைக்கொடுக்கச்செய்து தானும் பயன்படும். ஆதலினுல் கடவுள் ஒருவர் உளர் என்பது மிகை.

மறுப்பு. 1. உலகத்திலே முத்தொழில்களும் நடைபெறுகின்றன என்பதற்குப் பிரத்தியட்சமேபோதியபிரமாணம். சரம் அசரம் என்னும் இருவகைப்பொருட்களும் தோன்றிக் கொஞ்சக்காலம் நின்று பின் அழிகின்றன என்பதை நாம் கண்கூடாய்ப் பார்க்கின்றோம்,

2. தோற்றமும் நாசமும் ஒன்றற்கொன்று மாருனகுணங்களாயிருக்கின்றமையினுல், அவை உலகத்திற்கு இயல்பு என்று சொல்வது பொருந்தாது.

3. முத்தொழிலும் அநாதியாய் உள்ள நான்கு பூதங்களின் செயல் என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை. "அப்பு" மற்றைப் பூதங்களைத்தோற்றுவித்து தானும் தோன்றுமென்றும், வாயுமற்றைப்பூதங்களை நிலைநிறுத்திக் தானும் நிலைபெறும் என்றும், சொல்வது யுத்திக்குப்பொருந்தாது. அப்பு, தான் தோன்றுமுன் மற்றைப்பூதங்களைத் தோற்றுவிப்பதும், வாயு தான் நிலைபெறமுன் மற்றைப்பூதங்களை நிலைநிறுத்துவதும் அசாத்தியம் ஆகலினுல், கடவுள் ஒருவர் உளர் என்பதை மறுக்க நியாயமில்லை.

1. புத்தசமயத்தவரில் ஒருசாரார் பொருட்களெல்லாம் முற்கணத்திற் றோன்றிப் பிற்கணத்தி லழிகின்றமையால், ஒருபொருளாயினும் நிலையுள்ளதல்லவென்றும் நிலத்திலிட்ட வித்துக் கெட்டபின் அதிலிருந்து முளை தோன்றுவதுபோல, முற்கணத்திற்றோன்றிய பொருள் கெட்டபின், அதிலிருந்து அதைப்போன்ற வேறொருபொருள் தோன்றுகின்றது என்றும் சொல்லுகின்றனர்,

2. புத்தசமயத்தவரில் இன்னொருசாரார் இதை ஒப்புக்கொள்வதில்லை; ஏனெனில் தோன்றும் பொருள் உள்பொரு

ளாய் அல்லது இல்பொருளாய் இருத்தல் வேண்டும். அஃது உள்பொருளாயின் அது எப்பொழுதும் உள்பொருளாம். அப்படிப்பட்டபொருள் எங்ஙனம் தோன்றும்? அஃது இல்பொருளாயின் அது முயற்கோடுபோல எப்பொழுதும் இல்பொருளாம். ஆகவினுல் தோன்றும் பொருள் எதுவோ அது உள்ளதுமன்றி இல்லதுமன்றி அநிர்வசனமாய் நிற்கும் பொருள் என்பர்.

மறுப்பு. 1. உள்ளதல்லதும் இல்லதல்லதுமான பொருள் ஒன்றுமில்லை. ஒவ்வொருபொருளும உள்பொருளாய் அல்லது இல்பொருளாய் இருத்தல்வேண்டும். உள்பொருளும் தோன்ருது. இல்பொருளும் தோன்ருது. தோன்றும் பொருள் காரியம். அது தனக்குரிய காரணத்தினின்று தோன்றும் மண்ணினின்று கடம்தோன்றுவதன்றிப் படந்தோன்ருது. நூலில் நின்று படந் தோன்றுவதன்றிக் கடம் தோன்ருது. கடம் மண்ணிலும படம் நூலிலும் சூக்குமரூபமாய் அடங்கியுள்ளன. கடம் மண்ணினின்று தானுய்த் தோன்ருது. குயவனது செயலானுறறதோன்றும். அதுபோல உலகமானது தனக்குரிய காரணத்தினின்று தானுய்த் தோன்ருது. கடவுளின் செயலாற்றேன்றும். ஆனபடியால் கடவுள் ஒருவர் உளர் என்பது நிச்சயம்.

சமணசமயத்தவரும் புத்தசமயத்தவரைப்போலவே கடவுளில்லையென்று சாதிப்பவர்கள். அவர்கள் தோன்றும்பொருள் உள்பொருளாயும இல்பொருளாயுமிருக்குமென்பர். இக்கொள்கை சரியல்ல. ஏனெனில் ஒருபொருள் உள்பொருளாயும் இல்பொருளாயுமிருக்காது. ஒருபொருள் உள்பொருளாயும் இல்பொருளாயு மிருக்குமென்பதின் கருத்து அது காரணரூபமாயுண்டு, காரியரூபமாயில்லை என்றும் சொல்வது பொருந்தாது. ஏனெனில் காரணம் உள்பொருளாயின் காரியமும் உள்பொருளாம். காரியம் காரணத்தில் சூக்குமரூபமாயிருந்து, தோன்றும்போது ஒருகருத்தாவின் செயலினுற்றேன்றும்.

1. மீமாம்சகர் நான்குவேதத்தையும் ஏற்றுக்கொண்டாலும், கடவுள் ஒருவர் உண்டென்பதை மறுக்கின்றனர். தோற்றமும் நாசமும் அவயவம் உள்ள தேகத்துக்கன்றி அவயவம்

இல்லாத உலகத்திற்கு இல்லையென்றும், ஆனபடியால் உலகம் அநாதியென்றும் கூறுவர். இதுவும தவறு. தேகத்திற்குப் போலவே உலகத்திற்கும் அவயவம் உண்டு. பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதமும் அதின் அவயவமாம்.

2. தேகத்திற்குப்போலவே உலகத்திற்கும் அவயவம் உண்டென்பது மெய். அது அநாதியென்று வேதங்கூறுவதினால் அது எப்போதாயினும் முழுவதும் அழியும் என்று சொல்வது சரியல்ல, என்றும் அதிற்சிலபாகம் அழியச் சிலபாகம் நிற்குமென்றும் கூறுவர்.

இங்ஙனம் சொல்வதற்கும் ஆகாரமில்லை. ஒரேகாலத்தில் விதைக்கும் விதைகள் ஒருங்கேதோன்றி ஒருங்கே வளர்ந்து ஒருங்கே அழிகின்றன. அதுபோல அழியுங்காலம் வரும்போது உலகம் ஒருங்கே அழியும்.

3, ஆட்சேபம் தோற்ற நாசங்கள் காலத்திலேயே நடைபெறுகின்றமையால் அதுவே கர்த்தா? வேறு கர்த்தா உண்டென்பது மிகை.

மறுப்பு. காலத்திலேயே முத்தொழிலும் நடைபெறுகின்றன என்பது மெய்யாயினும், காலம் அறிவில்லாதபொருளாதலால், அது கடவுளுக்கு ஒரு கருவியன்றி வேறொன்றல்ல.

மீமாம்சகரைப் போல் தார்க்கிகரும் கடவுள் இல்லை என்கின்றனர், அவர்கள் உலகம் அழிந்தபின் பரமாணுக்கள் தாமே உயிர்களின் கன்மத்தினால் ஒருங்குசேர்ந்து அதைத் தோற்றுவிக்குமென்பர்.

மறுப்பு. பரமாணுக்களுக்கும் கன்மத்துக்கும் அறிவின்மையினால், அவைகள் தாமே உலகத்தை, தோற்றுவிக்கும் என்பது பொருந்தாது. மேலும் சர்வசங்கார காலத்தில் சகலமும் அழிவதினால், அணுக்கள் மாத்திரம் எஞ்சி நிற்குமென்று சொல்ல முடியாது.

உலகத்திற்குக் காரணமாகிய அணுக்கள் கெட்டால், அவற்றின் காரியமாகிய உலகம் தோன்றாது என்பதற்கும் ஆதாரமில்லை. அவை மிகச் சிறியன வாயினும், அவற்றிற்கும் அவயவம் உண்டு. அவயவம் உள்ளபடியினாலே அவை ஒன்றோடொன்று சேருகின்றன. அவயவம் இல்லாவிடிற் சேரமாட்டா. உலகத்திற்குக் காரணம் அணுக்களல்ல, மாயை. காரணத்திற் காரியம் சூக்கும ரூபமாய் அடங்கியிருத்தலினால், காரியம் ஆகிய உலகம் அதன் தோற்றத்திற்கு முன் காரணமாகிய மாயையில் அடங்கியிருந்தது. ஆகவே மாயை அநாதியாயின் உலகமும் அநாதி என்று சொல்வது தவறல்ல. கடவுள் அதைக் காலத்திற்குக் காலம் தோற்றுவிக்கின்றமையால், அதற்கு ஆதியுண்டென்றும் நாம் சொல்லலாம்.

சாங்கியரும் கடவுள் இல்லையென்பவர்கள்; அவர்கள் மாயையே உலகத்தைத் தோற்றுவிக்கும் என்றும்; அதினின்றும் உலகத்தைத் தோற்றுவிப்பதற்குக் கடவுள் ஒருவர் அவசியம் இல்லையென்றும் கூறுகின்றனர்.

சாங்கியர் மாயையும் உயிரும் அநாதியென்றும் மாயை உயிரின் சந்நிதியில் தன் காரியத்தைப் பிறப்பிக்கும் என்றும் சொல்வர். இக்கொள்கை ஏற்றற்பால தொன்றல்ல. ஏனெனில் மாயைக்கு அறிவில்லை. உயிரோவெனில் தனுகரணமாதியன இன்றி யாதாயினும் ஒன்றை அறிய அல்லது செய்யத்தக்க ஆற்றலுடையதல்ல, ஆதலால் உயிரின் பொருட்டு மாயையினின்று தனுகரணமாதியவற்றைத் தோற்றுவிக்கக் கடவுள் ஒருவர் உளர் என்பது தானேபோதரும்.

ஒவ்வொரு காரியத்திற்கும் மூன்று வகையான காரணமுண்டு. அவையாவன;— 1. முதற்காரணம். 2. துணைக்காரணம். 3. நிமித்தகாரணம். குடத்திற்கு முதற்காரணம் மண். துணைக்காரணம் தண்டசக்கரம் நிமித்தகாரணம் குயவன். அதுபோல உலகத்திற்கு முதற் காரணம் மாயை, துணைக்காரணம் சிவசத்தி, நிமித்த காரணம் சிவன்.

சுத்தம் சுத்தா சுத்தம் அசுத்தம் எனப் பிரபஞ்சம் மூவகைப்படும். இவை மூன்றற்கும் முறையே சுத்த மாயையும் அசுத்த மாயையும் பிரகிருதி மாயையும் முதற் காரணமாம். சுத்த மாயையானது ஆணவ மலத்துடனும் கன்ம மலத்துடனும் சேராது மற்றை யிரண்டு மாயைகளையும் வியாபித்து அவற்றிற்கு மேலாய் நிலைபெறும். அசுத்த மாயை யானது அம்மலங்களுடன் கலந்திருக்கும். அசுத்த மாயையின் விகாரமே பிரகிருதி மாயையன்றி வேறொன்றல்ல.

சுத்த மாயையினின்றும் தோன்றும் பொருட்கள் அல்லது தத்துவங்கள் 1. வைகரி 2. மத்திமை 3. பைசந்தி 4. சூக்குமை என்னும் நான்கு வாக்குகள்.

2. மந்திரேசுரர் மந்திர மகேசுரர் அணு சதாசிவர் முதலிய தேவர்களுக்குரிய சுத்த அத்துவாக்கள். அவையாவன;— 1. வன்னம் அல்லது எழுத்து 2. பதம் அல்லது சொல் 3. மந்திரம் 4. புவனம் அல்லது உலகம் 5. தத்துவம் 6. கலை என்னும் ஆறுமாம்.

3. சிவம் சத்தி சதாசிவம் ஈசுரம் சுத்தவித்தை என்னும் ஐந்து சிவதத்துவங்கள் அல்லது சுத்த தத்துவங்கள்.

1. வைகரியாவது பேசுபவன் செவிக்கும் கேட்பவன் செவிக்கும் கேட்கப்பட்டு, அவன் நினைத்த பொருளைச் சொல்லுஞ் சொல்.

2. மத்திமையாவது மெல்லிய ஓசையாய்க் கண்டத்திற் தொனிக்கும் சொல்.

3. பைசந்தி யாவது மனதில் பிறக்குஞ் சொல்.

4. சூக்குமை யாவது மற்றைய மூன்று வாக்குகளுக்கும் காரணமாகிய சொல். அவை இதின் விகாரமேயன்றி வேறல்ல. அவற்றிற்கு அழிவுண்டு. இதோ எனில் நித்தியமானது. சத்தப் பிரமவாதிகள் மேற்சொல்லிய நான்கு வாக்குகளையும் பிரமம் என்பர். சைவ சித்தாந்திகளோவெனில், அவற்றைச் சுத்த மாயாகாரியங்கள் என்பர். அவை ஆன்மாக்களுக்கு அறிவுண்டா

க்கு வதற்கு இன்றியமையாச் சிறப்புடையன. அங்ஙனமாயினும் அவை முத்திக்குத் தடையாதலால், அவையும் ஆன்மாவை விட்டு நீங்கல் வேண்டும். அவை ஆன்மாவை விட்டு நீங்கச் சிவஞானம் பிறக்கில் அதற்கு (ஆன்மாவுக்கு) முத்தியுண்டாம்.

அருவமான மாயையில் நின்று உருவமான பிரபஞ்சம் தோன்றிற்று. சுத்தமாயையிற் கிருத்தியம் சிவனால் நேரே செய்யப்படும். அசுத்தமாயை பிரகிருதி மாயை என்பவற்றிற் கிருத்தியம் முறையே அநந்தர் சீகண்ட உருத்திரர் என்பவர்கள் மூலமாய்ச் செய்யப்படும். சிவன் பிரபஞ்சத்தினுடன் எள்ளுக்குள் எண்ணெய்போல உள்ளும் புறம்பும் வியாபித்திருப்பதினால், அவர் அதனுடன் ஒன்றாயும், அவர் சித்தும் அது அசித்தும் ஆதலால் வேறாயும் அதை நடத்துவதினால் உடனாயும் நிற்பர்.

அருவமாயிருப்பதெதுவோ அது அவிகாரமாயுமிருக்குமென்றும், அருவமும் அவிகாரமுமான மாயையில் நின்று உருவமும் விகாரமுமான பிரபஞ்சம் தோன்றாது என்றும் மாயாவாதிகள் கூறுவர். அவர் கூறுமிவ்வாட்சேபம் அவர் கொள்கையுடன் மாறுபடுகின்றது. எங்ஙனமெனில், அவர் அருவமும் அவிகாரமுமாகிய ஆகாயத்தினின்று உருவமும் விகாரமுமான வாயு முதலிய பூதங்களும் முகில்களும் மின்னல்களும் இடிகளும் இன்னும் இவைபோல்வன-பிறவும் தோன்றும் என்பர்.

---

## II.

குயவனானவன் குடம் முதலியவற்றை வனையும்போது நிலத்திலே நிற்றல் வேண்டும். சிவன் பிரபஞ்சத்தைச் சிருட்டிக்கும் போது ஏதோ ஒன்றில் நின்று சிருஷ்டித்தல் வேண்டும். அப்போது அவர் நிற்றற்குரிய இடம் எது?

மறுமொழி:- சிவன் வாக்கு மனாதீதராதலால் அவருக்கு நிற்க இடம் அவசியமில்லை. பிரபஞ்சத்தில் காலத்தினால் முத்தொழிலும் நடைபெறுகின்றன என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்ளினும், அது நிற்கும் நிலையைப்பற்றி ஒருவரும் அறியார்.

அதுபோல் சிவன் சிருஷ்டிக்கும்போது நிற்கும் நிலையை அறிய நம்மால் ஆகாது. காலம் எல்லாக்காரியங்களுக்கும்தான் ஆதாரமாயும், தனக்கோர் ஆதாரமின்றியும் நிற்றல்போலச்சிவசத்தியும் உலகத்துக்கு ஆதாரமாயும் தனக்கோராதாரமின்றியும் நின்று முத்தொழிலையும் நடத்தும். சிவன் வாக்கு மனாதீதராயிருப்பது போல, அவரது சத்தியும் வாக்குமனாதீதமானது.

காலமானது அதின் தொழில் வேறுபாட்டால், செல்காலம் நிகழ்காலம் வருங்காலம் முதலியவைகளை அடைவதுபோல, சிவனும் தமது தொழில் வேறுபாட்டால் பலவகையான விகாரங்கள் அடைவர் என்றல்லவா சொல்லல் வேண்டும்? அங்ஙனம் சொல்வது அவரது பெருந்தகைமைக்கு இழுக்காகும்.

விடை:- ஆன்மாவிற்கு சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் அவஸ்தைகள் நாள்தோறும் உண்டாவதுபோல், சிவனுக்கும் இலயம், போகம் அதிகாரம் என்னும் அவஸ்தைகள் உண்டாகின்றன. அவஸ்தைகளினால் ஆன்மா தடக்குறுமாறு போல சிவனுந் தமது அவஸ்தைகளினால் தடக்குறுகின்றனர். வாஸ்தவத்தில் மேற்சொல்லிய அவஸ்தைகளினால் அவர் தடக்குறுகின்றிலர். எங்ஙனமெனில் ஒருவன் கற்ற கல்வியானது அவனுடைய ஆன்மாவிலடங்கிப் பின் தோன்றும்போது ஆன்மா தடக்குறுதிருப்பதுபோல், சிவனும் தமக்குரிய அவஸ்தைகளினால் தடக்குறார். இவ்வவஸ்தைகள் காரணமாய் சிவன், இலயசிவன், போகசிவன் அதிகாரசிவனென்ன அழைக்கப்படுவர். சங்காரஞ்செய்கையில் இலயசிவனென்றும், போகம் அனுபவிக்கையில் போக சிவனென்றும் அதிகாரம் செலுத்துகையில் அதிகாரசிவனென்றும் அழைக்கப்படுவர். போகசிவனெனினும் சதாசிவனெனினும் ஒக்கும். அநந்தரும் சீகண்ட உருத்திரரும் அதிகாரசிவன்களெனப்படுவர்.

ஒடுங்கிய உலகம் திரும்பவும் தோன்றுவதற்குக் காரணம் யாது? உலகம் ஒடுங்கும்போது உயிர்கள் யாவும் முத்தியடையமாட்டா. முத்தியடையாத உயிர்கள் முத்தியடைவதற்கு மலபரிபாகம் இன்றியமையாச் சிறப்புடையது. அப்பரிபாகத்தின்

பொருட்டு ஒடுங்கிய உலகம் திரும்பவும் தோற்றுதல் அவசியம என்பது வெளிப்படை. அங்ஙனமாயின், உலகம் ஏன் ஒடுங்க வேண்டும்? ஒடுங்காது எப்பொழுதும் இருக்கலாமே. விடை:- உலகம் ஒடுங்காவிடில் பிறந்திறந்துழல்வதினு லுண்டாகுங் இளைப்பு உயிர்களைவிட்டு நீங்காது. பகற்காலத்திலே பலவகையான வேலை செய்வதினுல் உண்டாகும் இளைப்பு இராக்காலத்திலே நித்திரை செய்வதினுல் நீங்குவதுபோல, உலகத்திலே பிறந்திறந்துழல்வதினுலுண்டாகும் இளைப்பு உலகம் நெடுங்காலம ஒடுங்கியிருப்பதினுல் நீங்கும். பகலும் இரவும் நமக்கு அவசியமாய் இருத்தல்போல, உலகத்தோற்றமும் ஒடுக்கமும் நமக்கு அவசியம். உலகமானது காலத்துக்குக்காலம அநாதியே ஒடுங்கியும் தோன்றியும் வருகின்றது. அது எத்தனைமுறை ஒடுங்கியதென்றும், எத்தனைமுறை தோன்றியதென்றும் சொல்லமுடியாது.

முத்தொழிலும் பெரும்பாரம் என்பதை யார்மறுக்கக்கூடும்? சிவன் ஒருவரே அவற்றையெல்லாம் செய்வாராயின், அவர் பாரமெய்தி விகாரியாவார் என்னும் குற்றம் அவர்மேற்சாருமல்லவா? விடை:- முத்தொழில் அவருக்குப்பாரமல்ல, ஏனெனில் அவர் சர்வவல்லமையுடையவர். எத்தொழிலும் அவர் நினைத்தவுடன் நடைபெறும். நாம் ஒருகாரியம் செய்யவேணடுமெனில் நாம் அதை மனம், புத்தி, சித்தம, அகங்காரமென்னும் அந்தக்கரணங்கள்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும ஐம்பொறிகள்; கை, கால் முதலிய உறுப்புக்கள் என்னும் கருவிகளினுல் செய்தல் வேண்டும். சிவன் சுத்தசங்கற்பர் அவர் தமது கிருத்தியங்கள் அனைத்தையும்சங்கற்பத்தினுல் செய்கின்றவரேயன்றி கரணங்களினுல செய்கின்றவரல்லர். உலகம தோன்றக்கடவது என்று அவர் நினைத்தவுடன் உலகம் தோன்றும். அது அழியக்கடவது என்று நினைத்தவுடன் அது அழியும். சூரியனது சந்நிதியில் முத்தொழில் நடைபெறுகின்றனவென்று நாம அறிவோம். எங்ஙனமெனில், தாமரைப்பூக்கள் மலருகின்றன. காந்தம் அக்கினியைக் காலுகின்றது. நீர் பூமியில் வற்றுகின்றது. அப்படியிருந்தாலும் சூரியனுக்கு அவற்றால் எவ்விதமான ஆயாசமும் உண்டாவ

தில்லை. அதுபோலச் சிவசந்நிதியில முத்தொழிலும் நடைபெறி னும் அவற்றால் அவருக்கு ஒருபொழுதும் ஆயாசம் உண்டா காது. இதிகாச புராணங்கள்ல் படைத்தல், காத்தல், அழித்தல் என்பன. முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்பவர் களுக்குரியனவென்று சொல்லியிருக்க, இவை மூன்றும் சிவன் ஒருவருக்கே உரியனவென்று சொல்வது எங்ஙனம்பொருந்தும்? மும்மூர்த்திகள் தாம் செய்யுந்தொழில்களுக்கு சுதந்திரர் அல் லர். அவர் புண்ணிய மேலீட்டினால் அத்தொழில்களையும் அவற் றைச்செய்தற்குரிய அதிகாரசத்தியையும் பெற்றவர்கள். சிவன் ஒருவரே முத்தொழிலுக்கும் சுதந்திரர், சர்வசங்காரகாலத்தில் மும்மூர்த்திகளும் அழிவெய்துவர். அவர் ஒருவரே எஞ்சிநிற் பர். அவர்கள் அழியாதிருந்து தத்தம் தொழில்களைச் செய் வார்களாயின், சங்காரகிருத்தியம் நடைபெறாது. ஆதலால சிவன் ஒருவருக்கே அவை உரியன என்பது சத்தியம்.

சிவன் முத்தொழிலும் செய்வதற்குக்காரணம் என்ன? சிலர் அவருக்கு அவைலீலை அல்லது திருவிளையாட்டு என்பர். வேறுசிலர் அவற்றிற்கு நோக்கம் பெத்தகாலத்தில் ஆன்மாக் களுக்குச் சுவர்க்கம் முதலிய போகங்களும் பதமுத்திகளும், முத்திகாலத்தில் வீடுபேறும் கொடுத்தல் என்பர், இருசாராருஞ் சொல்வது சரிதான். பிள்ளைகளுக்கு விளையாட்டு இலகுவாய் இருத்தல் போலச் சிவனுக்கு முத்தொழிலும் இலகுவா யிருக் கும். அவருடைய தொழில் அனைத்திற்கும் நோக்கம், உயிர் களின் நன்மையே என்பதற்கு எள்ளளவும் ஆட்சேபம் இல்லை. சங்காரம் உயிர்களின் இளைப்பைத் தீர்க்கவும், சிருஷ்டி மலபரி பாகம் வருவித்து கன்மத்தை நீக்கவும், திதி உயிர்களின் கன் மப்பயனை நுகருவிக்கவும்; திரோபவம் இருவினையொப்பு வரு வித்து மலத்தை முதிர்விக்கவும், அனுக்கிரகம் பாசபந்தத்தை நீக்கவும் செய்யப்படுகின்றன- ஆகவே பஞ்ச கிருத்தியங்களுக் கும் முக்கிய நோக்கம் அருளே என்பது உள்ளங்கை நெல்லி க்கனி போற் றெள்ளிதில் உணரப்படும். சைவ நூல்களிற் சில விடங்களில் தொழில்கள் மூன்றென்றும், வேறு சிலவிடங்க ளில் ஐந்தென்றும் சொல்லப் படுவதற்கு நியாய மென்னவெனில்

திரோபவமும் அனுக்கிரகமும் முறையே திதியிலும் சங்காரத்திலும் அடங்குவதினால், முத்தொழில் ஐந்தொழிலின் அடக்கம் என்பதாம். ஐந்தொழில் செய்யுஞ்சிவனுக்கு வடிவம் அல்லது தேகம் வேண்டும். அவரது வடிவம் என்ன? அவரது வடிவம் அருவம், உருவம், உருவாருவம் என்னும் மூன்றுமாம். ஆட்சேபம் சிவனது வடிவம் உருவம் என்னில் உருவம் எல்லாம் ஒரே இயல்புடையன ஆகலினால், அவர் நம்மைப்போல் பரதந்திரராய் அல்லது நாம் அவரைப்போல் சுதந்திரராய் இருக்கவேண்டும், சமாதானம் இங்ஙனம் சொல்வது சரியல்ல. நாம் பாசபந்தமுள்ள பசுக்கள். அற்ப ஞானத்தொழில் முதன்மையுடையவர்கள். சிவனேவெனில், மலநீங்கிய ஆன்மாக்களின் அறிவினின்றுணர்த்தும் பசுபதி. சர்வஞானம் சர்வவல்லமை சர்வமுதன்மை ஆதியாம் இவ்வியகுணங்களுடையவர். ஆதலால் நமது உருவடிவத்திற்கும், அவரது உருவடிவத்திற்கும் உள்ள வித்தியாசம் மிகப் பெரிது. இவ்வித்தியாசத்திற்கு ஏற்ப, நமக்கு ஏகதேச அறிவையுண்டாக்கும் மாயை உருவமும், அவருக்கு மலம்நீங்கிய உயிருக்கு வியாபக அறிவையுண்டாக்கும் சத்தியுருவமும் உரியன. ஆகவே அவருக்கு உருவம் உண்டாயின் நம்மைப்போல் அவர் பரதந்திரராய், அல்லது அவரைப்போல் நாம் சுதந்திரராய் இருத்தல் வேண்டுமென்று சொல்வது சிறிதும் பொருந்தாது.

ஆட்சேபம். உருவம் உள்ளது எதுவோ அது அளவுக்குட்பட்டது. அளவுக்குட்பட்ட பொருளுக்கழிவுண்டாகலான், சிவனது உருவடிவம் சத்தியே என்றாலும் அது அழிவெய்தும். அழிவெய்தல் சிவசத்திக்குப் பொருந்தாமையினால், அவருக்குரிய வடிவம் அரு என்று சொல்வதே சரி. சமாதானம் இதுவுஞ்சரியன்று. சிவன் ஆறத்துவாவையும் கடந்து இருக்கின்றமையினால், அவரது வடிவம் அருவென்று வரையறுத்துச்சொல்ல முடியாது. ஆறத்துவாவுக்குட்பட்ட பொருளியாவும் அரு, உரு அருவுரு என்னும் மூவகுப்புள் அடங்கும். அருவப்பொருள் உருவத்தினியல்புடையதாயும், உருவப்பொருள் அருவத்தினியல்புடையதாயும் இருக்கமாட்டாமையினால், அவர் அருவென்று நாம் வரையறுத்துக்கூறினால் மற்றிருவகையியல்பும் அவருக்கு

இல்லையென்று சொல்லவேண்டும். அவர் பசுபாசம் என்னும் பொருட்களின் இயல்புடையவரல்லர், ஆதியந்தமில்லாதவர். ஆதலால் அவர் அரு அல்லது உரு அல்லது அருவுரு என்று வரையறுத்துச்சொல்வது அவரது பெருந்தகைமைக்குச் சிறிதும் பொருந்தாது. அவர் சுதந்திரர் முற்றறிவும் வரம்பில் ஆற்றலுமுடையவர். ஆதலால் அவர் தமக்கு வேண்டிய ஒருதிருமேனியைத் தமதாக்கிக்கொண்டருள்வர். அவர் விச்சுவாதிகர். விச்சுவகாரணர், விச்சுவத்திற்கந்தரியாமி விச்சுவரூபி என்று வேதங்கள் கூறுகின்றன. பிரம விஷ்ணுக்களிருவரும். அடிமுடிதேடியறியக்கூடாத அற்புதவடிவம் கொண்டனரெனறும் மும்மூர்த்திகளும் அவருடைய உறுப்பிற் றோன்றினரென்றும்; அவருடைய உருவத்தில் தோன்றியவாறே பொருட்கள் உலகத்திலும் தோன்றினவென்றும்; அவரது வடிவத்திலொன்று அர்த்தநாரீசுரவடிவம் என்றும் புராணங்கள் கூறுகின்றன. மேலும் அவர்கொண்ட திருமேனிகளிற் சில போகவடிவம் என்றும், சில கோரவடிவம் என்றும், சில யோகவடிவம் என்றும் நாம் அறிவோம். அத்திருமேனிகள் உயிர்களுக்கு முறையே போகமும் வினைநீக்கமும் முத்தியும் அளித்தற்பொருட்டு அவராற் கொள்ளப்பட்டன. அத்திருமேனிகள் ஒன்றற்கொன்று மாறான குணங்களுடையனவாயிருப்பதினால், அவையெல்லாம் உயிர்களின்பொருட்டுக் கொண்டருளப்பட்டன என்பது வெளிப்படை. பார்வதி திருக்கண் புதைத்த திருவிளையாட்டு இதற்கு நல்ல திருஷ்டாந்தம். ஒருமுறை அவர் தமது நாயகனது வலக்கண்ணையும் இடக்கண்ணையும் வேடிக்கைக்காய்த் தமது திருக்கரங்களினால் பொத்தியருளினர். உடனே உலகம் முழுவதும் இருளில் அமிழ்ந்தினமையால், உயிர்களனைத்தும் தத்தளித்தன. பரமசிவன் உயிர்களில் இரக்கங்கொண்டு தமது நெற்றிக்கண்ணைத் திறந்து வெளிச்சங்கொடுத்து அவற்றையெல்லாம் காத்தருளினர். இத்திருவிளையாட்டிலிருந்து நாம் படிக்கவேண்டிய சத்தியங்களுள் ஒன்று என்னவெனில் சூரியன், சந்திரன், அக்கினி யென்னும் முச்சுடரும் முறையே அவரது வலஇடநெற்றிக்கண்கள் என்பதாம். உயிர்களது போகானுபவத்திற்கும் அவரே காரணர் என்பது அவர் யோகஞ்செய்துகொண்டிருந்தபோது உலகத்தில் நிகழ்ந்த சம்பவம் போதிய சான்றாகும்.

அவர் உருவத்திருமேனி கொண்டதினாலாய பயனென்ன? அவர் அத்திருமேனிகொள்ளாதிருந்தால் வேதாகமங்களும் குருபரம்பரையும் உண்டாயிருக்கமாட்டா. வேதாகமங்கள் மூலமாயன்றி பசு, பதி, பாசம் என்னும் முப்பொருளது உண்மையியல்பையுணர்ந்து நாம் முத்தியடைதல் கூடாது. முத்திக்கு அவற்றினுண்மையறிவு அத்தியாவசியம். பிரளயாகலர் சகலர் என்னும் பசுவர்க்கம் இரண்டற்கும் சிவன் முறையே தேவகுருவாய் முன்னின்றும் மானுடகுருவை அதிஷ்டித்தும் உபதேசித்தாலன்றி அவற்றிற்கு முத்திகைகூடாது. சிவனது உருவத்திருதிருமேனிகளின் வடிவம் அருள். அவற்றின் தொழில்களும் குணங்களும் கரணங்களும் அருள்; கை கால் முதலிய உறுப்புக்களும் புவனபோகங்களும் அருள்; உயிர்களின் நிமித்தம் அவற்றையவர் கொண்டருளினர். மேலும் அவையில்லாவிடில் பஞ்சகிருத்தியங்கள் நடைபெறமாட்டா. உலகமும் அதிலுள்ள சராசரங்களும் அவருடைய உறுப்புகளில் நின்றே தோன்றவேண்டும். திதிக்கு அர்த்தநாரீசுரவடிவம் வேண்டும் திரோபவத்திற்கும் அநுக்கிரகத்திற்கும் முறையே ஊனநடனமியற்றலும் யோகஞ்செய்தலும் வேண்டும். அவரது மூன்றுவகையான திருமேனியினது நோக்கம் உயிர்களைப் பிறவிப்பெருங்கடலினின்று தூக்கியெடுத்து முத்திக்கரையில் சேர்த்தலாம்.

சிவனுக்கு மேற்சொல்லிய மூவகைத்திருமேனியன்றி வேறும் மூவகைத்திருமேனிகளுண்டு. அவையாவன! அத்துவத்திருமேனி, மந்திரத்திருமேனி, பஞ்சமந்திரத்திருமேனி என்பன, அத்துவாக்களுக்கும் அவரது திரோதானசத்திக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதினால் அவையும் அவருக்குத் திருமேனியென்று உபசாரமாய்க் கூறப்படுகின்றன. ஆறத்துவாக்களுள் மந்திரவடிவம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. ஏனெனில் சிவசத்தி மந்திரத்தைச் சுத்தமாயையில் நின்றும் தோற்றுவித்து உயிர்களுக்குப் போகமோட்சங்கள் கொடுத்தருளும்பொருட்டு அவற்றை அதிஷ்டிக்கும். மந்திரவடிவத்திலும் பஞ்சமந்திரவடிவம் மற்றெல்லா மந்திரங்களுக்கும் முன்தோன்றினமையால் மிகச்சிறப்பானது.

சிவனுக்குமாத்திரமன்றிப் பஞ்சகர்த்தாக்களுக்கும் அத்துவ வடிவம் மந்திரவடிவம் உண்டென்று சிவாகமங்கள் கூறினும், அவர்கள் சிவனுக்கு ஒப்பானவர்களல்லர். செனனி முதலிய சிவசத்திகளுள் ஒவ்வொன்று பஞ்சகர்த்தாக்களிலும் பதிந்து நின்று அவர்கள் கிருத்தியத்தையியற்றுவிக்கிறபடியினால், அவர்களுக்கும் இவ்வடிவங்கள உண்டென்று சொல்லப்படுகின்றது. பஞ்சகிருத்தியங்களையும் பஞ்சகர்த்தாக்கள் செய்யினும், மந்திரி முதலாயினோர், அரசனையின்றி ஒன்றும் செய்யும் ஆற்றல் இலராயிருத்தல்போல, அவர்களும் சிவனையின்றி ஒன்றுஞ் செய்யும் ஆற்றலிலர்.

சிவசத்தி ஒன்றே, அரசன் சத்தி ஒன்றே மந்திரிமார் படைத்தலைவர் காவற்காரர் முதலியோரினின்று செய்யும் காரியவேறுபாட்டால், பல வேறுவகைப்படுதல்போலச் சிவசத்தி ஒன்றே பிரமா முதலிய கர்த்தாக்களினின்று செய்யும் காரியவேறுபாட்டால் பலவேறுவகைப்படும். பூரணஞானமே சிவசத்தியின் சொரூபமாம். அதின் ஒருகூறு, திரோதானசத்தி எனப்படும். திரோதானசத்தியானது: இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தியென மூவகைப்படும். இச்சத்தி மூன்றும் முறையே சிவனுக்கு உயிர்களில் அன்பையும் அவற்றை முத்தியிற்சேர்க்கும் உபாயத்தையும் உலகத்தைச் சிருஷ்டிக்குஞ்செயலையும் உண்டாக்கும். ஆகவே சிவசத்தியொன்றே பராசத்தி திரோதானசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தியென ஐவகைப்படும். பராசத்தி உயிர்களின் அறிவை மறைக்காது, திரோதானசத்தியோவெனில் அதை மறைக்கும். சிவனைப்போலவே சீவனுக்கும் மேற்சொல்லிய சத்திகள் மூன்றும் உண்டாயினும், அது ஆணவமலத்தினால் மறைக்கப்பட்டிருப்பதினால், அது சிவனது சகாயமின்றி எதையும் அறிய அல்லது செய்யத்தக்க ஆற்றலுடையதல்ல. ஆதலால் அது போகமோட்சங்களை அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ளல் வேண்டும். முதல்வன் சிவன் சத்தி சதாசிவம் மகேசுரம் சுத்தவித்தை என்னும் பஞ்சபேதங்கள் அடைவர். இப்பேதங்கள் எல்லாவற்றிற்கும் இச்சாசத்தி பொதுவாகும். மற்றையிருசத்திகளுள் சிவத்தில் ஞானசத்தியும் சத்தியில் கிரியாசத்தியும் சதாசி

வத்தில் இவையிரண்டும் சமமாயும், மகேசுரத்தில் கிரியாசத்தி மிகியும் ஞானசத்தி குறைந்தும், சுத்தவித்தையில் ஞானசத்தி மிகியும் கிரியாசத்தி குறைந்தும் பொருந்தும். இப்பேதங்களுக்குரிய தத்துவங்கள் ஒவ்வொன்றற்கும் அவ்வப்பெயரே உரியது. ஒருநாடகத்தில் ஒருவனே பலகூத்தும் ஆடுவதுபோலச் சிவன் ஒருவரே இப்பேதங்கள் எல்லாம் அடைகின்றனர். இவை அவருடைய சத்தியில் மாத்திரம் காணப்படுகின்றமையால் அவருடைய உண்மையான தன்மை ஒருபோதும் விகாரமடையாது. அவர் நிர் விகாரி. பளிங்கு தனக்குப்பக்கத்திலிருக்கும் பொருளின் நிறமுடையதாய்த் தோன்றுமாறுபோலச் சிவனுந் தமது சத்தியில் உண்டாகும் பேதம் எல்லாம் தாமாகத்தோன்றுவார். அவர் தோன்றுபபோதெல்லாம் சத்தியினிடம் தோன்றுவதன்றித் தனிமையாய்த் தோன்றுபவரல்லர். அவர் சிவம், சத்தியென்னும் இருபேதங்கொண்டதினாலேயே உயிர்கள் ஆண் பெண்ணாகப்பிறந்து கூடிக்களித்து மகிழ்ந்து சந்ததியுண்டாக்குகின்றன. சிவலிங்கமானது இவ்வுண்மைக்கு அறிகுறியாம். சிவன் இவ்விருவடிவமும் கொள்ளாவிடில் உலகம் ஒரு நிமிஷமாயினும் நிலைநிற்கமாட்டாது.

சிவன் அளவைக்கெட்டாதவராதலினால், அவரை நாம் அரு அல்லது உரு அல்லது அருஉரு என்று சொல்லமுடியாது. வாஸ்தவத்தில் அவர் சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களையும் தவம் யோகம் போகம் முதலிய செயல்களையும் செய்கின்றவரல்லர், சிவசத்தியின் சகாயத்தால் பஞ்சகர்த்தாக்கள் தத்தம் கிருத்தியம் செய்கின்றனர், தவம் யோகம் போகம முதலிய செயல்கள் செய்தவர் ஸ்ரீகண்ட உருத்திரர். அவரும் அவற்றை உயிர்களின் பொருட்டன்றித் தம்பொருட்டுச் செய்தவரல்லர். அவரே சைவ சித்தாந்திகள் வழிபடுங் கடவுள். அவர்கள் அவரைப் பரமசிவனுடன் ஐக்கியப்படுத்தி வழிபடுகின்றனர். அவர் பிரம விட்டுணுக்களில் அதிகம் மேம்பாடுடையவர். அவர் ஏவுதற்கருத்தா, இவர்கள் இயற்றுதற் கருத்தாக்கள். வைரவர், வீரபத்திரர், விநாயகர், சுப்பிரமணியர் என்பவர்கள் அவரது குமாரர். அவரது குமாரர் எல்லாருள்ளும், சுப்பிரமணியரையே சைவர் மிகுந்த பக்தி

யுடன் வழிபடுகின்றனர். கதிர்காமம், பழனி, திருச்செந்தூர் முதலியன பேர்பெற்ற சுப்பிரமணிய ஸ்தலங்கள், அத்தலங்களுக்கு விசேஷ உற்சவகாலங்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள நானுபாகங்களிலுமிருந்து இலட்சக்கணக்கானோர் போவது வழக்கம். கலியுகத்தில் சுப்பிரமணியருக்கு மற்றைத் தெய்வங்களிலும் அதிக கலையுண்டென்றும் ஆதலாலவரே கலியுகவரதரென்றும் சைவர் கூறுகின்றனர்.

# இரண்டாம் சூத்திரம்.

இச்சூத்திரம் மறுபிறப்பையும் உலகத்தோற்ற ஒடுக்கங்களையும்பற்றி கூறுகின்றது. சிவன் உயிர்களுடன உடலுயிர் போற்கலந்து அத்துவிதமாய் நிற்கையில் சத்தியென்றும், அவற்றைத் தத்தம் இருவினைக்கேற்பத் தமது பஞ்சகிருத்தியங்களுக்குட்படுத்துவதினால் பதியென்றும், அவர் தனித்துப்பூரணஞானமாய் நிற்கையில சிவமென்றும் அழைக்கப்படுவர்.

1. சிவன் உயிர்களுடன் உடல்உயிர்போற்கலந்து அத்துவிதமாய் நிற்கையில் சத்தியெனப்படுவர். வேதங்கள் ஆன்மா ஒன்றென்று கூற இங்கே ஆன்மாக்கள் பல என்று சொல்வதற்குக் காரணம் யாது? வேதங்கள் ஆன்மா ஒன்றென்று கூறுவது மெய். அங்ஙனம் கூறும்போது அவற்றின் கருத்து என்னவெனில் பரமான்மா அல்லது கடவுள் ஒன்று என்பதாம். பரமான்மா ஒன்று சீவான்மா பல. அகரம் ஏனைய எழுத்துக்களுடன் கலந்துநிற்குமாறு பரமான்மா சீவான்மாவுடன் கலந்து நிற்பர். அகரமின்றி அவையியங்காவாறுபோல பரமான்மாவின்றிச் சீவான்மாக்கள் இயங்கா. பரமான்மாவிற்கும் சீவான்மாவிற்கும் உள்ள சம்பந்தத்தைக் குறிப்பதற்கு அத்துவிதம் என்னும் மொழித்தொடர், வேதங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பரமான்மாவும் சீவான்மாவும் அத்துவிதமாய் இருப்பதினால், அவையிரண்டும் ஒன்றென்று வேதாந்திகள் கூறுவர். "அகம் பிர

மாஸ்மி" (நான் பிரமமாயிருக்கிறேன்) "தத்துவமஸி" (அது நீயாயிருக்கிறாய்) முதலியன வேதாந்த மகாவாக்கியங்கள். சித்தாந்திகள் அவையிரண்டும் வேறென்றும், வேறாயினும் அவை பரமான்மாவிது சீவான்மாவிது என்று பிரிக்கப்படத்தக்க நிலைமையில் நிற்பன அல்ல என்றும், இந்நிலையை அத்துவிதம் என்றும் கூறி, உடலையும் உயிரையும் இதற்குத் திருஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டுவர். உடலும் உயிரும் வேறாயினும், நாம் அவற்றை உடலிது உயிரிதுவென்று பிரிக்கமுடியாவாறுபோல், பரமான்மாவும் சீவான்மாவும் வேறாயினும், நாம அவற்றைப் பரமான்மாவிது சீவான்மாவிது என்று பிரிக்கமுடியாது என்பர்.

II. உயிர்கள் தத்தம் இருவினைக்கேற்ப சிவனது பஞ்சகிருத்தியங்களுக்குட்பட்டுச் செல்லும். வேறொருவிதமாய்ச் சொல்லுகில் உயிர்கள் தம் இருவினைக்கேற்பத் திரும்பத்திரும்பப் பிறந்திறந்துழலும். சுருக்கிச்சொல்லுகில் மறுபிறப்புண்டு. உயிர்கள் முற்பிறப்பிற்செய்த இருவினைப்பயன்களை இப்பிறப்பில் அனுபவிக்கையில், மேலும் இருவினைகள் அவற்றிற்கு ஏறுவதினால், அவை மீளமீளப் பிறக்கவும் இறக்கவும் வேண்டும். சிவன் அரசனும் வைத்தியனும்போல வினைப்பயன்களை அவற்றிற்குத் தமது ஆணையாற்கூட்டுவர். அவர் அங்ஙனம் செய்யாவிடில் அப்பயன்கள்வந்து அவற்றைச்சேரமாட்டா.

உலோகாயதாத ஆட்சேபம்: உலோகாயதர் கடவுளும் ஆன்மாவும் இல்லையென்று சாதிப்பவர். அவர்கள் இன்பதுன்பங்கள் உடலுக்கு இயல்பாதலினால், அவற்றிற்குப் "பழவினை" காரணமல்லவென்று கூறுவர்.

சமாதானம்: இன்பதுன்பங்கள் தமக்குள் மாறுபட்ட குணங்களாகையால், அவற்றிற்குக் காரணம் வேண்டும். அவற்றிற்குப் பழவினையே காரணமன்றி வேறல்ல.

ஆட்சேபம்: அவற்றிற்குப் பழவினைகாரணமென்பது பொருந்தாது. நீர் பூவின் சேர்க்கையால் வாசத்தையும் தீயின் சேர்க்கையால் வெப்பத்தையுமடைதலதற்கியல்பு. அதுபோல உடலுக்கு இன்பதுன்பங்கள் உண்டாதலதற்கியல்பு.

சமாதானம்: இவ்வுபமானமே பழவினையுண்டென்பதற்கு நல்ல திருஷ்டாந்தம். நீருக்கு வாசமும் வெம்மையும் செயற்கையால் உளவாவனவன்றி, இயற்கையானுளவானவல்ல, இன்ப துன்பங்கள் சடத்திற்கல்லச் சித்துக்கே உரியன; நீரினுண்டாகும் வாசத்திற்கும் வெப்பத்திற்கும் முறையே பூவுந்தீயுங்காரணமாம். அவை வெவ்வேறுகாரணமாய் இருத்தல்போல ஆன்மாவின் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வெவ்வேறு காரணம் இருக்கவேண்டும். அக்காரணம் முற்பிறப்பிற்செய்த நல்வினையுந்தீவினையும் என்பது நிச்சயம்.

ஆட்சேபம்: முயற்சியும் சோம்பலும் முறையே இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணம். முயற்சியுள்ளவர்கள் பொருளீட்டி இன்பம் அனுபவிக்கின்றனர். சோம்பேறிகள் வறிஞராய்த் துன்பம் அனுபவிக்கின்றனர். ஆகவே; முயற்சியே செல்வத்திற்குககாரணம். அதைவிட வேறு காரணம் உண்டெனில் முயற்சியின்றிச் செல்வம் ஒருவனுக்குவரவேண்டும்.

சமாதானம்: செல்வத்திற்கும் வறுமைக்கும் முற்பிறவியிற் செய்த நல்வினையும் தீவினையும் முறையே காரணம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒருவன் பொருளீட்டும் நோக்கத்துடன் முயற்சிசெய்யும்போது, சோம்பல் பொருட்சேதம் மெய்வருத்தம் முதலிய இடையூறுகளினால் அந்நோக்கம் நிறைவேறாது போகின்றது. மேலும் போதிய முயற்சியின்றி செல்வராகின்றவர்கள் ஒருவருமில்லையென்பது அநுபவத்திற்கு முற்றும் விரோதம். புதையல் கண்டெடுத்துச் செல்வராகின்றவர் சிலருளர். செல்வம் வறுமை உயர்வு இழிவு இன்பம் துன்பம் என்னும் ஆறும் முற்கன்மப்பயன்களாய் கருவில் அமைக்கப்பட்டுள்ளனவன்றி, இடையினுண்டாவனவல்ல. கருவில் அமைக்கப்பட்டவற்றை அனுபவத்திற்குக் கொண்டுவர முயற்சி அவசியம். அம்முயற்சியே அடுத்த பிறவிக்குரிய மேற்சொல்லிய அறுவகை அனுபவத்திற்கும் காரணம், உடலுக்கும் வினைக்குமுள்ள சம்பந்தம் வித்துக்கும் மரத்துக்கும் உள்ள சம்பந்தம்போலும். வித்தோ மரமோ முந்தியதென்று சொல்லமுடியாததுபோல் உடலோ கன்மமோ முந்திய

தென்று சொல்லமுடியாது. வித்தின்றி மரமும் மரமின்றி வித்து மில்லை. அதுபோல உடலின்றிக் கன்மமும் கன்மமின்றி உடலுமி ல்லை. ஆகவே உடலும் கன்மமும் பிரவாக வனுதியாம்.

கேள்வி: இப்பிறவிக்குரிய பலவகை அனுபவத்திற்கும் முற்கன்மம் காரணமென்பது சரி. அனுபவத்திற்குப்போலவே அதற்கு வேண்டிய முயற்சியும் முற்கன்மப்பயன். அநுபவம் இப் பிறவியோ டொழிய முயற்சிமாத்திரம் மேலுடலுக்குரிய அனு பவத்துக்கு ஏதுவாகிய கன்மமா மாறுயாங்ஙனம்?

மறுமொழி: முற்கன்மமெனப்படுவது முற்பிறவியிற்செய்த முயற்சியேயன்றி வேறல்ல. முற்பிறவியிற்செய்த முயற்சியே முற்கன்மம் ஆவதுபோல் இப்பிறவியிற்செய்யும் முயற்சியும் இனிவரும் பிறவிக்குரிய கன்மமாகும். இதை ஒரு திருஷ்டாந் தத்திஞல் விளக்குவது நன்று. வயலில் விளைந்த தானியவகை கள் நமக்கு உணவும் மறுபடியும் விதைப்பதற்கு வித்தும் ஆவன போல், நமது முயற்சியே நமது இன்பதுன்பமாகிய அனுபவமும் இனிவரும் உடலுக்குரிய கன்மமுமாகும். இனிவரும் உடலுக் குரிய கன்மமும் இப்பிறவியில் அனுபவத்திற்குரிய முற்கன்ம மும் முற்கன்மத்தில் அனுபவத்திற்குக் காரணமாகாமற் கிடக் கும் கன்மமும் முறையே ஆகாமியம் பிராரத்துவம் சஞ்சிதம் எனப்படும்.

வேதாகமங்களில் விதித்தவற்றைச் செய்தலே யறம். விலக்கியவற்றைச்செய்தலே பாவம். அறம் பாவங்களுக்குரிய பயன்களைச் சிவனே கொடுத்தருள்வர். அவர் இப்படிச்செய்வதற் குக்காரணம், அவருக்கு இயல்பாயுள்ளபேரருளாம். அறம் பாவங் களே பிறவிக்கு வித்து. அனுபவத்திஞலன்றி வேறெவ்விதத்தி ஞலும் அவை தொலையா. அறஞ் செய்வார்க்கு இன்பத்தையும் பாவஞ்செய்வார்க்குத்துன்பத்தையும் அவர் அருள்வர். இன்பத் தை அருள்வதற்கு அருள் காரணமாயிருத்தல்போலத் துன்பத் தையருள்வதற்கும் அருளே காரணம். தந்தைதாயர் தம்பிள்ளை களுள் நற்குணமுடையோருக்குப் பட்சம் காட்டுகின்றனர்; துற்

குணமுடையோரைச் சிட்சிக்கின்றனர். இங்ஙனம் சிட்சித்தல் நற்குணமுள்ளோரில் அவர்களுக்குள்ள கோபத்தினாலல்ல, பட்சத்தினாலாம். அதுபோலச் சிவன் பாவிகளைச் சிட்சித்தல் அவருக்கு அவர்களிலுள்ள கோபத்தினாலல்ல நேசத்தினாலாம்.

ஆட்சேபம்: கன்மங்களே தம்பயனைத்தோற்றுவிக்கும். அங்ஙனஞ் செய்விப்பதற்குக் கடவுள் ஒருவர் வேண்டுமென்பது பொருந்தாது.

சமாதானம். செய்தகன்மம் செய்தவுடனே அழிகின்றமையால், அது தானப்பயன்கொடுக்குமெனல் சரியன்று.

ஆட்சேபம்: வயலுக்கிடும் எருத்தழை முதலியன அழிந்த பின்னரே பயன்படுவதுபோலக் கன்மமும் அழிந்தபின்னரே பயன்படும்.

சமாதானம்: எருத்தழை முதலியன அழிந்தபின்னரே பயன்படும் என்பது மெய்யாயினும்; அழிந்தபின் பயன்படாத பொருட்களும் பலவுள, சோறுகறி முதலியனவயிற்றிற் சீரணித்தபின் கொடுக்கும் பயன் யாதொன்றுமில்லை. மேலும் எருத்தழைமுதலியன போடப்பட்ட வயலிலேகிடந்து அவ்வயலுக்கே பயன் கொடுக்கும்; இவ்வுடம்பில் நாம் செய்யும் கன்மமோவெனில் இவ்வுடம்போடு கெட்டு மற்றோருடம்பிற் பயன்தருவதினால்; எருத்தழை முதலியவற்றிற்கும் கன்மத்திற்கும் உள்ள வித்தியாசம் மிகப்பெரிது.

ஆட்சேபம்: வினைகெட்டுப் பயன்தருமெனல் உண்மையன்று. செய்தவினை செய்தவரறிவிலே யடங்கியிருந்து பயன்தர வேண்டியகாலத்திற் பயன்தரும்.

சமாதானம்: வினைப்பயன்களாவன சுவர்க்கம் நரகம் பூமி என்பனவும் அவற்றிலுள்ள புவனபோகங்களுமாம். அவையெல்லாம் அறிவிற் சூக்குமரூபமாயடக்கியிருந்து வெளிவருமெனல் இந்திரசாலவித்தைபோலும். மேலும் சற்பாத்திரத்திற் தானஞ் செய்தல் பெரும் புண்ணியமென நூல்கள் கூறும். அங்ஙனம்

தானஞ்செய்யப்பட்டபொருளும், தானஞ் செய்வோரும் ஏற்போரும், இம்மையிலே அழிந்துபோகின்றமையால், மறுமையிற் தானப்பயன் தருவதற்கு முற்றறிவு, வரம்பிலாற்றல் ஆதிய திவ்விய இலட்சணங்கள் பொருந்திய கடவுள் ஒருவர் உளரென்பது நிச்சயம். உயிர்வினைகளை யீட்டுவதற்கும், அவற்றின் பயன்களை நுகர்வதற்கும், அதற்குத் தனுகரண புவனபோகம் முதலிய துணைக்கருவிகள் வேண்டும். இக்கருவிகள் சடமாகலால் இவை தாமே சென்று உயிருடன் சேரா. இவற்றையின்றி உயிர் யாதேனும் ஒன்றை அறிய அல்லது செய்ய முடியாதாகலால், அது தானே சென்று இவற்றுடன் சேரும் ஆற்றலிலது. ஆதலால் கடவுளாணையே இவற்றோடு அதைச் சேர்க்கின்றதென்பது வெளிப்படை.

புண்ணியபாவங்கள்: ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம் உபசாரம், உறவு, சீலம், தவம், தானம், துறவு, அடக்கம், அறிவு, வாய்மை, வணங்கல், வந்தித்தல் என்னும் இப்பதினாறும் புண்ணியங்களாம். இவற்றிற்கு மாறுபாடான பதினாறும் பாவங்களாம். ஒருவன் பாவங்களனைத்தையும் ஒழித்து புண்ணியங்களனைத்தையும் செய்து தான் விரும்பிய தெய்வத்தைவழிபடுவானாயின், சிவன் அத்தெய்வத்தை அதிஷ்டித்து, அவன் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு, அவனுக்குப் பயனருள்வர். சிவன் ஒருவரே பதி. அவர் ஒருவருக்கே பிறப்பிறப்புக்களும் இருவினைகளும் அவற்றால் வரும இன்பதுன்பங்களுமில்லை. இவையாவும் மற்றைத்தேவர்களுக்கு உளவாதலினால், நாம் எத்தேவரை வழிபடினும் அத்தேவரிடம் நின்று நமக்கு அருள் செய்பவர் அவரே. பசு, பார்ப்பார், தந்தை தாய் முதலாயினோரை விதிப்படி வழிபடுகின்றோருக்குச்சுவர்க்கம்கொடுப்பவர்கள் அவர்கள் அல்ல. சுவர்க்கம் கொடுப்பவர் சிவனேயாம். அமைச்சர் படைத்தலைவர் முதலாயினோர் அரசனது ஆணைக்குட்பட்டவர்களா யிருத்தல்போலத் தேவர்களனைவரும் சிவனது ஆணைக்குட்பட்டவர்கள். அவர்கள் அவருடைய ஏவலை அவரது சத்தியினால் நிறைவேற்றுவதன்றித் தாமாய் யாதாயினும் ஒன்றைச் செய்யும் ஆற்றலிலர். நாம் வழிபடும் தேவர்களை அதிஷ்டித்து நமக்குப்பயன் அருள்பவர் சிவனே யாதலால் அவரை வழிபடுதலே அறங்கள் எல்லாவற்றுள்

ளும் மிக்க அறம். அவரை மறந்து செய்யும் அறம் யாதாயினும் அது வீண். அவர் விருப்பு வெறுப்பற்றவராயினும் நமக்கு அருள் செய்யும் பொருட்டு, அவர் நமது வழிபாட்டை விரும்புகின்றமையால், நாம் அவரை விதிப்படி நாள்தோறும் திரிகாலங்களினும் வழிபடுதலே நமது முக்கிய கடமை. வீடுபேற்றுக்கு இதுவே உபாயங்கள் எல்லாவற்றுள்ளும் மிகச் சிறந்த உபாயமாம்.

கேள்வி? சிவன் மனோவாக்குக் கெட்டாதவர். அவர் திருமேனி கொண்டருளிய பின்னும் சுத்தமாயா புவனத்தில் வைகுவதன்றி இப்பூமியில் வைகுபவரல்லராதலால் அவரை நாம் வழிபட்டுய்யுமாறெங்ஙனம்?

மறுமொழி. அவர் புறத்தே திருக்கோயிலில் விக்கிரகத்திலும் தமது அடியாரிலும், அகத்தே உயிரிலும் நின்று நமது பூசையை ஏற்றுக்கொள்வர். ஆதலால் நாம் அவரை இவற்றின் மூலமாய் வழிபடல் வேண்டும். சிவபூசையின் சிறப்பை விபரிப்பது நம்மனோருக்கு வெகு பிரயாசம், சிவனது திருவடிகளுக்கு அன்பர் செய்யும் பாவங்களும் அறங்களாகும். அன்பில்லாதோர் செய்யும் அறங்களும் பாவங்களாகும். இவை யிரண்டற்கும் முறையே தண்டேச நாயனாரும் தக்கனும் நல்ல திருஷ்டாந்தம்.

வேதாகமங்கள் சிவனது திருவாக்கு. நரகம் அவ்வாக்கின்படி நடவாதாரை தண்டித்தற் பொருட்டு அவரால் அமைக்கப்பட்ட சிறைச்சாலை. சுவர்க்கம் அவ் வாக்கின்படி நடப்போர் சுகமாய் வாழும் பொருட்டு அவரா லமைக்கப்பட்ட இன்பவுலகம். உயிர்களுக்கு இன்ப துன்பங்கள் அவரது ஆணையினா லுண்டாகும். அரசன் தனது கட்டளைப்படி நடப்போருக்கு உபகாரஞ் செய்து நடவாதோரைத் தண்டிப்பன். அமைச்சர் முதலானோரிடத்துள்ள ஆணையும் அவனுடையதேயாம். அதுபோலச் சிவனும் தமது கட்டளைப்படி நடப்போருக்கு இன்பத்தையும் நடவாதோருக்குத் துன்பத்தையு மருள்வர். மற்றைத் தேவர்களிடத்துக் காணப்படும் ஆணையும் அவருடையதே யன்றி அவர்களுடையதன்று,

நரகதண்டனையை அறுவுறுத்தி அதை நீக்கும் பொருட்டே அரசதண்டனையும் சிவனால் ஏற்படுத்தப்பட்டது.

செய்த தீவினைக்குத்தக்க அரச தண்டனை அடைபவருக்கு நரக தண்டனை வராது. அரசனுக்குரிய ஆணையும் சிவனுடையதே யன்றி வேறல்ல. வேதாகமங்களின்படி நடவாமை பாவம் அவற்றின்படி நடத்தல் புண்ணியம். பாவ புண்ணியங்க ளிரண்டும் பிறவிக்குக் காரண மாதலினால், அவை உயிர்களுக்கு நோயாம். அந்நோயைச் சிவனாகிய பரம வைத்தியன் இன்ப துன்பம் என்னும் மருந்தினால் மாற்றி யருள்வர். வாகட நூல்வழி ஒழுகுபவர்களுக்கு நோய் வராது; ஒழுகாதவர்களுக்கு வரும். வரும் நோயை வைத்தியன் அதற்குத் தக்க உபாயத்தினால் மாற்றுவன். சில நோயை மதுரமான மருந்தினாலும் சில நோயைச் சத்திர வைத்தியத்தினாலும் அல்லது கசப்பான மருந்தினாலும் மாற்றுவன். அதுபோலச் சிவனும் நல்வினை தீவினை என்னும் நோயை இன்ப துன்ப மென்னும் மருந்தினால் மாற்றியருள்வர். இருவினையும் நீங்கினாலன்றி ஆன்மா வீட்டினை யடையாது.

ஒருவன் மரிக்கும் போது அவனுடைய ஆன்மாவானது தூல உடம்பைவிட்டு. சூக்கும உடம்புடன் அவனது இருவினைக்கேற்பச் சுவர்க்கத்துக்கு அல்லது நரகத்துக்குப் போகும். போகும் வழியில் அதின் சூக்கும உடம்பினின்றும் சுவர்க்கவாசத்துக்கு அல்லது நரகவாசத்துக்குரிய உடம்பு தோன்றும். சுவர்க்கத்தில் அல்லது நரகத்தில் பயன் கொடுக்கும் கன்மம் தொலையு மளவும் அவ்விடம் இன்பம் அல்லது துன்பம் அனுபவித்துப் பின்னர் இப்பூமியிற் பயன் கொடுக்கும் கன்மத்துடனும் சூக்கும தேகத்துடனுந் திரும்பிவந்து மாதாவின் கருப்பாசயத்துக்குட் பிரவேசித்துப் பிறக்கும். இது ஒருபோதும் மாறாத நியதியன்று. சில சமயங்களில் தூலதேகத்தை விட்டவுடன் கருப் பாசயத்துக்குட் பிரவேசித்து வேறு மொரு தூலவுடம்பு எடுக்கும். வேறு சிலசமயங்களில் அது நெடுங்காலம் அறிவு சுரணையற் றிருந்து பின்னர் கொடிய நரகங்களுக்

குச் செல்லும். இவைகள் யாவும் அதின் கன்மத்துக்குத் தக்கபடி யிருக்கும்.

பாம்பும் பறவையும் பரகாயப் பிரவேசஞ் செய்வோரும் முறையே தோலையும் முட்டையையும் தேகத்தையும் விட்டுச் செல்வது போல ஆன்மாவும் மரிக்கும்போது தூலதேகத்தை விட்டு ஆகாய வழியாய் மேலேறிச் சென்று மற்றோருடம்பினைப் பொருந்தும். இங்ஙனம் நிகழ்கையில் அதின் உணர்வு சாக்கிர உணர்வு சொற்பன உணர்வாய் மாறுவதுபோலமாறும்.

கன்ம மலம். கன்மமானது அறம் பாவமென்றிரு வகையாய் அவ்விருவகைக்குரிய பயனையும் பிறப்பித்து மும்மலங்களுள் ஒன்றாய் ஆன்மாவினை அநாதியே பந்தித்து நிற்கும். இருவினைக்கும் ஆதியும் அந்தமும் உண்டாதலினாலும் அவை அநாதியாகவே தொடர்ச்சியாய் வருதலினாலும் அவை காரியப் பிரபஞ்சம் போற் பிரவாக வநாதியாம். இன்னொரு விதமாய்ச் சொல்லுகில் முதற் கன்மம் எக்காலத்தி லுண்டாயிற்றென்று சொல்ல முடியாது. கன்மமலமானது அருவாய் நின்று சிவனது ஆணைக்கு ளடங்கி நடக்கும்.

நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் 84 இலட்சம் யோனி பேதங்களும் உள்ளனவென்று நூல்கள் கூறுகின்றன. உயிர்கள் யோனி மாறிப்பிறத்தலன்றி அச்சு மாறிப் பிறக்காவென்பர் சிலர். அதாவது தேவர் எப்பொழுதும் தேவராயும் மனுஷர் எப்பொழுதும் மனுஷராயும் பிறப்பர். விலங்கு எப்பொழுதும் விலங்காயும் பறவை எப்பொழுதும் பறவையாயும் ஊர்வன எப்பொழுதும் ஊர்வனவாயும் நீர்வாழ்வன எப்பொழுதும் நீர்வாழ்வனவாயும் தாவரம் எப்பொழுதும் தாவரமாயும் பிறக்கும் என்பர். சுருக்கிச்சொல்லுகில் மேற்பிறப்புக்களைச்சேர்ந்த வுயிர்கள் கீழ்ப்பிறப்புக்களிலும் கீழ்ப்பிறப்புக்களைச் சேர்ந்த உயிர்கள் மேற்பிறப்புக்களிலும் பிறக்கா என்பர். இக்கொள்கைசுருதி யுத்தி அனுபவம் என்னும் மூன்றற்கும் விரோதமாம். புண்ணியவான்கள் சுவர்க்கம்சென்று இன்பம் அனுபவிக்கையில் தேவராயன்றி மனுஷராயிரார். அங்கு நின்றும் பூமிக்குத்திரும்பிவந்து பிறக்கு

ப்போது, தேவராய்ப் பிறவாது மனிதராய்ப்பிறப்பர். ஆதலினால் மனிதர் தேவராயும் தேவர்மனிதராயும் பிறப்பர் என்பது வெளிப்படை. மேலும் மயிர்க் குட்டி வண்ணத்திப் பூச்சியாயும் புழு வேட்டைவாளியாயும் மாறுவதை நாம் கண்கூடாய்க்காண்கிறோம். ஆதலால் கன்மம் யோனியைமாத்திரமல்ல அச்சையும் மாற்றும் என்பதற்குச் சந்தேகமில்லை. அகலியை கல்லாய் மாறினள் என்றும், விஷ்ணுபலபிறவிகள் பிறந்தனரென்றும்; சிலந்திப்பூச்சியொன்று ஓர்பிரசித்திபெற்ற சோழ அரசனும் எலியொன்று மாவலிச்சக்கரவர்த்தியாயும் பிறந்தன வென்றும், இதிகாச புராணங்கள் கூறும். அகலியைகல்லாய் மாறினதற்கும், விஷ்ணு பல பிறவிகள் பிறந்ததற்கும் காரணம் சாபமாதல்போல சிலந்தியும் எலியும் அரசராய்ப் பிறந்ததற்கும் காரணம் ஆசீர்வாதமாம். அச்சைமாற்றும் ஆற்றல் சாப ஆசீர்வாதங்களுக்கன்றி கன்மத்திற்கு இல்லையென்று சொல்வது பொருந்தாது. ஏனெனில் அச்சுமாறுவதற்குகாரணம் சிவனது ஆசீர்வாதமும சாபமுமன்றிப்பிறிதொன்றல்ல, கௌதமர் பிருகுமுதலிய முனிவருக்கு அச்சைமாற்றும் ஆற்றல் உண்டேனில், சிவனுக்கு அது இல்லையென்பது பெருந்தவறு.

கன்மம் சடமாதலால்; அது தன்னைச் செய்த உயிருடன் தானே சேரமாட்டாது. உயிருந்தானே அக்கன் மத்துடன் சேரமாட்டாது. ஆதலால் சிவனே அவ்விரண்டையும் ஒருங்கு சேர்க்கின்றனரென்பது வெளிப்படை.

தூலவுடம்புகள் சூக்கும உடல்பிலிருந்து தோன்றும். ஒரே தன்மையதாகிய பொன்னிலிருந்து பலவகையான ஆபரணங்கள் உண்டாமாறுபோல, ஒரே தன்மையதாகிய சூக்கும உடம்பிலிருந்து பல தூல உடம்புகள் தோன்றும. சூக்கும உடம்பு கெட்டுத்தூலஉடம்பு தோன்றுவதல்ல; அல்லது சூக்கும உடம்புக்குள் தூல உடம்பு தோன்றி வெளியே வருகிறதுமல்ல. ஒரு மாத்தை வெட்ட அதின் வேரிலிருந்து வேறொருமரம் தோன்றுவது போல. ஒரு தூலஉடம்பு மரிக்க அதின் சூக்கும உடம்பிலிருந்து வேறொரு தூல உடம்பு தோன்றும். வித்தின்றி மரமுண்டாகாது அதுபோல சூக்கும உடம்பின்றி தூல உடம்பு உண்டாகாது,

தூல உடம்பிற்கு முதற்காரணம் சூக்கும உடம்பு. இதற்கு முதற்காரணம் மூலப்பிரகிருதி. இதற்கு முதற்காரணம் அசுத்தமாயை சுத்தமாயை மேற்சொல்லிய யாவையும் வியாபித்து நிற்கும். தனுகரண புவனபோகமென்பன, ஆணவம் கன்மம் என்னும் நோய்க்கு ஏற்ற மருந்து. அம்மருந்தினால் சிவன் உயிர்களின் நோயை மாற்றி, அவற்றிற்கு முத்தியருள்வர். சீலையில் உள்ள அழுக்கு சாணி உவர்மண் முதலிய அழுக்கினால் நீங்குவதுபோல மாயா மலத்தினால் ஏனையிரு மலமும் நீங்கும்.

## உலகத் தோற்றமும் ஒடுக்கமும்.

அசுத்தமாயை: உலகத்திற்கு முதற்காரணமாகிய அசுத்தமாயையினிலட்சணங்களாவன. நித்தம், அருவம், ஏகநிலை, அசித்து, வியாபகம். சிவனது பரிக்கிரகசத்தி; மும்மலங்களில் ஒன்றாய் உயிர்களை மயக்குதல் என்பன ஏகநிலையென்றால் அணுக்களுடைத்தாயிராமை. அசுத்தமாயையிலிருந்து காலம் நியதி, கலை என்னும் தத்துவங்கள் தோன்றும். காலம் இறந்தகாலம் நிகழ்காலம். எதிர்காலம் என முத்திறப்பட்டு சிவனது ஆணையினால் உலகத்தைச் சிருஷ்டித்துக் காத்து அழிக்கும். நியதி தத்துவம். உயிர்கள் தாம் தாம் செய்த கன்மப் பயனை, தாந்தாமே அனுபவித்தற்குரிய முறைமையை ஏற்படுத்தும்.

கலாதத்துவம்: ஆணவ மலத்தைச் சிறிது ஒதுக்கி உயிரினது கிரியாசத்தியைத் தோற்றுவிக்கும். வித்தியா தத்துவம் கலா தத்துவத்திலிருந்து தோன்றி அறிவைப் பிறப்பிக்கும். அராக தத்துவம் வித்தியாதத்துவத்திலிருந்து தோன்றி இச்சையைப் பிறப்பிக்கும். கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி என்னும் மூன்றும் தோன்றியபின் உயிர் புருட தத்துவம் என்னும் பெயர்பெறும். கலாதத்துவத்திலிருந்து மூலப்பிரகிருதி தோன்றும், மூலப்பிரகிருதியில், சாத்துவிதம், இராசதம், தாமதம்

என்னும் முக்குணமும், முன்னர் அவ்வியத்த ரூபமாய், பின்னர் வியத்தமாகும். ஒவ்வொரு குணமும் தனித் தனியே மும்மூன்றாய் முக்குணமும் ஒன்பது வகையாகும். அவையாவன: சாத்துவிதத்தில் சாத்துவிதம், சாத்துவிதத்தில் இராசதம், சாத்துவிதத்தில் தாமதம், இராசதத்தில இராசதம், இராசதத்தில் தாமதம், இராசதத்தில் சாத்துவிதம், தாமதத்தில் தாமதம், தாமதத்தில் சாத்துவிதம்; தாமதத்தில் இராசதம் என்பன. குண தத்துவத்திலிருந்து தோன்றும புத்தி முதலிய தத்துவங்களும் குணவடிவமாய் உயிரைப் பந்திக்கின்றமையால் உயிர் போக நுகரும் போதெல்லாம் குணவடிவாயே நிற்கும். மூலப் பிரகிருதியிலிருந்து குணதத்துவம் மாத்திரமன்றி; விபரீத உணர்வுக்குக் காரணமாகிய அவிச்சையும் தோன்றும். குணதத்துவத்திலிருந்து புத்திதத்துவம் தோன்றும். இது இன்னதென நிச்சயித்தல் புத்திதத்துவத்தின் செயல். புத்திதத்துவத்திலிருந்து அகங்காரதத்துவம் தோன்றும். அகங்கார தத்துவம் உயிரானது நான் எனது என்று செருக்குறுவதற்குக் காரணமாம். அகங்காரம், பூதாதி அகங்காரம், வைகரி அகங்காரம் தைசத அகங்கார மென முத்திறப்படும். பூதாதி அகங்கார மெனினும் தாமத அகங்கார மெனினும் வைகரி அகங்கார மெனினும இராசத அகங்கார மெனினும. தைசத அகங்கார மெனினும் சாத்வித அகங்கார மெனினும் ஒக்கும. மனமும் ஞானேந்திரியங்களும் தைசத அகங்காரத்தினின்று தோன்றும். மனம் முன்னர் சித்த ரூபமாய் இது யாதோவெனச் சிந்தித்தும் பின்னர் ஐயுற்று நிச்சயிக்கவும் விரும்பும். வைகரி அகங்காரத்தினின்று கன்மேந்திரியங்கள் தோன்றும். மெய் வாய் கண் மூக்குச் செவி என்பனவும். வாக்குப் பாதம் பாணி பாயுரு உபத்தம என்பனவும் முறையே ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களுமாம். பரிசம் இரசம் ரூபம் கந்தம் சத்தம் என்பன முறையே ஞானேந்திரியங்களுக்கு விடயங்களாம். வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்பன கன்மேந்திரியங்களுக்கு விடயங்களாம். ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் புறக்கருவிகள். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன உட்கருவிகள் அல்லது அந்தக்கரணங்கள். கலை முதலியன

உள் அந்தக்கரணங்கள். இம் மூவகைக்கருவிகளும் ஆன்மா விற்கு இன்றியமையாச் சிறப்பினையுடையன. மேலும் பூதாதி அகங்காரத்திலிருந்து பரிசம் இரசம் ரூபம் கந்தம் சத்தம் என்னும் ஐந்து தன்மாத்திரைகள் அல்லது சூக்குமபூதங்கள் தோன்றும். தன்மாத்திரைகள் ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் என்னும் மூன்றும் புரியட்டக அல்லது சூக்கும உடம் பெனப்படும். சத்தம் முதலிய தன்மாத்திரைகளிலிருந்து முறையே ஆகாசம் முதலிய தூலபூதங்கள் ஐந்தும் தோன்றும். அப்பூதங்களுக்கு முறையே ஒன்றற்கொன்று ஏற்றமாகிய சத்தம் முதலிய குணங்களுண்டாகும். ஆகாயம் வெளியாதல் இடங்கொடுத்தல் என்னும் குணங்களும் வாயு அசைதல், பரத்தல் திரட்டுதல் என்னும் குணங்களும் தீ சுடுதல் ஒன்றுவித்தல் என்னும் குணங்களும் நீர் குளிர்தல் பதஞ்செய்தல் என்னும் குணங்களும் மண் கடினமாதல் தாங்குதல் என்னும் குணங்களுமுடையன. மண் முதலிய பூதங்களின் வடிவம் முறையே நாற்கோணம் பிறை முக்கோணம் அறுகோணம் வட்டம் என்பனவாம். அவற்றின் நிறம் முறையே பொன்மை வெண்மை சிவப்பு கறுப்பு புகை என்பனவாம். எழுத்து அல்லது பீசம் முறையே, ல, வ, ர, ய, வௌ, என்பனவாம். அடையாளம் முறையே; வச்சிரம் கோகனதம் சுவத்தி அறுபுள்ளி அமுதவிந்து என்பனவாம். அதிதெய்வம் முறையே அயன் அரி உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்பவராம். நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதீதம் என்னும் கலைகளுக்கும் மேற்சொல்லியவாறே வடிவம் பீசம் அடையாளம் அதிதெய்வம் என்பன சொல்லப்படும். முதற்சூத்திரத்திற் சொல்லப்பட்ட சுத்த தத்துவங்களைந்தும் இப்பொழுது கூறப்பட்ட முப்பத்தொரு தத்துவங்களும் சேர்ந்த தத்துவங்கள் முப்பத்தாறும். அவற்றுள் முதலைந்தும் சடமாயினும் சத்திக்குச் சுதந்திரவடிவாதலினால் சைதன்னியம் என்றும் புருடத்துவம் சார்ந்ததின் வண்ணமாய் நிற்பதினால் சித்தசித்தென்றும் ஏனை முப்பது தத்துவங்களும் அசித்தென்றும் சொலலப்படும். முப்பத்தாறு தத்துவங்களுள் முதலைந்தும், இடை ஏழும் கடை இருபத்தினாலும் முறையே சுத்தம் மிச்சிரம் அசுத்த

மெனவும் பிரேரகாண்டம் போசயித்திருகாண்டம் போக்கிய காண்டம் எனவும் மூவகைப்படும்.

அருவும் உருவும் அருவுருவுமாகிய காரியப்பிரபஞ்சமனைத்தும் மேற்சொல்லிய தத்துவங்களுள் அடங்கும். இத்தத்துவங்கள் தூலதத்துவம் சூக்குமதத்துவம் அதிசூக்குமதத்துவம் என மூவகைப்படும். தத்துவங்களை அதிஷ்டிக்கும் அதிதெய்வங்களும்; தத்தமக்குரிய தத்துவங்களின் பெயரைப்பெறும்.

லோகாயதம்முதல் ஐக்கியவாதசைவமீறாகி ! சமயங்கள் யாவும் புறப்புறம் புறம் அகப்புறமென்னும் மூவகுப்புளடங்கும். புறச்சமயத் தெய்வங்களெல்லாம் பூதம் முதல் அசுத்தமாயையீறாகிய தத்துவங்களில் நிலை நிற்கும். அகச்சமயமாகிய அறுவகைச் சைவசமயத் தெய்வங்கள் அதி[illegible], போக, லய, சிவபேதங்களென்று அழைக்கப்பட்டு, சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவங்களில் நிற்கும். சைவ சித்தாந்த தெய்வமாகிய சுத்த சிவன் அல்லது பரம சிவன் தத்துவங்கள் முப்பத்தாறினையும் கடந்து நிற்பவராகலால், அவர் ஒருவருக்கே கடவுள் என்னும் நாமந் தகும். பிரமா முதலிய ஏனையோரைக் கடவுளரெனல் உபசாரமன்றி வேறன்று.

நவபேதங்களாவன: சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் மகேசுரன் உருத்திரன் பிரமா என்பன. நவபேதங்களுள் முதல் நான்கும இடை ஒன்றும் கடை நான்கும் முறையே யருவம் உருவாருவம் உருவமாம். சுத்தசிவன் 'இப்பேதங்கள் எல்லாவற்றோடுஞ் சேர்ந்து நின்று இவை ஒவ்வொன்றுக்குமுரிய தொழிலைச்செய்வர். இவையெல்லாம் பாவைகள்; அவரே இவைகளையெல்லாம் ஆட்டுபவர். இவற்றுள் சத்தி விந்து என்னும இரண்டும் சத்தி பேதங்களாகலால், சிவபேதங்கள் ஏழாம். சிவபேதங்களுக் குரிய சத்தி பேதங்களும் முறையே சத்தி முதல் வாணியீறாக, எழுவகைப்படும். பரமசிவன் சிவபேதங்கள் ஏழனுள்ளுநின்று அவற்றை நடாத்துமாறுபோல, அவரது சத்தியாகிய பராசத்தியும் சத்திபேதம் ஏழினும் அவருக்குத் துணையாய் நின்று அவற்றை நடாத்தும் பரமசிவனும்

பராசத்தியும் மரமும் வயிரமும்போல் அபேதமாய் இருத்தலினால் திருமேனி யாவும் அவர் இருவருக்கும் பொதுவாயினும் பரமசிவனுக்குப் பராசத்தி தேவியுமாதலினால், சிவபேதம் சத்திபேதமென இருவகையாயின. சிவம் சத்தியைத் தோற்றுவிக்கும், சத்தி சிவத்தைத் தோற்றுவிக்கும். அவையிரண்டும் புணர்ந்து சராசரங்களைத் தோற்றுவிக்கும். அங்ஙனஞ் செய்யினும் பரமசிவன் நித்திய பிரமசாரியும் பராசத்தி நித்திய கன்னியுமாம். இவ்விரகசியம் மெய்ஞ்ஞானிகளுக்கன்றி ஏனையோருக்குப்புலப்படாது. தனு கரண புவன போகங்களும் அவைமூலமாயுண்டாகும் பந்தமுத்திகளும் தத்துவங்களாலாயினவென்று நன்குணர்ந்து அவற்றை நீக்கவேண்டிய முறைப்படி நீக்கி, அவற்றிற்குமேலாயுள்ள பதிப்பொருளை உண்மையாய் அறியவல்லவன் எவனோ அவனே மெய்ஞ்ஞானியாம். இருவினைகளை நுகர்வித்து நீக்கும்பொருட்டும் சகல தீமைகளுக்கும் காரணமாகிய ஆணவ மலத்தை நீக்கும் பொருட்டும் தத்துவகங்களெல்லாம் உயிர்களோடு சேர்ந்தன. உயிர்கள் பக்குவமடையும்போது இவையனைத்தும் தீட்சையாற்கழிந்துபோம்.

ஆணவமலம்; ஆணவமலமானது அநந்தசத்தியுடையதாய் உயிரகளில் செம்பிற் களிம்புபோல் அநாதியே சேர்ந்து நின்று கேவலாவஸ்தையில் அவற்றின்தொழில் அறிவு இச்சைகளை மறைத்து சகலாவஸ்தையில் போத்திருத்துவத்தையுண்டாக்கி அஞ்ஞானத்திற்குக் காரணமாய் நிலைபெறும்,

சிலர் மாயையே மலம் என்றும் ஆணவம் என்னும் மலம் இல்லையென்றும் கூறுவர். ஆணவமலத்தின் தன்மை அறிவு இச்சை செயல்களை விலக்குதல். மாயையின் தன்மையோவெனில் அவற்றை விளக்குதல், மேகம் சூரியனை மறைப்பதுபோல, மாயை தன் காரியமாகிய உலகு உடல் கரணங்களினால் உயிரை மறைக்கும் என்றும், மேகம் சூரியனைவிட்டு நீங்குமாறுபோல மாயாகாரியம் உயிரைவிட்டு நீங்குமென்றும், அங்ஙனம் நீங்குவதே முத்தியென்றும் சொல்வது பொருந்தாது, எனெனில்

மாயாகாரியம் உயிருடன் சேர்ந்திருக்கும்போதே, உயிருக்கு அறிவு, இச்சை, செயல்கள் விளங்குவதும் பிரியும்போது அவை விளங்காதிருப்பதும் உண்மையென்பதற்கு நமது அனுபவமே போதியசான்று. மேலும் ஆணவத்தாலுண்டாகும் அஞ்ஞானம் மேகத்தாலுண்டாகும் மறைவு போன்றதன்று. அவ்வஞ்ஞானம் உயிருடன் சேர்ந்து அதின் குணம்போற் றோன்றும். தொழிற்பாட்டில் மாயைக்கும் ஆணவத்திற்குமுள்ள வேறுபாடு ஒளிக்கும் இருளுக்குமுள்ள வேறுபாடுபோல் மிகப் பெரிதாதலால், ஆணவமலத்தை மறுத்தல் பெருந்தவறு. வேறு சிலர் அஞ்ஞானம் ஆன்மாவின் குணமென்பர். அது ஆன்மாவின் குணமாயின், ஆன்மா சித்துப்பொருளல்ல சடப்பொருள் எனப்படும். ஒரு பொருளுடன் குணமாத்திரமல்ல, குற்றமும் விரவிநிற்கும் என்பதற்கு குருட்டுக்கண் நல்ல திருஷ்டாந்தம். அஞ்ஞானம் குணமாதலால் அதற்குக் குணிப்பொருள் ஒன்றுண்டு. அப்பொருள் சித்தாயல்ல சடமாயிருத்தல் வேண்டும், ஆதலால் அஞ்ஞானத்திற்குக் குணிப்பொருள் ஆணவம் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஞானத்திற்குக் குணிப்பொருள் சித்தாகிய ஆன்மாவாம்.

கன்மம் மாயை ஆணவம் என்னும் மலங்கள் நெல்லுக்கு முளை தவிடு உமிபோல ஆன்மாவுடன் சேர்ந்துநின்று அதற்கு முறையே போகத்தையும் பந்தத்தையும் போத்திருத்துவத்தையும் பிறப்பிக்கும், இம்மலம் மூன்றனையும் நீக்கும்பொருட்டு பரமசிவன் மாயேயம் திரோதானசத்தி என்னும் இருமலங்களையும் இவற்றுடன் சேர்ப்பர். மாயேயம் ஆவது மாயாகாரியமாம். அது ஆன்மாவின் அறிவு, இச்சை செயல்களை ஏகதேசப்படுத்தும். திரோதானசத்தி ஆன்மாவின் வியாபகஅறிவை மறைத்து மலபரிபாகம்வரச்செய்யும். மேற்கூறிய பஞ்சமலங்களுமே பிறப்பு இறப்புகளுக்கும் அவற்றாலுண்டாகும் சுகதுக்கங்களுக்கும் காரணமாம்.

உலக ஒடுக்கம்: சர்வ சங்காரகாலத்தில் உருத்திரன் நிலம் முதல் மூலப்பிரகிருதியீறாகிய 24-தத்துவங்களையும் சங்கரிப்பர். மகேசுரன் அல்லது அனந்தர் மூலப் பிரகிருதிக்கு மேலும்,

அசுத்தமாயைக்குக்கீழுமுள்ள ஆறு தத்துவங்களையும் சங்கரிப்பர். இலயசிவன் அவற்றிற்கு மேலுள்ள மூன்று சுத்தமாயா தத்துவங்களைச் சங்கரிப்பர். பரமசிவன் சத்தி தத்துவத்தையும் சிவ தத்துவத்தையும் சங்கரிப்பர். உலகத்தோற்றமும் இப்பிரகாரமாகும். உருத்திரன் அநந்தர் இலயசிவன் என்போரைச் சிலர் நித்தியர் என்பர். அங்ஙனஞ் சொல்வது உபசாரமேயன்றிப் பிறிதன்று. ஏனெனில் நித்தியத்துவம் பரமசிவன் ஒருவருக்கே உரியது.

அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைத்தோற்றமும், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பும் 84-இலட்சம் யோனிபேதமும் உள்ளன. ஏனை யோனிபேதங்களைவிட்டு மானுடயோனியிற் பிறத்தல் கடலைக்கையால் நீந்துவதுபோல் அரிது. மானுடப்பிறவி பெறினும் வேதாகமங்கள் வழங்கும் பரதகண்டத்திலே, பிரம சத்திரிய வைசிய சூத்திர என்னும் உத்தமசாதி நான்கனுள் ஒன்றிலே சைவசமயத்திற் குரித்தாய்ப் பிறத்தல் மிகவும் அரிது. அங்ஙனம் பிறத்தல் விசேஷ புண்ணியப்பயன். அங்ஙனம் பிறந்து சைவ சித்தாந்த நெறி உணர்ந்து அந்நெறிப்படி பரமசிவனை வழிபடுதல் பாக்கியங்கள் எல்லாவற்றுள்ளும் மிக்க பாக்கியமாம். அப்பாக்கியமுடையோரே திருவருள் பெற்று முத்தி பெய்தப் பக்குவம் வாய்ந்தோர். மானுடப்பிறவியே பரமசிவனை வழிபடுதற்கேற்ற பிறவியாதலால் தேவர்களும் இப்பூமியில்வந்து அவருக்குப் பூசை செய்வர். அங்ஙனமாயின், மானுட செனமமெடுத்தும் நாம் அவரை மனமொழி மெய்களால் வழிபடாதிருத்தல் எத்துணைப் பெரும் பேதமை. மானுடயாக்கை நிலையுடைத்தன்று. அது கருப்பையில் அழிந்தாலும் அழியும். அல்லது அவ்விடத்தில் படிப்படியாய் வளர்ந்து வந்து பிறக்குமுன் னழியும். அல்லது பிறந்தவுடன அல்லது பாலியப் பிராயத்தில் அல்லது வாலிபப்பிராயத்தில் அல்லது முதிர்பருவத்தி லழியும். அழியுந் தன்மையதாகிய யாக்கையி லுண்டாகிய அறிவோ வெனில் விடயங்களை ஒவ்வொன்றாய் அறிவதன்றி ஒருங்கே யறியும் ஆற்றலிலது, ஒவ்வொன்றாய் அறியும்போதும் தானறிவதனை

விட்டு விட்டறிவதன்றி இடைவிடாமல் அறியமாட்டாது. மேலும் யாக்கைக்குரிய செல்வம் நிலையுள்ளதன்று. உத்தியோகம் செல்வம் முதலிய வதுக்களினால் செருக்குற்றுப் பரமசிவனை மறப்பவர்கள் நடைப் பிணங்களாம். பொருள் வாஞ்சையால் அந்நடைப் பிணங்களுக்குப் பின் செல்பவர்களும் நடைப் பிணங்களன்றி வேறல்லர். நாம் அங்ஙனஞ் செய்யாது அவரை மெய்யன்போடு வழிபடின் அவருடைய திரு அருளுக்கு இலக்காகி முத்தி சீக்கிரம் அடைவோமென்பது நிச்சயம்.

## மூன்றாம் சூத்திரம்.

இச்சூத்திரம் ஆன்மா உண்டென்று சாதிக்கின்றது. ஆன்மா என்னும் பதம் வழங்கி வருவதினால் ஆன்மா சூனியமென்று சொல்வது சரியன்று. அது தேகத்திலுள் நின்று யான் எனதென்று செருக்குக் கொள்வதினால் தேகமே ஆன்மாவெனல் பொருந்தாது. ஞான மாத்திரமன்றி ஞானம், கிரியை, இச்சை என்னும் மூன்றும் உளவாகலால், ஐம்பொறியே உயிரென்று சொல்ல முடியாது. கனவில் காணப்பட்டவை நனவில் ஞாபகத்திற்கு வருதலினால் சூக்கும தேகம் ஆன்மாவன்று. இன்ப துன்பங்கள் நனவிலேயே நுகரப்படுதலினால் பிராணவாயு ஆன்மாவன்று. ஐந்தவத்தைப்பட்டு அறிவதினால் பிரமம் ஆன்மாவன்று. மேற்கூறியவற்றின் கூட்டமனைத்தும் நீங்கிய துரியாதீதத்திலும் அறிவிருத்தலினால் அக்கூட்டம் ஆன்மாவன்று. ஆதலால் ஆன்மாவானது அவையனைத்திற்கும் வேறு.

ஆட்சேபம்: உயிர் சூனியம் அல்லவென்பது மெய்யாயினும், உடம்பே உயிர். ஏனெனில் உடம்பே அறியுந்தன்மையுடையது.

சமாதானம்: பிணத்திலும் உறக்கத்திலும் அறிவில்லாமையினால் உடம்பே உயிரெனல் தவறு.

ஆட்சேபம்; ஐம்பொறிகளே உயிர். அவை நனவில் அறிவனவன்றி உறக்கத்தில் அறிவனவல்ல.

சமாதானம்; ஐம்பொறிகளும் ஒவ்வொன்றாய் அறிவனவன்றி, எல்லாம் ஒருங்கே அறியாமையினாலும் ஒருபொறி யறிந்ததனை ஏனைய அறியாமையினாலும் அவை யுயிரல்ல.

உ—ம்: கண் அறிந்ததைக் காது அறியாது. ஆதலால் பொறிகள் மூலமாய் அறிவது வேறொன்றுண்டு.

ஆட்சேபம்; பிராணவாயு இயங்கும்போதே அறிவுண்டாவதினால் பிராணவாயுவே உயிர். உறக்கத்திலது இயங்கினும் கருவிகள் இல்லாமையினால் அறிவுண்டாவதின்று.

சமாதானம்; பிராணவாயுவே யுயிரெனில் அதுவே கர்த்தாவாகும். கர்த்தா நிற்கும்போது கருவிகள் அதைவிட்டுப் போகாவாதலினால் பிராணவாயுவே யுயிரெனல் பெருந் தவறு.

## நான்காம் சூத்திரம்.

இச்சூத்திரம் உயிரிலக்கணங் கூறுகின்றது. இதில் மூன்று பிரிவுகள் உண்டு. 1. அந்தக்கரணங்கள் ஒன்று அறிந்ததனை ஏனைய அறியாமையினால் அறிவு உயிருக்கே உரியது. 2. உயிரானது யான், எனது என்னும் செருக்குக்கு ஏதுவாகிய ஆணவமலத்துடன் கூடியிருப்பதினால் அது தனக்கென அறிவுடையதன்று. 3. அது அந்தக்கரணங்களுடன் சேர்ந்து அவற்றை உட்கருவிகளாக்கியும் புறக்கருவிகளிற் செலுத்தியும் வெவ்வேறவத்தைகளுறும்.

A. அந்தக்கரணங்கள் விடயங்களை யறிவதற்குக் கருவியாய் உயிருடன் கூடி நிற்கும். கண்ணுக்கு விளக்குப்போல உயிர் வேறு அதன் கருவியாகிய அந்தக்கரணம் வேறென்று ஒருவன் நன்குணர்ந்து உயிரின் சொரூபம் யாதென்று ஆராயும்

போது, அது அவனுக்குப் புலப்படும். இங்ஙனம் ஆராயும் அறிவு பசுஞானமாதலால, அந்த ஞானம் எங்ஙனம் உண்டாகின்றதென்று ஆராயின், பதிஞானம் அதற்குமேலாய்த்தோன்றும்.

பிரணவத்துக்குரிய அ, முதலிய எழுத்துக்கள் அந்தக் காரணங்களைச் செலுத்தும்போதே அவை உயிருக்குக் கருவியாகும், "பிரணவம்" எனினும் "ஓம்" எனினும் ஒக்கும். அ, உ, ம், விந்துநாதம என்பன. முறையே அகங்காரம் புத்தி மனம் சித்தம் புருடன் என்பவற்றைச் செலுத்தும். அவ்வக்கரங்களை முறையே பிரமா முதலிய பஞ்ச கர்த்தாக்கள் அதிட்டித்து நிற்பர். ஆகவே அந்தக் காரணங்களினாலும் பிரணவத்தினாலும் பஞ்ச கர்த்தாக்களினாலும் உயிருக்கு அறிவுண்டாகும். உயிரிலே அறிவு மாறி மாறித் தோன்றுதல், கடலிலே திரை தோன்றியும ஒடுங்கியும வருதல் போலாம். சவிகற்ப உணர்வுக்குக் காரணம் நால்வகை வாக்குக்கள் என்பதனை ஒருவன் கவனிக்கில் இது அவனுக்கு நன்கு புலப்படும். அந்தக் கரணங்கள் பிரணவ அக்கரங்கள் அவற்றின் அதிதெய்வங்கள் என்னும் பதினைந்தின் கூட்டமே ஆன்மாவென்று சிலர் நினைப்பது தவறு. அறிபவனும் அறியப்படும் பொருளும் எப்போதும் வேறாதலினால் அக்கூட்டம் ஆன்மாவல்ல.

ஆன்மாவைப்பற்றிய கொள்கைகள்; சீவான்மா பிரமத்தின் அம்சம என்றும் அவ்வம்சம் அறிவு, இச்சைசெயல்களையும, குண, குணித்தன்மையையும அடையுமென்றும் பரிணாமவாதிகள் கூறுவர். அவர்கள் கூற்றுச் சரியன்று. ஏனெனில் கருவிகளை இன்றி யறிய மாட்டாத சீவான்மா சுயஞ்சோதியாகிய பிரமத்தின் அம்சமாயிருத்தல் கூடாது.

சாங்கியர் ஆன்மாவானது குண, குணித்தன்மையின்றி அறிவுமாத்திரமாய்நிறறல் அதின் இயல்பென்றும் அதின் சந்நிதியில் உடம்பிலுள்ள காரணங்கள் தத்தம் தொழில் செயவதினால் உடம்பில அறிவு இச்சை செயல்கள் உண்டாகுமென்றும் சொல்வர் பிணத்தும் உறக்கத்தும் ஆன்ம சந்நிதி யிருந்தும்

உடம்பில் அறிவு, இச்சை செயல்கள் உண்டாகாமையினால இக்கொள்கை ஏற்றற்பாலதன்று. சந்நிதியெனில் வியாபகம் அன்று என்றும் அது அருகிலுள்ள இரும்பைத் தொழிற்படுத்தும் காந்த சக்தியைப்போன்று உடம்பைத் தொழிற்படுத்தும் சக்தியென்றும் சொல்வர். உடம்பிற் தம்முள் மாறுபட்டபல தொழில்கள் நடைபெறுகின்றமையால், இத்தன்மையான சந்நிதியினால் நினைத்தல் மறத்தல் ஓடல் இருத்தல் கிடத்தல் முதலிய ஒன்றற்கொன்று மாறுபட்ட தொழில்கள் உண்டாகா.

பௌராணிகர் உயிர் உருவப்பொருள் என்பர். உருவப்பொருள் எதுவோ? அது காணப்படத்தக்கதும் தோன்றி யழியும் இயல்புடையதுமாம். இக்குணங்கள் ஆன்மாவுக்கில்லாமையினால், அது உருவப் பொருள் அன்று. மேலும் அது தூல உருவல்லவென்றும், சூக்கும உருவாய் உடம்பில் நிற்கும் என்றுஞ் சொல்வதுந் தவறு. ஏனெனில் சூக்கும உரு அல்லது உடம்பு தூல உடம்பிற்குக் காரணம். அச் சூக்கும உருவுக்கு ஏிருக்கும அதிசூக்கும உருவென்று சொலலவும் முடியாது. அதிசூக்கும உருவாவது கலை முதலியவற்றாலுண்டாய பரவுடம்பாம். மேற்கூறிய மூவகை உருவங்களும் அசித்தும் அசத்துமாதலினால் அவை சித்தும் சத்துமாய ஆன்மா அல்லவென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகும்.

கவுளர் ஆன்மா அருவுருவப் பொருளென்பர். அருவும் உருவும் ஒன்றற்கொன்று மாறான குணமுடையனவாதலினால் அருவுருவப்பொருளென்று சொல்லப்படத்தக்க பொருள் ஒன்றுமில்லை. மேலும் அருவுருவப் பொருள் என்றால் சந்திரனைப்போற் சில காலந் தோன்றியும் சில காலம் மறைந்தும் நிற்கும் பொருள் என்றுஞ் சொல்ல முடியாது. ஆன்மா அத்தன்மையான பொருளாயின், சந்திரனைக் காண்பதுபோல் அதையும் காணக்கூடும். ஆயின் அது காணப்படக்கூடியபொருள் அன்று.

பாதஞ்சலர் ஆன்மா ஆகாயம்போல் அருவும் அவிகாரியுமாய் நிற்கும் என்பர். அது அவிகாரியாயின், உடம்பில் தம்முள் மாறுபட்ட பல தொழில்கள் எங்ஙனஞ்செய்விக்கும்?

வைசேடிகர் உயிர் அசித்தென்றும் அது மனத்துடன் சேர்ந்து சித்தாகும் என்றும் சொல்வர். சித்து அசித்தாதலும் அசித்துச் சித்தாதலும் எக்காலத்து மில்லாமையினால் இக் கொள்கையுந் தவறு. சைவருள் ஒருசாராரும் பட்டாசாரியரும் ஆன்மா சுத்தசித்தென்பர். அது சுத்த சித்தாயின் கருவிகளுடன் சேராது. கருவிகளுடன்சேர்ந்தாலன்றி அதற்கு அறிவுண்டாகாமையினால், அது சுத்த சித்தென்பதுந் தவறு.

பாஞ்சராத்திரிகள், ஆன்மா உடம்பிற்குள் பரமாணுவளவாய் நிற்கும் என்பர். அங்ஙனமாயின் அது நவத் துவார முள்ள உடம்பிற்குள் ஒருகணமாயினும் நிற்கவும் பாரந் தாங்கவும் முடியாது. மேலும் ஆன்மா அணுவாயின் அது அநித்தியமாயும் இருத்தல்வேண்டும். ஏனெனில் அணு எத்துணைச்சிறிதாயினும் அதற்கும் அவயவம் உண்டு. அவயவமுள்ளதெதுவோ அதற்கு அழிவும் உண்டு.

மிருதிநூலார் ஆன்மா இருதயத்தில் நிற்க அதின் அறிவு விளக்கொளிபோல் எங்கும் வியாபிக்குமென்பர். அது ஒரு இடத்தில் நிற்குந் தன்மையதாயின் அது உருவப்பொருளாதல் வேண்டும். மேலும் குணம் குணியளவேயன்றி அதற்குமேற் செல்லமாட்டாமையால், அதினறிவு அது நிற்குமிடத்துக்கு அப்பாற் செல்லமாட்டாது. விளக்கொளியானது அதின் சூக்குமவடிவன்றி அதின் குணமன்று,

சமணர் ஆன்மா உடம்புமுழுவதும் நிறைந்து நிற்கும் என்பர். அங்ஙனமாயின் உறக்கம் ஐம்பொறியும் ஒருங்கே அறியாமை, அறிவினளவு உடம்பினளவுக்கு ஒத்திராமை உடம்பைக் குறைக்க அறிவு குறையாமையாகிய இவை நிகழ்தல் கூடாது.

ஐக்கியவாதிகள் ஆன்மா கடவுளைப்போல் வியாபியாய் நின்று அறியும் என்பர். வியாபியாயிருக்கும் ஆன்மா அவத்தைகள் அடைதல் ஐம்பொறியினாலும் ஒருங்கே யறியாமை உடம்பினுக்குள் ஏகதேசமாய் நிற்றலாகிய இவை எவ்வாறு நிகழும்? மாயாகாரியம் அதின் அறிவைத் தடை செய்வதினால்

அது உறக்கம் முதலியன அடைந்து ஏகதேசியாய் நிற்குமெனல் பொருந்தாது. மாயாகாரியம் அறிவை விளக்குவதன்றித் தடை செய்யாது. முன் சுத்தமாயிருந்த உயிரை மாயாகாரியம் அசுத்தப்படுத்துவதெங்ஙனம்? முன் சுத்தமாயிருந்த உயிருடன் அது இடையில்வந்து சேர்ந்தது எனில் வீடு பெற்றபின்பும் அது வந்து சேரும்.

ஆசிரியர்து கோள்கை: ஆன்மாவானது சித்தின் சேர்க்கையினால் சித்தாகியும், அசித்தின் சேர்க்கையினாலசித் தாகியும், வசிப்படையும் வியாபகம் உடையதும் ஆணவ மலத்தினால் மறைந்துகிடக்கும் இச்சாஞானத்தொழில்களுடையதாய் பசுவெனப்பட்டு தூல சித்தாலுடையதுமாம். ஆணவ மலத்தினால் கேவலாவத்தையை யடைந்த ஆன்மா காரணசரீரத்தைப்பெற்றதின் பயனாய் அறிவு இச்சை செயல்கள் சிறிது பொருந்தும். பின் கலை முதலியவற்றா லுண்டாகும் கஞ்சுக சரீரத்தைப் பெற்று அறிவு இச்சை செயல்க ளதிகமாய்ப் பொருந்தும். பின் அந்தக்கரணங்க ளடங்கியிருக்கும் குண சரீரத்தைப்பெறும். பின் சூக்கும தேகத்தைப்பெற் றதினால் சூக்குமவினைகள்புரிந்து அவற்றின் பயனை யனுபவிக்கும். பின் தூலசரீரத்தைப்பெற்று தூல வினைகள் செய்து அவற்றின் பயனை யனுபவித்தும் பிறந்து இறந்து உழன்று திரியும். மேற்சொல்லிய காரண சரீரம் முதலிய ஐந்தும் ஆன்மாவுக்கு வடிவாய் முறையே ஆனந்த மய கோசம், விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம், பிராணமய கோசம், அன்னமயகோசம் எனப்படும்.

கேவலாவத்தையின் ஆன்மா ஆணவமலத்துடன் மாத்திரஞ் சேர்ந்துநிற்கும். மேற்சொல்லிய கோசங்கள் ஐந்துடனும் அது வேற்றுமையின்றி நின்று அவற்றை ஆண்டு நடத்தும். அது அவற்றை நடத்துதல் முறையே; தேரை நிலக்கிற் செலுத்துதலும மரப் பாவையை இயக்குதலும் தோற்பாவையைக் கூத்தாட்டுதலும் பரகாயப் பிரவேசஞ் செய்தலும் வேடங்கட்டி ஆடுதலும் போலும். எனது மனை, பொருள் முதலியன என்னில் வேறாயிருத்தல் போல, எனது உடல் பொறி பிராணன் உணர்வு முதலியனவும் என்னில் வேறு என்பது தெளிவு.

நான் என்பது ஆன்மாவாகலால் ஆன்மா வேறு, உடல், பொறி முதலியன வேறு.

சிலர் எனது உடல் என்று சொல்வதுபோல் எனது ஆன்மாவென்றும் சொல்லும் வழக்கம் உலகத்தில் இருக்கையி னால், நான் வேறு ஆன்மா வேறு என்று சொல்லலாமோ? என்னும் ஆட்சேபகதிற்குச் சமாதானம் எனனவெனில்; எனது ஆன்மாவெனறு சொல்பவர், ஆன்ம சொரூபம் அறியாத மூட ரன்றிப் பிறரல்லர் என்பதாம். சில சமயங்களில் என்ற னான்மா வென்னும்போது அது என்னோடு சம்பந்தமான கடவுளைக் குறிக் கும். புத்தியை மனம் என்றும் மனத்தைப் புத்தியென்றும்சித்தத் தைச் சீவனென்றும் சீவனைச் சித்தமென்றும் சிவனைச சீவ னென்றும் சீவனைச் சிவனெனறும் சொல்லும் வழக்கம் உலகத்தி லுண்டு. இவ்வழக்கப்படி பிரயோகிக்கப்படும் பெய ராகு பெயரெனப்படும், உபநிடதங்களில் பஞ்சகோசங்களுமான்மா வென்று அழைக்கப்படுவது மெய். அவற்றை ஆன்மாவெனல் விளக்குத் தகழியை விளக்கெனல்போல்வதன்றிப் பிறிதன்று. விளக்கு முறிந்தது என்றால் அதின் தகழி முறிந்தது என்று அர்த்தமாம். அவ்வாக்கியத்திலுள்ள விளக்கு என்னும் பெயர் தானியாகுபெயர். ஆகலால ஆன்மா வேறு பஞ்ச கோசங்கள் வேறு. ஆன்மா அன்னமய கோசங்கள் முதலிய நான்கு கோசங்களை ஒவ்வொன்றாய்விட்டு ஐந்தவத்தைப்பட்டு விழித்த பின் அவ்வவத்தைகள் யாவும் தனக்குண்டாயின என அறி கின்றமையால் ஆன்மா வேறு கோசங்கள் வேறு என்பது வெளிப்படை,

ஆன்மா கடவுளைப்போல் சுத்த சித்தலலாமையிஙினால், அது மாயாகாரியங்களின் சகாயமின்றி அறியமாட்டாது. அதற் கும் இவற்றிற்கும் உள்ள சம்பந்தம் 'அரசருக்கும் அமைச்ச ருக்கும் உள்ள சமபந்தம்போலும். அது அங்ஙனம் அறிவதி விருந்து அது அநாதியே ஆணவமலத்தில் மறைந்து அருவாய் நிற்றல் பெறப்படும். அரசனொருவன தன் சேனையுடன் வெளியேபோய் அரண்மனைக்குத் திரும்பி வந்தபின் சேனையை யும காவற்காரரையும் இன்னும் பிறரையும் அவரவர் நிற்க

வேண்டிய வாயில்களில் நிறுத்தி தான் தனியே அந்தப் புறத்திற் செல்லுமாறுபோல, ஆன்மா கருவிகளை விட்டுவிட்டுச் சென்று, ஐவகை அவத்தைகள் அடையும். அவ்வவத்தைகளாவன: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பனவாம். அவற்றை யடையும்போது ஆன்மா நிற்கும் இடங்களாவன முறையே புருவம் கழுத்து இருதயம் நாபி மூலம் என்பன. அவற்றுக்குரிய கருவிகள் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும மூன்றும இரண்டும் ஒன்றுமாம். ஐந்து அவத்தைகளும் கீழநோக்கிச் செல்வதினாலும் மேல் நோக்கிச்செலவதினாலும் இருவகைப்படும். சாக்கிரத்திலிருந்து சொப்பனம்; சொப்பனத்திலிருந்து சுழுத்தி; சுழுத்தியிலிருந்து துரியம்; துரியத்திலிருந்து துரியாதீதம் இது கீழ்நோககிச் செல்லுமுறை. இம்முறை பிறவிக்கு வித்தாகும். இதற்கு மாறான முறை மேல்நோக்கிச் செலலும் முறை. அது பிறவி அறுத்தற்குக்காரணம், மேலும் சாக்கிராவத்தையிலும் சாக்கிரம் முதலிய பஞ்ச அவத்தைகளும் உண்டாகும. அவை நுண்ணுணர்வினால் அறியப்படும். சுத்தாவத்தையிலும் ஐவகை அவத்தைகளுண்டு. அவை உண்மை அதிகாரத்தில் விளக்கப்படும். அவற்றுள் சாக்கிராவத்தையில் சுத்த தத்துவங்கள் ஐந்தும் சொப்பனத்தில் முதல் நான்கும், சுழுத்தியில் முதல மூன்றும், துரியத்தில் முதலிரண்டும், துரியாதீதத்தில் முதல ஒன்றும், கலை முதலியவற்றைச் செலுத்தும். இப்பஞ்ச அவத்தைகளுக்கும் காரணமான அவத்தைகளும் உளவாதலினால் இவை காரியாவத்தைகள் எனப்படும். கேவலாவத்தை சகலாவத்தை சுத்தாவத்தை என்னும் மூன்றும் காரணாவத்தைகள்.

கேவலாவத்தையில் ஆன்மா தனது இச்சா ஞானக்கிரியைகள் ஆணவமலத்தினால் மறையப்பெற்றுத் தனித்து நிற்கும், சகலாவத்தையில் அது தனுகரணாதிகளுடன் கூடி அவை மூன்றும் ஓரளவில் விளங்கப்பெற்றுநிற்கும். சுத்தாவத்தையில் அது பஞ்சமலங்களும் நீங்கி, சிவத்துடனகூடி அறிவு வியாபிக்கப்பெற்று நிற்கும், சகலாவத்தையில தேகம் பிறப்பிறப்புக்கள் அராகம் முதலிய குணங்கள் அறிவு இச்சை செயல்கள் விளஙகுதல் போகமனுபவித்தல் மலத்தினின்று பிரிதல் ஏக

தேசியாதல் என்னும் பத்துக்குணங்களுமுண்டு. இக்குணங்களில் ஒன்றாயினும் கேவலாவத்தையில காணப்படமாட்டாது. சுத்தாவத்தையில் இருவினையொப்பு சத்திநிபாதம் குருவருள் ஞானசாதனம் மும்மலநீக்கம் வாசனைநீக்கம் திருவருள்கூடுதல் என்னும் எட்டு இலட்சணங்களும் காணப்படும்.

## ஐந்தாம் சூத்திரம்.

இச்சூத்திரத்தில் திரோதான சத்தியினியல்பு கூறப்படுகின்றது. ஆன்மாவானது தன்னை யறியமாட்டாத பொறி புலன் முதலியவற்றை தானறிந்து அறிவித்து உடனிற்குமாறு போலச் சிவமும் தன்னை யறியமாட்டாத ஆன்மாவைத் தான் அறிந்து அறிவித்து உடன் நிற்கும். திரோதான சத்தியைச் சிவமெனல் உபசாரம் ஆட்சேபம் சிவமே உயிர்களுக்கு அறிவிக்குமெனில், இவை எல்லாவறறிற்கும், அறிவில் ஏற்றத் தாழ்வுகளுக்கு நியாயமின்று. அங்ஙனம இருப்பதறகுக் காரணம் உயிர்களது கன்மமெனில் சிவத்தின் சகாயம் அவசியம் இன்றெனல் வேண்டும். இவ்வாட்சேபம் சரியானதன்று. தாமரை மலர்வதற்குத் தாமரையே யன்றிச் சூரியனும் உழவு முதலிய செயல்களின் பயனுக்கு அச்செயல்களே யன்றி வயல் நிலமும் வேண்டியனபோல உயிர்கள் தத்தம் கன்மத்துக்குத் தக்கபடியறிவதற்கும் சிவத்தின் சகாயம வேண்டும். ஆன்மா ஒன்றை வேறொன்றால் அறிதலானும அஃதாவது ஒரு விடயத்தை ஒரு கருவியினாலறித லானும் அறிந்தவற்றை மறத்தலானும் அறிவிக்க அறிதலானும் அறியுந்தன்னை இயல்பாய் அறியாமையினானும் தானே எதையும் அறியத்தக்கதன்று. ஆன்மா, கருவி, கலை முதலிய தத்துவங்கள்; அறி பொருள் காலம் நியதி தேகம் பிரமாணம் வைகரி முதலிய நான்கு வாக்குக்கள் என்பவற்றுடன் அறிவிப்பவனுங் கூடி நின்று அறிவித்தாலமாத்திரம் அறியும். அல்லாவிடில் அறியமாட்டாது. சுருக்கிச் சொல்லுகில் சிவம் அறிவிக்காமல் அது அறியமாட்டாது. சிவம் அறிவதற்கு மேற்கூறியன வேண்டுவனவல்லவாதலினால், சிவம் தானே அறிந்து

அதற்கு அறிவித்து உடன் நிற்கும்; சிவத்தின் சகாயமின்றி உயிர் எதையும் அறியும் ஆற்றல் இலது என்பதற்குப் பிரமாணம் மேற்கூறிய யுத்திமாத்திரமன்றிச் சுருதியுமாம். சிவத்தின் சந்நிதியில் மாயாகாரியங்களினால அதற்கு அறிவுண்டாகும். அக்காரியங்கள் சிவத்தின் முன் முனைத்து நிற்கமாட்டாமையினால் சிவம் தானே யறிவதற்கு அவை வேண்டுவனவல்ல. சிவம் உலகத்தைத் தனக்குத் தேகமாகவும் யோனிபேதங்களை யுறுப்புகளாகவும் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி முதலிய சத்திகளை அந்தக்கரணங்களாகவும் கொண்டு உயிர்களுக்கு அறிவிக்கும். சிவம் உயிர்களைப் பிறப்பிறப்புகளுக்குட்படுத்தி அவற்றிற்கு ஏகதேச அறிவைப் பிறப்பித்துச் சிற்றின்பம் கொடுத்தலுக்கு நோக்கம் அவற்றிற்குப் பக்குவம் வரச்செய்து வியாபக அறிவையுண்டாக்கிப் பேரின்பங்கொடுத்தலாம். சிவத்தினருளே சத்தி யன்றி வேறொன்றன்று குணகுணிகள் ஒன்றைவிட்டொன்று பிரிந்திருத்தல கூடாமைபோலச் சிவமும் சத்தியும் ஒன்றைவிட்டொன்று பிரிந்திருத்தல் கூடாது. வேறொருவிதமாய்ச் சொல்லுகில் சிவமின்றிச் சத்தியில்லை சத்தியின்றிச் சிவமில்லை. சிவத்திற்குத் திருவருள் இயற்கைக்குணமாதலால் அது ஒருஉயிரையாயினும் கைவிடாது. உயிர்களனைத்திற்கும் தத்தம் கன்மத்துக்குத் தக்கபடி போகம் கொடுத்து ஈற்றில் மோட்சம் அருளும என்பது நிசசயம்.

---

## ஆறாம் சூத்திரம்.

இச்சூத்திரத்தில் பதி இலட்சணங்கள் கூறப்படுகின்றன. சிவன் சுட்டி அறியப்படத் தக்கவராயின், நாம் அவரைச் சடமென்றும், ஆதி யந்த முடையவரென்றும், எவ்வாற்றானும் அறியப் படக் கூடாதவராயின் அவர் இல்பொருளென்றும் சொல்லல் வேண்டிய. சிவனுக்கு எதிரே பாசஞானம் நிலை நிற்கமாட்டாமையினால் அவர் சிவஞானத்தினாலன்றி வேறெவ்வுபாயத்தினாலும் அறியப் படத் தக்கவரல்லர். அவர் சித்தாச்

சத்தாகி நிற்பர். சுட்டறிவாவது எதுவோ? அது அசத்து எனெனில் அது ஆதியந்தமுடையதும்; தனுகரணபுவனபோகமென பல வகைப்படுந் தன்மை யுடையதுமாம். இத்தன்மையுள்ள அறிவினால் அறியப்படுவன அனைத்தும் அசத்தாவனவன்றி அவற்றுள் ஒன்றாயினும் சத்தாகமாட்டாது. பூமி சுவர்க்கம் பிரமலோகம் வைகுந்தம் முதலிய இடங்களும மற்றுமுள்ள பூதபௌதிகங்களும் வாஸ்தவத்தில் உள்பொருட்கள் அல்ல. இந்திரசாலம், கனு, பேய்த்தேர் முதலியனபோல இல்பொருட்களாம். ஆதலால் உலகத்தை அசத்தெனல் தவறன்று.

அறியப்படும் பொருள் அசத்தாகலால் அறியப்படாத பொருளே சத்து என்பதினு லுண்டாகும் குற்ற மென்னை? விடை அப்படிப்பட்ட பொருளுடன் நமக்கு எப்போதாயினும் சம்பந்தமுண்டாக இடமின்று. அதினுல் ஒரு செயலும் நடைபெறமாட்டாது. அது ஆகாயத்தாமரை ஆமை மயிர்க் கயிறு முதலியனபோல் எக்காலத்தும் இல்பொருளாவதன்றி உள்பொருளாகாது.

மேற்கூறிய நியாயங்களினுல் பிரமம் உள்பொருளுமன்று இல்பொருளுமன்று, இரண்டுமென்று வேறுமன்று ஆதலால் அது அநிர்வசனப்பொருள் என்று சொலவது ஏன் தவறு? விடை அநிர்வசனப்பொருள் எனப்படுவது உள்பொருளாய் அல்லது இல்பொருளாய் இருத்தல்வேண்டும். அது இல்பொருளாயின் இல்பொருளுக்கு மேற்கூறிய குற்றங்கள் யாவும் அதற்கும் பொருந்தும். ஆதலாலது உள்பொருள் எனல் வேண்டும். அங்ஙனமாயின் பிரமம் அநிர்வசனப்பொருளன்று உள்பொருளாம். பிரமம் உள்பொருளாயின் நாம் அனதை யறியமுடியாது. சுட்டறிவினு லறியப்படுவன வனைத்தும் சடமு மழியுந் தன்மை யுடையனவும் என்று முன்னரே நாட்டப் பட்டது. பிரம மல்லது சிவம் சுட்டறிவினைக் கடந்து நிற்கும் சித்துப் பொருளாகலா லதை நாமத னருளினு லறிவதன்றி வேறெவ்வழியினுலு மறியமுடியாது. தன்னருளினு லறியப்படுஞ் சிவமானது தன்னை அறியு மறிவுமாய் வேறுமாய் உடனுமாய் நிற்கு மியல் புடையது.

ஆட்சேபம் பிரமத்தை அதனருளினால் மாத்திரம் நாமறியலாம் என்று சொல்வது சரியன்று. பாதஞ்சலர் சொல்வது போல நாம் அதை யோக பாவனையினாலறியலாமென்று ஏன் சொல்லக்கூடாது?

சமாதானம் யோக பாவனை கருவிகளுடன் கூடி நின்று செய்வதானால் அது சகலாவத்தைக் குரியதாகும். கருவிகளின்றிச் செய்வதானால் அது கேவலாவத்தைக் குரியதாகும், சுத்தாவத்தையிலன்றி யேனையிரு அவத்தைகளிலும் சிவத்தை யறிய முடியாது. மேற்சொல்லிய விதம் இரண்டுமின்றிப் பாவிப்பதெனில் அப்பாவனை வெறும்பாழ் அல்லது சூனியமாம். பாவனைக்கு எட்டாத பொருளை எட்டிய பொருளாக நினைத்துப் பாவிப்பவன் அதைத் தானாகப் பாவிப்பதென்னில் அப்பாவனை போலியாம். ஆதலால் சிவத்தை அதனருளினால் அறிவதே தக்க முறையாம்.

சிவமும் உயிரும் ஒன்றென்று ஏகான்மவாதிகள் கூறுவது சரியன்று. சிவமும் உயிரும் ஒன்றென்று ஒருவன் சொல்லுவானாயி னப்படிச் சொல்பவன் வேறு சொல்லப்படும் பொருள் வேறாதலும் வேறென்று சொல்வானாயின், அது வேறென்னும் அறிவுக்குளட்டாமையினால் உடனாதலும்; அவ்விருவகையுமாய்மாத்திரம நிற்கும் என்று சொலவானாயின்; அது அங்ஙனம்மாத்திரமல்ல; அது உயிருடனொன்றி நின்று உயிரே சிவம் என்னும்படி ஒன்றாதலும் பெறப்படும். சுருக்கிச் சொல்லுகில் சிவம் உயிருமாய் உடனுமாய் வேறுமாய் நிற்கும்.

---

# ஏழாம் சூத்திரம்.

இச்சூத்திரத்தில் சாதனங்களைச் சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரமுடையது எதுவென்பது கூறப்படுகின்றது, சத்த சத்துக்களைப் பகுத்தறிவது யாது? சிவாத்துவித சைவர் சத்தாகிய சிவமே அசத்தாகிய பொருட்களனைத்தையும் அறியும்

என்பர். அவர்கள் சொல்வது சரியன்று. சிவம் வியாபக அறிவாகையால் எல்லாவற்றையும் ஒருங்கே அறிவதன்றி ஒவ்வொன்ருய் அறிவதன்று. சிவம் உயிரின் பொருட்டுக் கருவி கரணங்களில் நின்று ஒவ்வொன்ருய் அறியும் என்றும் சொல்வது பொருந்தாது. ஏனெனில் இரவிமுனிருள்போலச் சத்தெதிர் அசத்து முனைத்து நிற்க மாட்டாது. சிவ சங்கிராந்தவாதிகள் அசத்தாகிய கருவியே ஆன்ம சந்நிதியில் சிவ கரணமாய்நின்று அறியுமென்பர். இதுவும் ஏற்றற்பாலதன்று. கருவி தானே யறியுந் தன்மையுடையதன்று. அதனுதவியால் அறியுந்தன்மையுடைய வேருெரு பொருள் அறியும். சத்தையும் அசத்தையும் அறிவது ஆன்மாவேயாம். அது சத்துமன்று அசத்துமன்று. அவை இரண்டெனும் அதுவதுவாய் நிற்கும் இயல்புடையதாதலால் சதசத் தெனப்படும். சிவம் சூக்கும சித் தாகலால் அதனெதிர் அசத்து நிற்கமாட்டாது தூலசித்தாகிய உயிரின் முன் அது நிற்கும். இவ்வித்தியாசத்திற்கு கடலும் நீரும் உப்பும் நல்ல உவமை. உப்புக் கடலுடன் சேராது நீருடன் சேர்ந்து நிற்கும். அதுபோலப் பாசம் சிவத்துடன் சேராது ஆன்மாவுடன் சேர்ந்திருக்கும். சிவமும் ஆன்மாவும் பாசமும் அநாதி. உயிர் தானே யறியாது அறிவிக்க அறிவதினுல் அது தூலசித்தென்றும் சிவம் ஒருஉதவியுமின்றித்தானே யறிவதினுல் சூக்குமசித்தென்றுத் சொல்லப்படும். ஆகலால் சிவம் தனது அருளினுல் ஆன்மாவைப் பாச பந்தத்தி லிருந்து விடுவித்து அதை முத்தியிற் சேர்க்கும் ஆற்றலுடையது.

## எட்டாம் சூத்திரம்.

இச்சூத்திரம் முத்திசாதனத்தையும் அதற்குரிய வழி வகைகளையும் கூறுகின்றது.

ஓர் அரசிளங் குமரன் தன் மடமையால் வேடர் கையில் அகப்பட்டுத் தன் தந்தையாகிய அரசனை மறந்து மயங்கித் துயருறும்போது, அவ்வரச னவன்மேலுள்ள அன்பினுல் அவனைத் தேடிப்போய்க் கண்டு பிடித்து, அவன் தன் மக னென்பதை

அவனுக் குணர்த்தி, அவனை வேடரினின்றும் பிரித்துத் தன் அரண்மனைக்குக்கூட்டிக்கொண்டுபோய் தனக்குரிய சிறப்புக்களை அவனுக்குச் செய்வதுபோல; சிவன் குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்து ஐம்பொறிச்சுழியில் அகப்பட்டு வருந்தும் உயிருக்கு அதின் பக்குவங்கண்டு அதற்கு உண்மையை உணர்த்தித் தமது திருவடிகளிற் சேர்த்தருள்வர்.

உயிர்கள் பந்தவேறுபாட்டால் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என மூவகைப்படும். அவை முறையே ஆணவம், ஆணவம் கன்மம், ஆணவம் கன்மம் மாயை என்னும் மலமுடையன. சகலவர்க்கத்திற்கு மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநிபாத முறைமையினால் உணர்த்தவேண்டுவதினால் அவ்வர்க்கத்திற்குச் சிவன் குருமூர்த்தியை அதிஷ்டித்துச் செய்யும் தீட்சை சாதார தீட்சை எனவும் முதலிருவர்க்கத்திற்கும் தீவிரம் தீவிரதரம் என்னும் சத்திநிபாத முறைமையினால் முறையே உள் நின்றும் முன் னின்றும் உணர்த்தவேண்டுவதினால், அவ்விருவகை வர்க்கத்திற்கும் அவர் செய்யும் தீட்சை நிராதார தீட்சை எனவும் கூறப்படும். தீட்சையானது நயன தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மானத தீட்சை, சாத்திர தீட்சை, ஒளத்திரி தீட்சை முதலிய பலவகைப்படும். ஒளத்திரி தீட்சையானது; ஞானவதி கிரியாவதி என்றிருவகைப்படும். ஞானவதி குண்டம் மண்டலம் முதலியவற்றை மனத்தாற் கற்பித்துச செய்யவேண்டிய கிரியைகளை அகத்தே செய்வதாம். கிரியாவதி அவற்றையெல்லாம் புறத்தே யமைத்து; அக்கிரியைகளைச் செய்வதாம். மேலும் ஒளத்திரி தீட்சை, நிர்ப்பீசம், சபீசம் என வேறிருவகைப்படும். அனுஷ்டிக்கவேண்டிய சமயாசாரங்களை அனுஷ்டிக்குந் திறமையிலாதவர்களாகிய பாலர் வாலிபர் விருத்தர் ஸ்திரிகள் வியாதிஸ்தர் முதலியோருக்குச் செய்யுந் தீட்சை நிர்ப்பீச தீட்சையாம். இத்தீட்சை பெறுவோருக்கு நித்திய நைமித்திக கருமங்கள் செய்வதற்கு அதிகாரங் கொடுக்கப்படாமையினால், இது நிரதிகாரதீட்சையென்றும் கூறப்படும். நிரதிகார தீட்சை

சமயதீட்சை விசேஷதீட்சை நிர்வாணதீட்சை என மூவகைப்படும். நிர்வாண தீட்சை உடனே முத்தியைப் பயக்கும் சத்தியோ நிர்வாண தீட்சை எனவும் மரணத்தின் பின் முத்தியைப் பயக்கும் அசத்தியோ நிர்வாண தீட்சை எனவும் இருவகைப்படும்.

சபீசதீட்சையாவது மலபரிபாகமும் கல்வியறிவும் சமயாசார நெறி நிற்கும் ஆற்றலும் உடையோருக்குச் செய்வது. இத்திட்சை செய்யும் ஆசாரியன் அவர்களுக்கு நித்திய நைமித்திக காமிய என்னும் மூவகைக் கன்மமும் செய்ய அதிகாரம் கொடுப்பன். இதைப் பெற்றவர் சாதகர் ஆசாரியர் என்னும் இருவகுப்பினராவர். மேலும் இது இல்லறமுடையார்க்குச் செய்யப்படும் லோகதருமிணி என்றும் துறவறமுடையார்க்குச் செய்யப்படும் சிவதருமிணி என்றும் இருவகைப்படும். சமயம் விசேடம் நிர்வாணம் அபிஷேகம் என்னும் தீட்சாபேதங்கள் அனைத்தும் நிர்ப்பீசம் சபீசம் என்னும் இரண்டிலும் அடங்கும்.

சிவன் ஞானாசாரியனை அதிஷ்டித்துநின்று மந்திரம் முதலிய ஆறத்துவாக்களும் ஒன்றிலொன் றடங்க இறுதியிலுள்ள கலை திரோதான சத்தியிலும் அது சிவத்திலும் அடங்குமாறுணர்ந்து, அவ்வாறடக்கி நிர்ப்பீசம் சபீசம் எனத் தனித்தனி இருவகைப்படும் மேற்கூறிய ஞானவதி கிரியாவதி என்னும் இரு தீட்சையில் ஒன்றினால் ஆறத்துவாக்களையுஞ் சோதித்துப் பிறவிக்குக் காரணமாகிய மல சத்தியைக்கெடுத்து சிவம் பிரகாசித்தற்கு வேண்டிய ஞானத்தைக்கொடுத்தருள்வர். மந்திரங்கள் பதங்களிலும் பதங்கள் வன்னங்களிலும் வன்னங்கள் புவனங்களிலும் புவனங்கள் தத்துவங்களிலும் தத்துவங்கள் கலையிலு மடங்கும். கலை ஐந்துவகைப்படும். அவை யாவன: நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதம் என்பன. நிவிர்த்தி கலைக்கு இரண்டு மந்திரங்களும், இருபத்தெட்டுப் பதங்களும், ஒரு எழுத்தும், நூற்றெட்டுப் புவனமும், பூமி தத்துவமும் உரியன இக்கலைக்குத் தெய்வம் பிரமா. பிரதிட்டா கலைக்கு இரண்டு மந்திரங்களும், இருபத்

தொரு பதங்களும், இருபத்துநாலு வன்னங்களும், ஐம்பத்தாறு புவனமும், இருபத்துமூன்று தத்துவங்களும் உரியன. இதற்குத் தெய்வம் விஷ்ணு. வித்தியா கலைக்கு இரண்டு மந்திரங்களும் இருபது பதங்களும் ஏழு வன்னங்களும் இருபத்தேழு புவனமும் ஏழு தத்துவங்களும் உரியன. இதற்குத் தெய்வம் உருத்திரன். சாந்தி கலைக்கு இரண்டு மந்திரங்களும் பதினொரு பதங்களும் மூன்று வன்னங்களும் மூன்று தத்துவங்களும் உரியன. இதற்குத் தெய்வம் மகேசுரன. சாந்தியாதீத கலைக்கு மூன்று மந்திரங்களும் ஒரு பதமும் பதினாறு வன்னங்களும் பதினைந்து புரங்களும் இரண்டு தத்துவங்களும் உரியன. இதற்குத் தெய்வம் சதாசிவன.

ஆகவே மந்திரங்கள் பதினொன்று. பதங்கள் எண்பத்தொன்று. வன்னங்கள் ஐம்பத்தொன்று. புவனங்கள் இருநூற்றிருபத்துநாலு. தத்துவங்கள் முப்பத்தாறு.

ஆணவ மலமும் ஆகாமிய வினையும் சஞ்சித கன்மமும் அதற்குப் பற்றுக்கோடாகிய மாயையும் முறையே சிவனது ஞான சத்தியினாலும் கிரியா சத்தியினாலும் அழியும். பிராரத்துவ கன்மம் அனுபவத்தினாற்றீரும். ஆதலால் தீட்சை முத்திக்கு இன்றியமையாச் சிறப்புடையது; தீட்சையின்றி யத்துவ சுத்தி கைகூடாது. அத்துவ சுத்தி யாவது அத்துவாக்களாறிலுங் கட்டுப்பட்டிருக்குஞ் சஞ்சித கன்மங்களை யழித்தல்.

ஒருவன் மல பரிபாகம் எய்த அதிக காலஞ் செல்லும். அதற்கு முன் அவன் பல படிகள் ஏறவேண்டும். அப்படிகளாவன:—பாஞ்சராத்திரம் முதலிய புறச் சமயங்களை அனுஷ்டித்தல், சைவம் முதலிய அகச்சமயங்கள் ஒன்றிற் சேர்தல், மிருதி நூல்களைக் கைக்கொள்ளுதல பிரமசரியம் முதலிய ஆச்சிரமங்களின் வழி நிற்றல், தவம் புரிதல, கலைக் கியானங் கற்றல், வேதம் படித்தல். சிவ புராணம் படித்தல், சைவ சித்தாந்த நெறியைச் சேர்ந்து சரியை கிரியை யோகம என்பவற்றை முறையே அனுஷ்டித்தல் என்பன. இப்படிகள்

எல்லாம்கடந்தோரே மலபரிபாகமுடையோர். அவர்களுக்கே பர முத்திக் கேது வாகிய சிவஞானம் உதிப்ப தன்றி ஏனையோ ருக்கு அது உதியாது.

முத்திவகைகள்:—ஸ்திரிபோகம் சுவர்க்கம் பஞ்ச கந்தங் களும் அழிதல் அட்டகுணமடைதல் அறிவுகெடுதல் பிரகிருதி புருஷ விவேகம்: சிவசமவாதம் என்பன. இம்முத்தி வகைகள் எல்லாம் நிலம்முதல் நாதம் ஈறுயுள்ள முப்பத்தாறு தத்துவங் களுக் குட்பட்டனவாம். சைவசித்தாந்த முத்தியாவது முப் பத்தாறு தத்துவங்களையுங் கடந்த சிவனது திருவடியைச் சேர்தல்.

நூல்கள் முதல்நூல் வழிநூல் சார்புநூல் பூர் பட்ச நூலெனப் பலவகைப்படும். வேதாகமங்கள் முதல்நூல்கள், ஸ்மிருதி புராணம் முதலியன வழி நூல்கள். வேதாங்கங்கள் சார்புநூல்கள் புறச்சமயநூல்கள் பூர்வபட்சநூல்கள், வேதா கமங்களை ஒழிந்த ஏனைய நூல்கள் முதல் நூல்கள் எனப்படத் தக்கனவல்ல. நான்கு வேதங்களும் உலகத்தவர்கள் எல்லாருக் கும் பொது நூல்கள்; சிவாகமங்களோவெனில சத்திநிபாத முடையோருக்குமாத்திரமுரிய சிறப்புநூல்கள் வேதங்களின் உண்மையான கருத்தை யறிவது சிற்றறிவுடைய மனுஷருக்கு அசாத்தியம் என்பதை யறிந்து சிவபிரான் தாமே அதை ஆக மங்களில் வெளியிட்டிருக்கின்றனர். உபநிடதங்கள் வேதாந் தம் என்றும் ஆகமங்கள் சித்தாந்தம் என்றும் அழைக்கப்படும் ஆகவே உபநிடதங்களின் உண்மைப்பொருளே ஆகமங்களின் அடக்கமன்றிப் பிறிதன்று. ஆதலால் சைவசித்தாந்தநெறியே முத்திக்கு நேர் நெறி என்று துணியப்படும். இதை மறுப்ப வர்கள் விவேகிகள் அல்லர். அவர்கள் முத்திநெறியைக் கண்டு பிடிக்க அநேக ஜென்மங்கள் கழித லவசியம். சர்வ ஞானம, சர்வ முதன்மை, சர்வ காருண்ணியம் என்னும் மூன்று இலட் சணங்களும் சிவபிரானுக்கே உரியன வென்பது முறையே வேதாகமங்களை யருளியதினாலும் உயிர்களுக்கு இன்ப துன்பங் களைக் கன்மத்துக்கு ஈடாய்க் கொடுப்பதினாலும் அவற்றின் பக்குவங் கண்டு அவற்றிற்கு முத்தி யளிப்பதினாலும் பெறப் படும்.

சைவ சித்தாந்த நெறிக்கு சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களுள. சரியையாவது சிவன் கோயிலைக் கூட்டுதல் மெழுகுதல் கோயிற் பூசைக்கு வேண்டிய பூக்கள் கொய்தல் மாலை கட்டுதல் நந்தவனம் அமைத்தல் திருவிளக்கிடுதல் சிவனடியாரை உபசரித்தல் முதலியனவாம். சரியை விதிப்படி அநுஷ்டிப்பவர்கள் சாலோக பதவியை யடைவர். கிரியையாவது சிவபூசை செய்தல கிரியை அநுஷடிப்பவர்கள் சாமீபபதவியை யடைவர். யோகமாவது புலன்களை யடக்கி மூச்சை வசப்படுத்தி சிவனது அருவத் திருமேனியை வழிபடுதல். யோகத்தை அநுஷ்டிப்பவர்கள் சாரூபபதவியடைவர். யோகம் அட்டாங்கமுடையது; அவை யாவன இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்பன. இயமமாவது பாவங்களை விடுதல். நியமமாவது தவஞ்செய்தல் தெய்வம்வழிபடல் முதலியன, ஆசனமாவது யோகஞ்செய்கையிலிருக்கும்விதம் ஆசனம கோமுகம் பங்கயம் முதலியன. பிராணயாமம்—பிராணவாயுவைத் தடுத்தல். பிரத்தியாகாரம் மனத்தைப் பொறிவழி செல்லாமற் றடுத்தல். தாரணை உந்தி இருதயம் உச்சி என்னு மிடங்களிற் சித்தத்தை நிலை நிறுத்தல்; தியானம் சிவமூர்த்தியைத் தியானித்தல்; சமாதி சிவத்தோடு தன்னைப் பொருத்துதல்; ஞானமாவது சகல கலைக் கியானங்கள் புராணங்கள் சாஸ்திரங்கள் அனைத்தையும் நன்கு கற்று ஏனைச் சமயப் பொருட்கள் யாவும் உண்மைப்பொருட்கள் அல்லவென்று உணர்ந்து வேதாகமங்களிற் சொல்லப்பட்டுள்ள பதி பசு பாசம என்னும். முப்பொருளது இயல்பை ஐயந் திரிபறக் கற்றுச் சிவனைத் தரிசித்தற் கேதுவாகிய சிவஞானம் அடைந்து அறிபவன் அறிவு அறியப்படும்பொருள் எனனும் திரிபுடி கழலப் பெற்று சிவனுடன் இரண்டறக் கலத்தல். ஞானத்தை யநுஷ்டிப்பவரே—பரமுத்தி அல்லது சாயுச்சியம் அடைவர்:

ஐந்து வகையான வேள்விகள் உண்டு' அவை யாவன—கன்மவேள்வி, தவவேள்வி, செபவேள்வி, தியானவேள்வி, ஞானவேள்வி என்பன. முதல் நான்கும் போகத்துக்கு வித்தாம். ஓதல் ஓதுவித்தல் நியதின் பொருளை கேட்பித்தல் கேட்டல்

சிந்தித்தல் என ஐவகைப்படும், ஞானவேள்வி ஒன்றுமே வீட்டைத் தரத்தக்க ஆற்றலுடையது. ஆதலால் வீட்டை விரும்புபவன் அவ்வேள்வியையே முக்கியமாய்க் கையாடல் வேண்டும். உண்மைஞானமாவது கேட்டல், கேட்டதனைச் சிந்தித்தல் சிந்தித்த பின் தெளிதல் தெளிந்தவண்ணம் நிட்டை கூடுதல் என நான்குதிறப்படும், இம்முறையே படிப்படியாய் மேற்சென்று நிட்டை கூடியவர்களே முத்தியடைந்தோராவர். இவை நான்குவகைகளையுங் கையாடாது ஓதல் ஓதுவித்தல் கேட்பித்தல் என்னும் மூன்றையுஞ் செய்தவர்கள் பதமுத்திகள் அடைந்து பின் நற்குலத்திற் பிறந்து ஆசிரியனிடம் கேட்டல் முதலியவற்றால் நிட்டை கூடி இறுதியில் முத்தியடைவர். தானம், யாகம், தீர்த்தம, ஆச்சிரமம், தவம், சாந்தி விரதம், கன்ம யோகம் முதலியன விதிப்படி செய்தோர் சுவர்க்கம்போய் அங்கே சிறிது காலம் இன்பம் அனுபவித்த பின் பூமிக்குத் திரும்பி வந்து பிறப்பர். சரியை, கிரியை, யோகம் என்பவற்றை யனுஷ்டிப்பவரோ வெனில் மேற்சொல்லிய மூவகைப் பத முத்திகளில் நெடுங்காலம் வைகி சர்வ சங்கார காலத்தில் சிவானுக்கிரகத்தினால் முத்தியடைவர். சிவானுக்கிரகங்கிடைக்காவிடில் உலகம் திரும்பவுஞ் சிருஷ்டிக்கப்பட்ட பின் பூமியிற் பிறந்து ஞான மெய்தி முத்தியடைவர்.

சிவஞானிகட்குத் தானஞ் செய்தல் முதலிய செயல்கள் அடங்கிய பத்தி நெறியில் நின்றோர் பத முத்தி யடைந்து பின் பூமியில் நற்குடியிற்பிறந்து சரியை கிரியை யோகம் என்பன எளிதிற்கைகூடப்பெற்று ஈற்றில் ஞானமடைந்து முத்தி சேர்வர். நான்கு வேதங்கள் புராணங்கள் ஆகமங்கள் ஆதிய நூல்கள் எல்லாம் வீட்டிற்கு வழி ஞானமே யன்றி வேறொன்றன்று என்று கூற அதற்கு மாறாய் தீட்சையே போதும் ஐவகை வேள்வியே போதும் பத்தியே போதும் என்று பிதற்றும் அறிவிலிகட்கு மெய்யறிவு புகட்டுதல் எவ்வாற்றாலும் கூடாது ஞானம் அல்லாதது எதுவோ? அது அஞ்ஞானம். அஞ் ஞானத்தாற் பந்தமுண்டாவதன்றி முத்தி ஒருபோதும் உண்டாகாது. அஞ்ஞான வகைகள் யாவும் ஒளிமுன் இருள்போல ஞானத்தின்முன் கெட்டொழியும். ஞானமென்று சிறப்பித்துச் சொல்லப்படத்தக்கது திருவடி ஞானமொன்றேயாம். அதற்கும் தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதிகள் என்போர் கூறும் ஞானங் களுக்குமுள்ள வித்தியாசம் மிகப் பெரிது.

சூரியனது சந்நிதியில் சூரியகாந்தக் கல்லினிடத்தில் அக்கினி தோன்றுமாறுபோல் சற்குரு மூர்த்தி மிக்க கருணையுடன் வந்து தோன்றும்போது மேற்சொல்லிய நான்கு ஞான வகைகளுள் முதலாவதாகிய கேட்டலறிவு சீடன் மாட்டுத் தோன்றும். அது தோன்றவே பதி பசு பாசம் என்னும் முப்பொருளும, அவை ஒன்றினொன்று வியாபக வியாப்பியங்களாயிருத்தலும் தோன்றும. பக்குவமுதிர்ச்சியுடையோருக்கு அக்கேட்டலறிவு விரைவில் விருத்தியடையும். அப்போது குருவினது அல்லது உடன் மாணாக்கருள் மூத்தவனது சகாயத்தினால் அவ்வறிவிலுள்ள ஐயம் நீங்குமாறு அதனைச் சிந்தித்தல் உண்டாகும். அது உண்டாகவே நிட்டைகூடவேண்டும் என்னும் விருப்பம் அதிகரிக்கும் இடைவிடாமற் சிந்திப்பதினால் வேறொன்றினும் பற்றின்றிச் சீவன் முத்திநிலை பெற்று விருப்பு வெறுப் பற்றுச் சிவத் தோற்றம் ஒன்றையே கண்டு நிர்விகற்பம் சவிகற்பம் என்னும் இரண்டுக்கு மிடையே சீடன் நிற்பன். குருவருளால அறிவு அறியாமை என்னும் இருவகைப் பாசங்களும் நீங்கப்பெற்றுக் கேட்குமுறையிற் கேட்டுச் சிந்திக்குமுறையிற் சிந்திக்கும்போது கேட்டலறிவு தெளிதலடையும். அப்போது சிவன் ஒன்றிலும் பற்றிலராய் வேறு தோன்றுவர். கேட்கும்போது அவர் பொருட்டன்மையால் பேதமாயும் சிந்திக்கும்போது கலப்பினால் அபேதமாயும் தெளியும்போது அணுவுக்கு அணுவாயும் மகத்துக்கு மகத்தாயு மிருப்பதினால் எல்லாவற்றோடும் ஒற்றித்து நின்றும் ஒன்றிலும் பற்றில்லாதவராய் வேறு தோன்றுவர், இருவினைகளையும் ஞான நூல் ஓதல் முதல் தெளிதல் ஈறாகிய ஞான பூசையினால் கெடுத்திடில் பிறப்பிறப்புக்கள் நீங்கும். எங்ஙனமெனில் ஏகதேசப்பட்டுப் பூமியிற் பிறப்பதற்கும் சுவர்க்க நரகங்களுக்குப் போவதற்கும் இருவினைகளே காரணம். ஏகதேசப்படுதல் நீங்கப் பெற்று சிவனது வியாபகத்திற் கலந்து சீவன் முத்தனாகித் தேகம் நீங்கிய பின் பர முத்தியடைந்து சிவனைப்போல வியாபக அறிவாவன் சீடன்.

ஞான நிட்டையுடையோர் செய்வனவெல்லாம் தவமாகலான், அவர்களுக்கு விதிவிலக்குகள் இல்லை. அவர்களுக்கு

விதிக்கப்பட்டதேசம் இடம் காலம் திக்கு ஆசனம் என்பன வில்லை. அவர்கள் நடந்தாலும் நின்றாலும் உறங்கினாலும் விழித்தாலும் உண்டாலும் பட்டினி இருந்தாலும் படுத்தாலும், சுத்தமா யிருந்தாலும அசுத்தமா யிருந்தாலும் வறுமையால் வருந்தினாலும் செல்வம் அனுபவித்தாலும் அவர்களுக்குத் துன்பம் வந்தாலும் சுகம் வந்தாலும் அவர்கள் போகம் அனுபவித்தாலும் அனுபவியா திருந் தாலும் அவர்களுக்கு ஆசை கோபம் விருப்பு வெறுப்பு முதலியன வந்தாலும் வாராவிட்டாலும் அவர்களுடைய மனமானது ஊசல்போல் அங்கு மிங்கு மலையாது சிவனது திருவடிகளில் அடங்கி ஒரேநிலையில்நிற்கும். இத்தகைய ஞானநிட்டை எய்துதல் வெகு பிரயாசம். எய்தினும் அதைக் குலையாமல் நெடுநேரங் காப்பாற்றுதல் அரிது. ஏனெனில்:—பண்டைப் பயிற்சி வயத்தால் பிரபஞ்சந் தோன்றும். அது தோன்றும்போது சிவன் அண்டத்துக்குள்ளும் புறம்புமாய் நிற்பதைக்காணும்படி முயலவேண்டும். அங்ஙனம் நிற்பதைக் காண்பது அரிதாயின், பிண்டத்தில் நிற்கும் நிலைகளில் ஒன்றின் மூலமாய் அதை யறிந்து அப்போது காணப்படும் பசுகரணங்கள் சிவகரணங்களாக நினைந்து சகல சாக்கிரா வத்தையிலேயே சுத்த துரியா தீத நிலை யடைய முயல்வோர் சிவானந்தப் பெரும்பேறு எய்துவர் என்பது நிச்சயம்.

இவ்வாறு பசுகரணங்களைச் சிவகரணமாகப் பேணி சாக்கிராவத்தையி லிருந்துகொண்டே சுத்த துரியாதீத நிலை யடைய விரும்பி முயல்வோர் அதை அடைந்தோருக்கு ஒப்பாவர். அவர்கள் அரசராய் அரசாண்டு போகபோக்கியங்களை அனுபவித்தாலும், நான் என்னும் அகப்பற்று அற்றவராவர். அந்நிலை யடைய முயலாதோர் எனது என்னும் புறப் பற்று அற்றோராயினும் அவர்களுடைய இருவினைகள் நீங்காமையினால் மீண்டும் மீண்டும் பிறந் திறந் துழல்வர். புணர்ச்சி யின்பம் வாயினாற் பேச அரிதாயினும் புணர்ந்தவர் இருவரும் அதை நன்கறிவர். கன்னிகை காமரசம் அறியாள். அதுபோலப் பக்குவர் சிவனது திருவருளினால் தமது அறிவில் தமது ஆன்மாவையும் சிவத்தையும் அறிவிறந்தறிந்து சிவானந்தம் அனுபவிப்பர். இவ்வுண்மையை அறியமாட்டாத அபக்குவருக்கு

இதை உணர்த்துவதற்கு ஒரு உபாயமும் இல்லை. அவர்கள் தேகத்தினால் மயங்கி ஆன்ம சொரூபம் அறியமாட்டாதவர்கள் ஆகலினால், அவர்கள் தேகத்தின் மூலம் அறியும் அறிவினால் ஆன்மாவிற்குள் இருக்கும் சிவத்தை அறிவோமெனல் வாய்ச் சொல்மாத்திரமன்றி வாஸ்தவமன்று. கருவியறிவிறந்து நின்று அறியாதோர்க்கு கருவி யறிவிற் குரிய தாகிய ஏகதேசக்காட்சி நீங்காது. ஆகலால், பிறவியும் அதற்குக்காரணமாகிய ஆணவ மலமும் அவர்களை விட்டு நீங்கமாட்டா. தன்னை யடுத்த பல நிறங்களைக்காட்டும் பளிங்குபோல, ஆன்மாவும் தனது கருவி களின் இயல்பையே தன்னிடங்காட்டும். இவ்வாறு காட்டுதல் அதன் பொது இயல்பு. அதற்குப் பொது இயல்பு மாத்திர மன்றிச் சிறப்பியல்பும் உண்டு. அவ்வியல்பு கருவிகளோடு சம்பந்தமுடையதன்று. இதை அறிபவன் ஆன்மாவில் விளங் கித் தோன்றும் சிவத்துடன் கலத்தலன்றித் திரும்பவும் கருவி களோடு சேரான். சிறைப்பட்ட நீர் சிறை முறிந்தழி கட லுக்குட் பாய்ந்து கடலோடு கலத்தலன்றித் தான் முன் னின்ற இடத்துக்கு வரமாட்டாததுபோல, அவனும் சிவத்தை விட்டு நீங்கிக் கருவிகளோடுஞ் சேரமாட்டான். கருவிகள் யாவுஞ் சிவ மெனில் சகல நிலையை விட்டுத் திருவடியைக் கூட அவசியமின்று. ஆதலால், சிவம் கலப்பினால் உடலில் உயிர்போல அவற்றில் நிற்கும். கண்ணுக்கும் மற்ற இந்திரியங் களுக்கும் உள்ள வித்தியாசம் மிகப் பெரிது. கண்ணானது தூரத்தி லுள்ள விடயங்களையும் வியாபித்தறியும் ஆற்றலுடை யது. இவ்வாற்றல் அவற்றிற் கின்று. ஆன்மா கண்போலவும் தத்துவங்கள் மற்ற இந்திரியங்கள் போலவும் இருக்கின்றன. அது கருவி ஞானத்தைக் கைவிட்டுச் சிவஞானம் பெறுதல் தன்னொளி யிழந்த கண்ணானது அவ்வொளியையும் அதற்குள் ஒளியாகிய ஆன்மபோதத்தையும் பெறுதல் போலும். ஆத லால், சிவம் ஆன்மாவின் அறிவிற்கறிவாய்த்தோன்றுவதன்றிக் கருவி யறிவுக்குள் ளறிவாய்த் தோன்றாது. சில சமயங்களிற் சிவத்துடன் கலந்தவன் கருவிகளோடு திரும்பவும்கூட நேரிடும். அங்ஙனம் கூடுவதற்குக் காரணம் பண்டைப்பற்று அல்லது வாசனை. வாசனை நீக்கத்திற்கு உபாயம் வருஞ் சூத்திரத்திற் கூறப்படும்.

# ஒன்பதாம் சூத்திரம்.

இச்சூத்திரம் முத்திப் பேற்றுக்கு வேண்டிய சாதனங்கள் செய்யுமாறு கூறுகின்றது. சிவத்தைப் பாசஞானம் பசுஞானம் என்பவற்றால் அறியமுடியாது. திருவடிஞானத்தினால்மாத்திரம் ஆன்மா தன்னறிவில் அதை அறியக்கூடும். அவ்வாறு அறிந்து சிவத்தின் திருவடியை விட்டு விடா திருப்பதே சிவ ஞானியின் நோக்கம். இந்நோக்கத்தின் நிறைவேற்றத்திற்குப் பிரபஞ்சம் பெருந் தடை. அத்தடை நீக்கத்திற்கு உபாயம் பிரபஞ்சம் பேய்த்தேர்போல அநித்தியம் என்னும் நிச்சயம்; இதை விட வேறுமோர் உபாயம் உண்டு. பஞ்சாட்சர மந்திரத்தை விதிப் படி உச்சரித்தலே அவ்வுபாயம்.

பாசஞானமாவது:—வேதம் முதலிய சாஸ்திரங்களினாலும் நிலம் முதல் நாத மிறுதியாயுள்ள தத்துவங்களைப் பற்றியும் உண்டாகும் ஏகதேச ஞானமாம். பசு ஞானமாவது:—ஆன்மா தான் தத்துவங்க ளனைத்தையும் கடந்தது என்னும் அறிவின் மூலமா யுண்டாகும் செருக்கால் தானும் அநாதி முத்தனாகிய சிவனைப் போல பிரமம் என நினைப்பதற்கு ஏதுவாகிய சிவ சமவாத ஞானமாம். பாடாணவாதஞானமும் பேதவாதஞானமும் சிவ சமவாத ஞானத்தைப்போற பசுஞானமாம். பாடாணவாதம் ஆவது:—முத்தியில் ஆன்மாவினறிவு முற்றாய்க் கெடுதல் என்னும் கொள்கை. பேதவாதமாவது:—காரணங்களினால் விரிவடைந்த அறிவானது ஒடுங்கி ஆன்மாவுடனொன்றி நிராதாரமாய் நிற்கும் என்னுங் கொள்கை. மேற்கூறிய மூவகை ஞானங்களுள் பதிஞானம் அல்லது திருவடிஞானம் ஒன்றுமே தற்பிரகாசமும் பரப்பிரகாசமுமாய்ப் பொருள்கள் எல்லாவற்றையும் விளக்கும் ஆற்றல் உடையதாதலினால் அதினால் மாத்திரம் நாம் சிவனை யறியலாம். பசு பாச ஞானங்கள் பிற பொருட்களைக் காட்டும் இயல்புடையனவன்றித் தம்மைக்காட்டும் இயல்புடையனவல்ல. கண் உருவங்களையும் நிறங்களையும் காண்பதன்றித் தன்னையும் காரணங்களையும் காணமாட்டாது.

காரணங்களும் தம்மையும் உயிரையும் காணமாட்டா. அது போல உயிரும் தன்னையும் சிவனையும் காண மாட்டாது. ஆதலால், சிவமே உயிருக்குத் தன்னையும் உயிரையுங் காட்டல் வேண்டும். குருவினருளால் அறியவேண்டிய குறியைப் பற்றி நின்று உலகத்தில் வெறுப்புற்றுச் சுத்தம் மிச்சிரம் அசுத்தம் என்னும் மூவகைப் பிரபஞ்சமும் வெறும்பொய் என்றுணரும் போது சிவந்தோன்றும். அது தோன்றவே அதில் காதலதிக சிக்கும். அக்காதல்வழியாய் அது உட்பிரவேசித்துப் பேரின்ப மருளி ஆன்மாவுடன் கலக்கும்.

நான் உடம்புமல்ல பிரமமுமல்லவென்று கருதி சிவம் சிறிதும் வேற்றுமை தோன்றுகபடி என்னுடன் கலந்து நிற்கையினல், நான் சிவோகம் பாவனைசெய்ய வேண்டுமென்று ஒருவன் எண்ணிச் செய்யும்போது, சிவமவனில் அத்துவிதமாய்த் தோன்றி மலங்களை நீக்கி யவனைச் சுத்தனுக்கும். மாந்திரீகன் கருடோகம் பாவனை செய்கையில் கருடன் அவனில் அத்துவிதமாய்த் தோன்றிச் சர்ப்பந் தீண்டப் பெற்றவனி லிருந்து விஷத்தை நீக்கி அவனைச் சுகப்படுத்துவது வழக்கம். சிவம் வேற்றுமை தோன்றாது உயிரில் அத்துவிதமாய் நிற்றலே வேதாந்த மகா வாக்கியத்தின் பொருள். உயிரும் சிவமும் உடைமையுமுடையானுமாய் நிற்பதைப் பஞ்சாட்சரமோதும்முறையினறிந்து சிவத்தின் திருமேனி பஞ்சாட்சரத்தினலமைந் திருப்பதையுமுணர்ந்து இருதயம், நாபி, புருவநடு என்னும் மூன்றையும் முறையே பூசை ஸ்தானம் ஓமஸ்தானம் தியான ஸ்தானமாகப் பாவித்து அம்மந்திரத்தை ஒருவன் விதிப்படி உச்சரித்தல் வேண்டும். சிவோகம் பாவனை பஞ்சாட்சரமந்திரம் உட்பூசை என்னும் இம்மூன்றினலும் சிவம் உயிரில் விளங்கித்தோன்றும் உட்பூசை செய்யும்போது பிருதுவிமுதல் சத்தி ஈருகிய முப்பத்தைந்து தத்துவங்களும் இருதய கமலத்துக்கு கிழங்கு முதல் பீசம் ஈருகிய அவையவங்கள் என்று பாவித்தல் வேண்டும். இருதயகமலம ஆசனம் அதன்மேற் சத்திமூர்த்தியும சிவன் மூர்த்தி மானுமாய் நிற்பர். இவ்விதம் ஓமமும் தியானமும் செய்யப்படல்வேண்டும். கண்ணுடியை விளக்க விளக்க அதிலுள்ள மாசு நீங்கி ஒளி மிகுமாறுபோல உயிரில் மேற்

கூறியபடி பூசையும் ஓமமும் தியானமுஞ் செய்யச் செய்ய சிவ மகிமை மிகுமாய் விளங்கித் தோன்றும். அங்ஙனந் தோன்ற உயிரிலுள்ள ஆணவமலம் படிப்படியாய்த் தேய்ந்து ஈற்றில் பற்றறக்கழியும். ஆகவே அந்தரியாகம் அல்லது உட்பூசை ஆன்மசுத்திக்குக் காரணமாகலா லது விதிப்படி செய்யப்படல் வேண்டும்.

சிவஞானிக்கு புறப்பூசையுஞ்செய்ய விருப்ப முண்டாகும் போது, அவர் பூமரத்தினின்றுதிர்ந்த பூக்கள், ஆறு குளம் முதலியவற்றிலுள்ள நீர் என்பனவற்றை உபகரணங்களாகப் பிரயோகித்து அதை நிறைவேற்றலாம்.

சிவன் விறகில் அக்கினியும் பாலில் நெய்யும் பழத்திற் சுவையும் போல் அகம் புறம் என்னும் வேற்றுமை யின்றி, எங்கும் ஒப்ப நிறபராதலால் அகப்பூசை செய்தாலும் புறப் பூசை செய்தாலும் அருள் செய்வர் என்பது நிச்சயம். அங்ஙன மாயினும், புறப்பூசையினும் அகப்பூசை முக்கியம். ஏனெனில்: வாதனாமலநீக்கத்திற்கு அதனையன்றி வேறு உபாயமில்லை, அகப் பூசை செய்யச் செய்யச் சிவன் அம்மலத்தைப் பற்றறத் தொலைத்து உயிரைத் தம்மயமாக்கித் தமது பேரானந்தப்பெருஞ் செல்வத்தை அதற்கு அருள்வர்.

---

## பத்தாம் சூத்திரம்.

இச்சூத்திரத்தில் பெத்தநீக்கமும் முத்திப்பேறும் கூறப் படுகின்றன. உயிரானது சிவனுடனொற்றுமைப்பட்டு அவர் பணியில் நிற்கில் யான் எனது என்னும் செருக்கறும். அப் போது அவர் அது செய்யும் புண்ணிய பாவங்களைத் தாம் செய்தனவாக ஏற்றுக்கொள்வர். பிறரதற்குச் செய்யும் நன்மை தீமைகளை அவர் தமக்குச் செய்தனவாக எண்ணுவர். ஆதலால் அது செய்யும் புண்ணிய பாவங்கள் யாவும் அவர் பணியாய்

மாறும். அதற்கு நன்மை தீமை செய்தவர்களுக்கு அந்நன்மை தீமைகள்செய்த அளவினன்றி மிகுதியாகும். இக்காரணத்தினால் கர்ம ஆர்ச்சிப்பும் நுகர்ச்சியும் அதைப் பாதிக்கமாட்டா. வேறு விதமாய்ச் சொல்லுகில் ஆகாமிய வினை அதற்கு வருது. அதுமாத்திரமல்ல. சஞ்சித வினையும் ஆணவ மாயா மலங்களும் அதைவிட்டுநீங்கும். உயிருக்கு யான் எனது என்னும் செருக்கு அற்றாலன்றிச் சிவன் அதனோடு ஒற்றுமைப்பட்டுநிற்றலும், வினை நுகர்ச்சியும் ஆர்ச்சிப்பும் ஒழிதலும் சஞ்சித வினையும் ஆணவமென்னும் மலமும் நீங்குதலும் உண்டாகா. அச்செருக்கறுத்தலுக் கவருடன் சேர்ந்து ஏகனாகி நிற்கும் ஞானமன்றி வேறு உபாயமின்றாகலால் அவ்வகை ஞானம் அத்தியாவசியம்.

இந்திரியங்கள் என்வசப்படாமல் என்னைத் தம் வசப்படுத்தியதற்குக் காரணம், சிவனது ஆணையேயன்றி வேறன்று. இந்திரியமும் நானு மவருடைய உடைமைகளாதலால் நான் அவருடைய திருவடியில் நிலைத்து நிற்கில் அவற்றின் வலி அடங்குமென்று நினைத்து ஒருவனவ்வாறு செய்யி னவற்றின் வசத்தினின்று நீங்குவான். சிவனது திருவடியில நிலைத்து நிற்கையிலும் பயிற்சி வயத்தாலவை குறும்பு செய்யக்கூடும். அவை அங்ஙனம் செய்யும்போது அது இறைவன் செயலென நினைத்துப் பொறுமையாய் இருக்கி லவற்றின் வேகமடங்கும். நீயே எனக்குள் நின்று செய்கின்றாயாகலால் என் புண்ணிய பாவங்களனைத்தும் உன் செயல்களென்றும் நீயே எனக்குட் போலவே பிறருக்குள்ளும் நின்று செய்கின்றாயாகலால் அவர்கள் எனக்குச்செய்யும் நன்மை தீமைகளெல்லாம் உன் செயல்களே என்றும் சொல்லி ஒருவன் அருள் வழி நிற்கில் அஞ்ஞான கன்மமவனைவிட்டுநீங்கும்.

இறைவன்பணியில் நிற்றலால் உண்டாகும் ஞானத்துக்கு ஒப்பான பெரும்பேறு வேறொன்றுமின்று. இவ்வகையான ஞானமில்லாதோர் பல்நாடுகளில் உழன்று திரிந்தும் காடுகளிலும் குகைகளிலும் வாசஞ்செய்தும் பசி தாகம் முதலியவற்றை யடக்கியும் காய சித்தி செய்து நெடுங்காலம் உயிரோ

டிருந்தும் பின்னும் பல அரிய செயல்கள் செய்தும் பயனின்று. ஏனெனில் அச்செயல்கள் பிறவியை நீக்கமாட்டா. இவ்வகையான ஞானமுடையோர் பெருந் தீமைகள் செய்தாலும் அவர்களுக்குப் பிறவி யுண்டாகாது. அக்கினித் தம்பனம் செய்ய வல்லோருக்கு அக்கினி ஒரு தீங்குஞ் செய்யாது. விஷத்தைத் தடுக்கவல்ல மந்திர மருந்துகளுடையோருக்கு விஷம் ஏறாது. அதுபோல மெய்ஞ்ஞானி எவ்வகையான செயல் செய்தாலும் அவனுக்கு இருவினைகள் ஏறமாட்டா. சுழற்றி விடப்பட்ட குயவனது சக்கரமானது அதன் வேகம் ஒழியுமளவும் மெல்ல மெல்லச் சுழல்வதுபோலவும், பெருங்காயமிருந்த பாத்திரம் அழியுமளவும் அவ்வாசனை யுடையதாய் இருப்பதுபோலவும் காயத்தோடு இருக்குமளவும் இருவினைகளின் வாசனை அவனுக்கு இருக்கும். அங்ஙனமாயினும் அவ்வாசனை பிறவிக்கு வித்தாகாது. காயம் நீங்கும்போது அதுவும் அதற்குத் துணையாய் நிற்கும் மும்மலங்களும் முற்றாய் ஒழிந்துபோம்.

---

## பதினொன்றும் சூத்திரம்.

இச்சூத்திரம் முத்திப் பயன் பெறுமாறு கூறுகின்றது. ஆன்மாவுக்கும் சிவனுக்குமுள்ள சம்பந்தம் கண்ணுக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தம்போலும். உயிரின் சகாயமின்றிக் கண் காணமாட்டாததுபோல சிவனது சகாயமின்றி ஆன்மா அறியமாட்டாது. சிவன் அத்துவிதமாய் நின்று தனக்கு உபகாரஞ்செய்வதை அது நன்கறிந்து நிற்கும்போது சிவனது திருவடியில் ஆசை இடையறாது அதற்கு உண்டாகும். அங்ஙனம் உண்டாக அதற்குச் சிவானுபூதிவரும். இதுவே சீவன் முத்தி நிலை. சீவன் முத்தராவார் சிவத்தைப் பார்ப்பதன்றிப் பிரபஞ்சத்தைப் பாரார். பிரபஞ்சத்தைப்பார்ப்பதற்கு வேண்டிய ஞானங்கள் பிரத்தியட்சம் அனுமானம் உரை என்பனவாம்; அவை எல்லாம் சுட்டறிவின் பேதங்கள். கேட்டலி

ஞல் வருஞ் சாத்திர ஞானம் நால்வகை வாக்குகளினல் வரும் விந்து ஞானம் சிந்தித்துத் தெளிவதினல் வரும ஞானம் ஆகிய இவைகள் பாவனைஞானமன்றி அனுபூதிஞானமன்று. ஆதலால் சிவஞானமென்று சிறப்பித்துச் சொல்லப்படத்தக்கது அனுபூதி ஞானமேயாம். அனுபூதி ஞான முடையோரே சிவன் முத்தர்.

உருவ சிவசமவாதிகள் முத்தியிலும் உடம்பு உண்டு என்றும் அவ்வுடம்பு சுத்த மங்கள திவ்விய உடம்பென்றுங் கூறுவர். அவர்கள் இங்ஙனங் கூறுவதற்கு நியாய மென்னவெனில் உடம்பானது அநாதியாய் உயிரைப்பற்றி நீரோட்டம்போலத் தொடர்ச்சியாய் வருதலினல் அது இடையில் ஒழிந்துபோம் என்று சொல்வது பொருத்த மன்று என்பதாம். அவர்கள் கொள்கை சரியன்று முத்தியிலும உடம்பு இருக்கில் அதற்குக் காரண மாகிய மாயையும் அதற்கு வேண்டிய உணவு செயல்களுக்கு ஏதுவாகிய கன்மமும் அதனை இயைவிக்கும் ஆணவமும் இருக்கவேண்டும். முத்தியிலும் இவை எல்லாம் இருக்குமாகில் முத்தியென்று சொல்லப்படுவது போலியாய் முடியும். சூக்கும உடம்பி லிருந்து தோன்றும் தூல உடம்பானது காரியமாயும் அநாதியாகிய மலநோய்க்கு மருந்தாயும் இருப்பதினல் மலம் நீங்கும்போது அதுவும் நீங்கு மென்பது நிச்சயம். சுத்த மங்களதிவ்விய உடம்பானது பதமுத்திக் குரிய தன்றிப் பர முத்திக் குரிய தன்று

சிவஞானியாவான் மெய்ஞ்ஞானமடைந்தபின் அவனுக்குச் சிவம் பிரகாசிக்கும். அப்பொழுது அவன் சிவன்முத்தனவன். அவனிலுள்ள ஆணவமலமானது தேற்றம்பொடி கலந்த நீரையும், சூரியன்முன் இருளையும் மருந்திஞற் றடுக்கப்பட்ட விஷத்தையும்போலத் தன் சத்தி கெட்டு நின்று, தேகம் மரிக்கையில் வேறு பிறவிக்கு வித்தாத லின்றி ஆன்மாவை விட்டு நீங்கி முற்றுமழிந்துபோம்.

ஆட்சேபம் ஆணவமலமானது ஆன்மாவுடன் அநாதியே சகசமா யிருப்பதினல், அது ஒருபோதும அழியாது. அது அழியுமெனில் ஆன்மாவு மதனேடு அழியவேண்டும்.

சமாதானம் செம்புடன் சகசமாயிருக்குங் களிம்பானது இரச குளிகையினால் நீங்கி ஒழிந்துபோகச் செம்பு அழியா திருப்பதுபோல, ஆன்மாவுடன் சகசமாய்நிற்கும் ஆணவமலம் மெய்ஞ்ஞானத்தினாற் கெட்டொழிய, ஆன்மா அழிவின்றியிருக்கும். மெய்ஞ்ஞானம் பிறந்தவுடன் ஆணவமலம் முற்றாயழியும் அங்ஙன மழிவதே முத்தி யெனல் பொருந்தாது. சூரிய ஒளியோடு கண்ணொளி சேர்ந்தாலன்றி இருள்நீங்காதவாறுபோல, மெய்ஞ்ஞானம் பிறந்தும், சிவம் பிரகாசித்துத் திருவடியை ஆன்மா சேர்ந்தாலன்றி ஆணவமலமதனைவிட்டுமுற்றாய்நீங்காது. அரிசியுடன் சகசமாயுள்ள முளை தவிடு உமிகள் அதனைவிட்டு நீங்க அது தனித்திருக்கையில், அதிலிருந்து வேறு நெல் தோன்றாததுபோல; ஆன்மாவி னுள்ள மும்மலமும் அதனை விட்டுப் பற்றறக் கழிந்துபோக ஆன்மா பிறவிக்கு வித்தின்றி இருக்கும். மேலும் அவை முத்தான்மாக்களை விட்டு நீங்கிப் பெத்தான்மாக்களோடு இருப்பதினால், அவை நித்தப் பொருட்கள் என்பது மிழுக்கன்று. பெத்த நிலையிற் சிவன் ஆன்மாவோடு சேர்ந்து அத்துவிதமாய் நிற்றல்போல முத்தியிலுங் நிற்பர், அவரங்ஙனம் நிற்பதைப்பக்குவமுடையோரன்றி ஏனையோர் பார்க்கமாட்டார், பக்குவமுடையோர் சிவனருளா மருட்கண்ணினா லதனைப் பார்ப்பர்.

முத்தியைப் பற்றிய போலிக் கொள்கைகள் பலவுள. அவையாவன:

1. சிவன் பக்குவான்மாக்களுக்கு அருட்கண்கொடுத்துத் தோன்றுவரெனல் சரியல்ல. அவர் நிர்விகாரியாய்நிற்க, அவை யருட்கண்பெற்று வழிப்போக்கர் மர நிழலைச் சேர்வதுபோலத் தாமே யவரைச் சேரும்.

2. ஆன்மா அழிந்து சிவனோடுகூடி அவரடியிலொன்றாகும்.

3. ஆன்மா தானழியாது சிவனோடுகூடி ஒன்றாகும்.

4. சிவனோடு கூடியபின் னழியும்.

5. அழிவதேமுத்தி.

6. நீருடன் நீர் சேர்வதுபோல ஆன்மா சிவனுடன் சேர்ந்தொன்றாகும்.

7. களிம்பு நீங்கியபின் செம்பு பொன்னைப் பொன்னுடனென்றாவதுபோல மலம் நீங்கியபின் ஆன்மா சிவனைச் சிவனுடன் சேரும்.

8. சிவனுமான்மாவுஞ் சித்துப்பொருளாவதினால் முத்தியிலிருபொருளுஞ் சமமாயொன்றாகும்.

மறுப்பு.

1. மாஙிழலைச்சிவனுக்கு ஒப்பிடுதல்சரியன்று. ஏனெனில் அன்னனம் செய்தல் சுதந்திரம் சிவனுக் கல்ல உயிருக் குரியதென்று காட்டும.

2. ஆன்மா தானழிந்தபின் சிவனுடன் சேரமாட்டாது.

3. அழியாமற்கூடினுமொன்றாகாது.

4. அழிந்தால் முத்திபெற்றதெனப்படுவதொன்றில்லை.

5. இது ஆன்மா நித்தப்பொருளென்பதற்கு விரோதம்.

6. நீரும் நீரும்போல ஆன்மாவுஞ் சிவனுஞ் சமமல்ல.

7. சிவனைப் பொன்னுக்கு ஒப்பிடுதல் சரியன்று செம்பைப் பொன்னுக்கு மாற்றல் பொன்னிற் கில்லை அவ்வாற்ற லிரசகுளிகைக்கே உரியதாகலால், சிவனை யதற்கே ஒப்பிடுதல் நியாயம். முத்தான்மாவிற்குச் சிவானுபவ மொன்றே யுரியது; பஞ்சகிருத்தியமோவெனில் சிவனொருவருக்கேயுரியன.

8. ஆன்மாவும் சிவனும் சித்துப்பொருளாயினும், ஆன்மா சிவனுக்குச் சமமானதல்ல. ஆன்மா அருளைச்சேருஞ்சித்து, சிவனருளளிக்குஞ்சித்து, ஆன்மா போக மோட்சங்களை யடையுஞ்சித்து; சிவனவற்றை யதற் கடைவிக்கும் சித்து; ஆன்மா சிவனாலறிவிக்கப்படுஞ்சித்து; சிவனியல்பாகவே யறியும் சித்து. ஆதலால், ஆன்மா சிவனுடன் சேர்ந்தாலு மவருக்குச்சமமாகாது. பெத்தநிலையிற் புத்தியு மான்மாவு மொன்றோ டொன்று சேர்ந்திருக்கினும்; புத்தி வேறு ஆன்மா வேறு. அதுபோல முத்தியிலான்மாவும் சிவனு மொன்றுசேர்ந் திருக்கினும் ஆன்மா வேறு சிவன் வேறு. ஆன்மா தூல சித்து, சிவன் சூக்கும சித்து.

காந்தம் விகாரமின்றி நின்று இரும்பைத் தன்னிடமிழுப்பதுபோலச் சிவனு மான்மாவைத் தன்னிடமிழுப்பினும் நிர்விகாரியா யிருப்பர். அக்கினி இரும்பை யழியாமல் அதனுடன் சேர்ந்திருக்குங் கறையை யழித்து இரும்பைத் தன்வண்ணமாக்குவதுபோலச் சிவனும் ஆன்மாவை யழியாமல் அதனோடு சேர்ந்திருக்கும் மலத்தை யழித்தான்மாவைத் தம்வண்ணமாக்கியருள்வர். நீருடன்சேர்ந்த உப்புத் தன் சுவையை நீரிற்பதித்தத் தனைக் கொப்பாக்குவதுபோலச் சிவனும் தமது எண்குணங்களையு மான்மாவிற் பதித்து அதைத் தமக்கு ஒப்பாக்கியருள்வர். இரசகுளிகை செம்பைப் பொன்னாக்கித் தானதனில் வேறாய் நிற்பதுபோலச் சிவனு மான்மாவைத் தம்வண்ணமாக்கித் தாமதனில் வேறாய் நிற்பர். கருப்பஞ்சாறு தேன் பால் முக்கனிச்சாறு அமுது கற்கண்டு வெல்லக்கட்டி என்னும் சுவைப்பொருட்களெல்லாங் கலந்தபின் னுண்டாகும் சுவை இத்தன்மைத்தென்று பிரித்தறிய முடியாததுபோலச் சிவனு மான்மாவுடன் சேர்ந்து இத்தன்மையினரென்று பிரித்தறிய முடியாதபடி ஆநந்தசொரூபமாய்நிற்பர்.

## பன்னிரண்டாம் சூத்திரம்.

இச்சூத்திரம் சீவன்முத்தி நிலையிற் காணப்படு மியல்பு கூறுகின்றது. சீவன்முத்தரும் மும்மலங்களுந் தம்மைவிட்டு நீங்கியபின், அவை மீளவுந் தம்மைப் பந்திக்காதபடி தாங் கையாடவேண்டிய உபாயங்களெல்லாவற்றையுங் கையாடுவர். அவ்வுபாயங்களாவன:-

1. மெய்யன்பர் சகவாசம்.

2. அவர் திருவேடத்தையும் சிவலிங்கத்தையும் சிவனெனப்பாவித்து வழிபடுதல்.

3. அவர் பெருமையையும் மற்றையவர் சிறுமையையும் அறியு மறிவும் அவ்வறிவிற்கேற்ப நடத்தலும்,

கடவுளுக்கும் அவரடியவர்களுக்கும் மற்றை உயிர்களுக்கும் அன்பில்லாதவர்களுடன் செய்யும் சகவாசம் பிறப்பிற்கு வித்தாகலால், அவர்களை விட்டு, மெய்யடியாருடன் சேர்ந்து, அவர்களுக்குச் செய்யவேண்டிய சேவை செய்தல் சீவன்முத்தரது செயலாம.

பாசபந்தமுடையவரது சகவாசத்தை விடும்பொருட்டு மெய்யன்பரைச் சிவனெனப் பாவித்து வழிபடல வேண்டும். அவர்கள் வேடத்தினலும் செயலினலும் பாவனையினலுந் தன்மையினலும சிவனே யாவர். சரியையாளருக்குச் சிவன் சிவலிங்க முதலிய திருமேனிகளில் மறைந்து நின்று அருள் செய்வர். கிரியையாளருக்கும் யோகிகளுக்கும விறகு கட்டையைக் கடைகையிற்றோன்ற மக்கினிபோனறும் கறக்கையிற்றோன்றும் பசுப்பால் போன்றுந் தோன்றி யருள் செய்வர். ஞானிகளுக்கு கன்றை நினைந்த பசுவின் முலைப்பால்போலப் பேரன்பினல் அன்பே தாமாய் வெளிப்பட் டருள்செய்வர். ஆதலால், ஞானிகள் மேறசொல்லிய திருமேனிகளை யேகதேசமாய்ப்பாவியாது, அவற்றை யன்பினல வழிபடுவர். ஞானிகள் யோகிகள் கிரியையாளர் சரியை யாளர் என்போருக்கு முறையே சரியை முதலிய நான்கும் மூன்றும் இரண்டும் ஒன்றுமுரியன. ஞான குருவே மற்றைக் குருக்களனைவரிலும் மேலானவ ராகலால், மேற்கூறிய தாபர சங்கமங்களாகிய திருமேனிகளனைத்து மக் குரு வடிவே யென் றறிந்து அவரை வழிபட வேண்டும்.

வேதாகமங்கள் கலைக்கியானஙகள் முதலியவற்றின் ஞானமும் மூக்கால ஞானமும் அணிமா முதலிய அட்டமா சித்திகளுக் குரிய ஞானமும மணி மந்திர மருந்துகளினுளவாகும் திருவடி ஞானமோ வெனில் குரு வருளால் மாத்திரம் வரும். மேற் கூறிய ஏனை ஞானங்களு மவ ரருளால் வரு மாகலா லவரை சிவனெனப் பாவித்து வழிபடவேண்டும். அவரே பாப்பிரமமும பரமசிவனும் மெஞ்ஞானிகளும் சிவ மூர்த்தங்களுமென் றறிந்து அவரை யன்பினல் ஒருவன் வழிபடின, சிவனவரை யதிஷ்டித்துப் பரிசித்தல் நினைத்தல் பார்த்தலென்னும் மூன்றினு மவனைத் தம் வண்ண மாக்கி யருள்வர்.

## அரும்பத விளக்கம்.

### முதலாஞ் சூத்திரம்.

பரபட்சம் - அந்நியபக்கம்
அதாவது மற்றைச் சமயங்களை ப்பற்றிக் கூறும் பிரிவு
சுபட்சம் - சொந்தப்பக்கம்
அதாவது சொந்தச்சமயத்தை ப்பற்றிக் கூறும்பிரிவு
லோகாயதம் - கடவுளும் ஆன் மாவும் மறுமையு மில்லையென் று கூறுஞ் சமயம்
நாசம் - அழிதல
பிருதுவி - மண்
அப்பு - நீர்
தேயு - நெருப்பு
வாயு - காற்று
பிரத்தியட்சம் - கண்ணுற்பார்த் தல் விடயங்களைநேரேயறிதல்
சரம் - இயங்கும் பொருள்
அசரம் - இயங்காப் பொருள்
கணம் - நுட்பகாலம்
கோடு - கொம்பு
அநிர்வசனம் - இத்தன்மையதெ ன்று சொல்லப்படக்கூடாதது
கடம் - குடம்
படம் - வஸ்திரம்
சூக்குமம் - நுண்மை
மிகை - குற்றம் மிகுதி
எஞ்சி நிற்றல் - மிஞ்சி நிற்றல் அ ழியாது நிற்றல்
சர்வசங்கார காலம் - உலகமெல் லா மழியுங்காலம
சந்நிதி - சமுகம்
தனு - சரீரம
கரணம - கருவி

அத்துவா - ஆன்மாக்கள் முத்தி யடைதற்குக்காரணமாகியவழி
கலை - வித்தியா தத்துவத்திலொ ன்று
வாக்குமனதீதர் - வாக்கிற்கும் ம னதிற்கு மெட்டாதவர்
இழுக்கு - குற்றம
சாக்கிரம் - விழிப்பு
சுழுத்தி - சொப்பன மின்றியுற ங்கு முறக்கம்
அவஸ்தை - உயிரின துநிலை
மலபரிபாகம் - மலமுதிர்ச்சி
துடக்குறுதல் - சிக்குப்படுதல்
சங்கற்பம - எண்ணம, நியமம
விகாரி - மாறுதலடைபவன்
அந்தக்கரணம் - உட்கருவி
காலுதல - புறப்படுத்தல்
பெத்தகாலம் - பாசத்தோடுகட்ட ப்பட்டிருக்குங்காலம்
திதி - காத்தல்
திரோபவம் - மறைத்தல
பாசபந்தம் - பாசத்தோடு கட்டு ப்பட்டிருத்தல்
பசு - உயிர்
பரதந்திரம் - சுதந்திர மின்மை
சுதந்திரம் - உரிமை, சுயஇஷ்டம்
அரு - உருவமில்லாதது
மேனி - சரீரம்
ஆற்றல் - வல்லமை
அர்த்தநாரீசுரவடிவம் - சிவனது வடிவத்திற் பாதி பார்வதி தே வி வடிவம் பாதிசிவன்வடிவம்
விச்சுவாதிகர் - உலகத்திலும் பெ ரியவர்

விச்சுவகாரணர் - உலகத்திற்குக் காரணர்
விச்சுவத்திற்கந்தரியாமி - உலகத்திற்குள் ளிருந்து நியமிப்பவர்
விச்சுவரூபி - உலகத்தைத் தமக்குத் தேகமாயுடையவர்
கண்புதைத்தல் - கண்ணை மூடுதல்
பிரளயாகலர் - பிரளய காலத்தில முத்தியடைபவர்
சகலர் - மும்மலமுடையவர்
பசுவர்க்கம் - உயிர்க்கூட்டம
பஞ்சகிருத்தியம் - ஐந்துதொழில் அவையாவன படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அநுக்கிரகித்தல்
ஊன நடனம் - குறைபாடுள்ள கூத்து
உபசாரம் - முகமன்
திரோதானசத்தி - மறைக்கும் வல்லமை
அதிஷ்டித்தல் - வாயிலாகக்கொள்ளுதல்
பஞ்சமந்திரம் - ஈசானம் தற்புருடம் முதலிய ஐந்து மந்திரம
பஞ்சகர்த்தாக்கள் - பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னு மைந்து கடவுளர்
பேதங்கள் - வித்தியாசங்கள்

## இரண்டாஞ்சூத்திரம்

ஒடுக்கம் - அழிவு
பதி - கடவுள்
அத்துவிதம் - இரண்டன்மை
பரமாத்மா - கடவுள்
இருவினை - புண்ணிய பாவங்கள்
மீள மீள - திரும்பத்திரும்ப
ஆணை - கட்டளை
பழவினை - முற்பிறப்பிற் செய்த கன்மம்
சடம் - தேகம்
சித்து - ஆன்மா
கரு - கருப்பம்
பிரவாகவநாதி - வெள்ளம் போலவநாதி. அநாதியே உடலுங் கன்மமு மொன்றன்பின் ஒன்றாய் வருதல்
அருள் - கிருபை
சற்பாத்திரம் - தானம்வாங்குவதற்குப் பாத்திரமுள்ளவர்
முற்றறிவு - எல்லாமறியுமறிவு
வரம்பிலாற்றல் - எல்லையற்ற வல்லமை
ஈட்டுதல் - சேர்த்தல் சம்பாதித்தல்
நுகர்தல் - புசித்தல்
சீலம் - நற்குணம்
தானம் - கொடை
துறவு - பிறர்மனை நயத்தல முதலியவற்றை விடுதல்
வந்தித்தல் - வந்தனஞ் செய்தல் இங்கே சொல்லப்படும் வணங்கலும் வந்தித்தலும் மூத்தோருக்குச் செய்யப்படுவன
பார்ப்பார் - பிராமணர்
சுவர்க்கம் - தேவர்கள்வாசஞ்செய்யுமுலகம்
அமைச்சர் - மந்திரிமார்
திரிகரணங்கள் - மனம்வாக்குக்காயமென்னும் மூன்று கருவிகள்
வீடுபேறு - முத்தியடைதல்
வைகுவது - இருப்பது
அகத்தே - உள்ளே

தண்டீசநாயனார் சரித்திரத்தையும் தக்கன் சரித்திரத்தையும் முறையே பெரியபுராணத்திலுங் கந்தபுராணத்திலுங் காண்க.

தூலவுடம்பு - சரீரம், தேகம்
சூக்குமவுடம்பு - சரீரத்திற் குள்ளிருக்கும் நுண்ணியதேகம்
பரகாயப்பிரவேசம் - வேறு தேகத்திற்குட் பிரவேசித்தல்
நிகழ்கை - சம்பவிக்கை
நால்வகைத்தோற்றம் அண்டசம் (முட்டையிற்பிறப்பன) சுவேதசம் (வேர்வையிற் பிறப்பன) உற்பிச்சம் (கிழங்கு கொடிமுதலியவற்றிற் பிறப்பன)
சராயுசம்-கருப்பையிற்பிறப்பன
எழுவகைப்பிறப்பு-தேவர் மனிதர் பறவைவிலங்கு ஊர்வனநீர் வாழ்வன தாவரம் என்பன
ஊர்வன 11 இலட்சம் நீர்வாழ்வன 10 இலட்சம் தேவர் 14 இலட்சம் மனிதர் 9 இலட்சம் பறவை 10 இலட்சம் தாவரம் 20 இலட்சம் விலங்கு 10 இலட்சம் 84 இலட்சம் யோனிபேதம்
யோனி-ஆண் அல்லது பெண்குறி
விலங்கு - மிருகம்
தாவரம் - மரம்
சுருதி - வேதம்
யுத்தி - புத்தி
வியத்தமாகுதல்- வெளிப்படுதல்
அவ்வியத்தம்-வெளிப்படாதிருத்(தல்
கோகனதம் - தாமரை
சுத்ததத்துவங்கள் ஐந்து - அவையாவன சிவம் சத்தி சாதாக்கியம் ஈசுரம் சுத்தவித்தை
மிச்சிர தத்துவங்கள்ஏழு அவையாவன. காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் குணம் அவை வித்தியா தத்துவங்களென்றுஞ் சொல்லப்படும்
அசுத்த தத்துவங்கள் 24 அவையாவன- மனம் புத்தி சித்தம் அகங்கார மென்னும் அந்தக்கரணங்கள்
மெய் வாய் கண் மூக்குச் செவியெனனுமஞானேந்திரியங்கள்
வாக்கு பாதம் பாணி பாயுருஉபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள்
பரிசம் இரசம் ரூபம் கந்தம் சத்தமென்னுந் தன் மாத்திரைகள் அல்லது சூக்கும பூதங்கள்
பிருதுவி அப்பு தேயு வாயு என்னும் தூலபூதங்கள்
வித்தியாதத்துவங்கள் - வித்தைக்கு அல்லது அறிவிற்குரிய தத்துவங்கள்
ஞானேந்திரிங்கள்-அறிவிற்குரிய கருவிகள்
கன்மேந்திரியங்கள் - கிரியைக்குரிய கருவிகள்.
மிச்சிரம் - கலப்பு.
பிரேரகாண்டம் - மற்றைத் தத்துவங்களைத் தொழிற் படுத்தலுக்குவேண்டியதத்துவக் கூட்டம்
போசயித்திருகாண்டம் . போகத்திற்கு ஏதுவாகிய தத்துவக் கூட்டம்
போக்கியகாண்டம் - அனுபவிக்கப்படுந் தத்துவக்கூட்டம்
போத்திருத்துவம் . போகம் நுகருங்கர்த்தாவாதல்
ஏகதேசம் - ஓரிடம்
அவிச்சை - அஞ்ஞானம்
கேவலாவஸ்தை சகலாவஸ்தை சுத்தாவஸ்தைஎன்பனசான்காஞ் சூத்திரத்தில் விளக்கப்பட் டுள்ளன
விரவிநிற்கும் - கலந்துநிற்கும்
பேதமை - மடமை
யாக்கை - தேகம்

### மூன்றாஞ் சூத்திரம்.

சூனியம் - இல்பொருள்

துரியாதீதத்திலும் அறிவுண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனில், உறங்கி விழித்தபின் சுகமா யுறங்கினே னென்னு மனுபவம் சாக்கிரம்முதற்றுரியாதீதம் ஈறாய பஞ்சாவத்தையும் நான்காம் சூத்திரதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

நனவு - சாக்கிரம், விழிப்பாயிருக்குந்நிலை

### நான்காம் சூத்திரம்.

சவிகற்ப உணர்வு - பெயர் முதலிய ஐந்தையு மொரு பொருளில் நன்கு அறியு மறிவு சவிகற்ப உணர்வெனப்படும்

நிருவிகற்ப அறிவு - பொரு ளுண்மைமாத்திர மறியு மறிவு நிருவிகற்ப உணர்வெனப்படும்

பெயர் முதலிய ஐந்தாவன பெயர் சாதி குணம் கன்மம் பொருள். இது ஒரு பொருள் என்னுமறிவு நிருவிகற்ப அறிவும் இது பசு என்பது சவிகற்ப அறிவுமென்க. பசு பெயர், பசுச்சாதி பசுவின்குணம் பசுவின்தொழில் பசு என்னும் பொருள். இது பசு என அறிகையில் இவையைந்தும் நமக்குப் புலப்படுகின்றன.

அம்சம் - பங்கு

பௌராணிகர் - புராணங் களைக் கைக்கொள்பவர்

பாதஞ்சலர் - பதஞ்சலி முனிவராலியற்றப்பட்ட யோக சாஸ்திரத்தைக்கைக்கொள்பவர்

அவிகாரி - மாறுதலில்லாதது

வைசேடிகர் - கணாத முனிவராலியற்றப்பட்ட வைசேடிக சாஸ்திரத்தைக் கைக்கொள்பவர்

பாஞ்சராத்திரிகள் - பாஞ்ச ராத்திராகமத்தைக் கைக்கொள்பவர்கள். இவர்கள் வைஷ்ணவர் பாஞ்ச ராத்திரம் வைஷ்ணவ ஆகமங்களில் ஒன்று அவர்கள் விஷ்ணுவினால் ஐந்துஇராத்திரியிற் கூறப்பட்ட படியால் அப்பெயர் வந்ததென்பர்

நவத்துவாரம் - ஒன்பது துவாரம

மிருதிநூலார் - மனு மிருதி முதலியவற்றைக் கைக்கொள்பவர்

குணி-குணத்தையுடையபொருள்

ஐக்கியவாதிகள் - முத்தியில் ஆன்மாவுஞ் சிவனுமொன்றாகுமென்பவர்கள்.

பஞ்சகோசமாவன - பஞ்ச சரீரங்களாம. அவையாவன காரண சரீரங் கஞ்சுக சரீரங் குண சரீரம சூக்கும சரீரம தூலசரீரம

அந்தப்புரம - ஸ்திரி களுக் குரிய இடம

சாக்கிராவத்தைக்குரிய முப்பத்தைந்து தத்துவங்களாவன ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கன்மேந்திரியங்கள். பத்துவாயுக்கள், பத்து விடயங்கள், நான்கு அந்தக் கரணங்கள், ஒன்று புருடன் சொப்பனுவத்தைக் குரிய இருபத் தைந்து தத்துவங்கள், பத்து வாயுக்கள், பத்து விடயங்கள், நான்கு அந்தக்கரணங்கள் ஒன்று புருடன், சுழுத்தியவத்தைக்குரிய மூன்று தத்துவங்கள் பிராணவாயு சித்தம் புருடன் துரியாவத்தைக் குரிய இரண்டு தத்துவங்கள் சித்தம புருடன் துரியாதீத அவத்தைக்குரிய ஒரு தத்துவம புருடன்

"சாக்கிரமா நுதலினிந்திரியம்பத்தும்
சத்தாதிவசனாதிவாயுபத்தும்
நீக்கமிலந்தக்கரணம்புருடனோடு
நின்றதுமுப்பானைந்து நிலவுங்கண்டத்
தாக்கியசொப்பனமதனில்வாயுபத்து
மடுத்தனசத்தாதிவசனாதியாக
னோக்குகரணம்புருடனேகூட
னாவல்வரிருபத்தைந்தா னண்ணியோரே.

சுழுத்தியிதயந்தன்னிற்பிராணஞ்சித்தஞ்
சொல்லரியபுருடனுடன்மூன்றதாகும்
வழுத்தியநாபியிற்றுரியம்பிராணனோடு
மன்னுபுருடனுங்கூடவயங்காநிற்கும்
அழுத்திடுமூலந்தன்னிற்றுரியாதீத
மதனிடையேபுருடனொன்றியமருஞானம்
பழுத்திடும்பக்குவாறிவாவத்தையைத்திற்
பாங்குபெறக்கருவிநிற்கும்பரிசுதானே."

தாயுமானவர் பாடல்

வாசனை - பற்று, சார்பு

ஆறும் சூத்திரம்.

சித்து - அறிவது
சத்து - முக்காலத்துமுள்ளது
பௌதிகங்கள் - பூதங்களாலுண்டானவைகள்
பாவனை - தியானம்
ஏகான்மவாதிகள் - ஆன்மா ஒன்றென்னுங் கொள்கையுடையவர்கள்

ஏழாம் சூத்திரம்

சிவாத்துவிதசைவர் - சிவமும் உயிருமொன்றென்னும் சைவர்

எட்டாம் சூத்திரம்.

சத்திநிபாதம் - சத்தி பதிதல்
வர்க்கம் - கூட்டம்
சாதாரதீட்சை - மானுட குருவையாதாரமாய்க்கொண்டுசெய்யுந் தீட்சை
நிராதாரதீட்சை - ஆதாரமின்றிச் செய்யுந் தீட்சை
சாதகர்-அப்பியாசம் செய்பவர் சீஷர்
ஆசாரியர் - குருமார்
மலபரிபாகம் - மலமுதிர்ச்சி
பஞ்சகந்தங்கள் - உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமென்பன பஞ்சகந்தங்களுமழிதல் புத்தரது முத்தி
அட்டகுணம் - அநந்தஞானம்முதலிய எண்குணங்கள் குறளுரை பார்க்க. அட்டகுணமடைதல சமணரது முத்தி
அறிவுகெடுதல் பாடாணவாதிகளது முத்தி
பிரகிருதி புருஷவிவேகம் - பிரகிருதிக்கும் புருஷனுக்குமுள்ள வேறுபாடறிதல் இது சாங்கியரதுமுத்தி

சிவசமவாதம் - முத்தியிற்சிவமும் உயிரும் சமம் என்னுங்கொள்கை. இது சிவசமவாதிகளது முத்தி
பூர்வ பட்சம் - தள்ளப்படவேண்டிய கொள்கை
சித்தாந்தம் - ஏற்றற்பாலதெனத் துணிந்த துணிவு
வேதாங்கம் - வேதப்பகுதி வேதாங்கமாறு. அவை சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடமென்பன
சாலோக பதவி - சிவலோகத்தில் இருத்தல
சாமீபபதவி - சிவனுக்குச் சமீபத்திலிருத்தல்
சாரூபபதவி - சிவசொரூப மடைதல
சாயுச்சியம் - சிவத்துடனிரண்டறக் கலத்தல்
வியாபக வியாப் பியங்கள் - வியாபித்துநிற்பதும் வியாபிக்கப்பட்டுநிற்பனவும் பதி வியாபகம் பசுவும் பாசமும் வியாப்பியங்கள்
பசு கரணங்கள் - உயிருக் குரிய கருவிகள்
சிவ கரணங்கள் - சிவனுக் குரிய கருவிகள்
நிட்டை - சமாதி
ஆன்மபோதம் - ஆன்மாவினறிவு

ஒன்பதாம்சூத்திரம்.

நிராதாரம் - ஆதார மில்லாதது
தற்பிரகாசம் - தன்னைவிளக்குதல்
பரப்பிரகாசம் - பிற பொருட்களை விளக்குதல்
குறி - அடையாளம்
மிச்சிரம - கலப்பு
சிவோகம்பாவனை - நான் சிவனென்று தியானித்தல
கருடோகம்பாவனை - நான் கருடனென்று தியானித்தல்
மாந்திரீகன் - மந்திரத்தினல்விஷம் நீக்குபவன்
மூர்த்தி - தேகம்
மூர்த்திமான் - தேகத்தி லிருப்பவர் சிவன் அண்டத்திலிருக்குமாறுபோலப் பிண்டத்திலுமிருக்கின்றனர்

பத்தாம் சூத்திரம்.

ஆர்ச்சிப்பு - சம்பாதித்தல்

பதினொராம் சூத்திரம்

சிவானுபூதி - சிவனை யறியு மறிவு
உரை - ஆன்றோர் வாக்கு
பாவனைஞானம் - தியானத்தினல் வரும் ஞானம்
உருவ சிவ சம வாதிகள் - முத்தியிலும உடம்பு உண்டென்னுங் கொள்கையுடையோர்
சகசம் - இயற்கை
பெத்தான்மாக்கள் - பாச பந்துமுள்ள ஆன்மாக்கள்.

# பிழைதிருத்தம்

| பக்கம். | பிழை. | திருத்தம். |
|---|---|---|
| 12 | இல்தாதவர் | இல்லாதவர் |
| 12 | அக்சினி | அக்கினி |
| 13 | உருவத்திரு | உருவத் |
| 14 | யென்றே | யொன்றே |
| 17 | சீவான்பா | சீவான்மா |
| 30 | கிவபேதம் | சிவபேதம் |
| 30 | கழிய்பு | களிம்பு |
| 30 | அவற்றை விலக்குதல் | அவற்றைவிளக்குதல் |
| 33 | தேகத்திலுள் | தேகத்தினுள் |
| 34 | உயிரிலக்கணாக | உயிரிலக்கணங் |
| 36 | எப்மொழுதும் | எப்பொழுதும் |
| 45 | சூக்குமசித்தென்றுத | சூக்குமசித்தென்றும் |
| 45 | சித்தென்றுத் | சித்தென்றும் |
| 58 | ஞானத்குக்கு | ஞானத்துக்கு |
| 59 | ஏருறு | ஏறுது |
| 62 | கழிம்பு | களிம்பு |
| 65 | பிருதவி | பிருதுவி |
| [illegible] | மீச்சிர | மிச்சிர |
| 68 | பொராணிகர | பௌராணிகர் |
| 68 | குக்குமசரீரம் | சூக்குமசரீரம் |